Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு
வார மலர்




மலர் 12 சௌமிய சித்திரை 8 ஸபர் 14 (21-4-70) செவ்வாய்க்கிழமை இதழ் — 69

# "உரிமைகள் பெறத் தவறினால் 2 வருடத்தில் வெளியேறுவோம்"

## முற்றவெளிக் கூட்டத்தில் ஜி. ஜி. பேச்சு

யாழ்ப்பாணம், செவ்

தமிழ்மக்களின் இழந்த உரிமைகள் எதனையும் தமிழரசுக் கட்சியினால் பெற்றுக்கொடுக்க முடியாது. தமிழ்மக்கள் இழந்த உரிமைகளையும் புதிய உரிமைகளையும் தமிழ்காங்கிரஸ் மட்டும்தான் பெற்றுக்கொடுக்க முடியும். இவற்றை தமிழ்க்காங்கிரஸ் பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் அடுத்த ஆட்சிமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 2 வருட காலத்துள் தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகள் பதவிதுறந்துவெளியேறத் தயாராய் இருப்பார்கள்.

இவ்வாறு த கா தலைவரும், யாழ்ப்பாணம்முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு ஜி ஜி பொன்னம்பலம் நேற்றிரவு கோட்டைமைதானத்தில் நடந்த காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் கூறினார்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஏ. தியாகராசா இக்கூட்டத்தில்பேசுகையில்,

"கடந்த பல வருடங்களாக தமிழ் மக்களின் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு எதுவுமேசெய்யவில்லை. தமிழ் மக்களின் பொருளாதார வளத்தை வளப்படுத்தவே நான் கல்லூரி அதிபர் பதவியை துறந்து அரசியலில் இறங்கியுள்ளேன்." என்றார்.

திரு. ஆர். எம். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஊர்வலம் கூட்டமைதானத்திற்கு வருமுன்னரே ஆரம்பமாகியது.

திரு. தியாகராசா பேசி முடிந்ததும் வேலையற்ற பட்டதாரிகள்சங்கத்தலைவர் திரு. எஸ். ஆர். தேவதாசன் "கல்லூரி அதிபருக்கு ஜே" என்றுகோஷமிட்டார். அப்போது முன்னாள் உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினரும், முன்னாள் ஆட்சிமன்ற உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் "கல்லூரி அதிபருக்கு மட்டும் ஜே அல்ல வட்டுக்கோட்டை எம். பிக்கும் ஜே" என்று கூறினார்.

ஆண்களும் பெண்களுமாக சிறுவர்களும் பெரியவர்களுமாக பெருந்திரளானோர் இக்கூட்டத்தில்கலந்து கொண்டனர். நான்குதிசைகளிலிருந்தும் வேட்பாளர்கள் கார், சைக்கிள், உழவு யந்திரப்பவனியாக முற்றவெளி மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர். தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண வேட்பாளருமான திரு ஜி ஜி பொன்னம்பலத்தின் ஊர்வலம் இரவு சுமார் 10-00மணிக்குப்பின்னரே கூட்ட மைதானத்தை வந்தடைந்தது.

மின்சாரபல்புகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த சிகரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த மேடையில் தமிழ்க் காங்கிரஸ் பல தொகுதிகளிலும் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அமர்ந்திருந்தனர்.

இக்கூட்டத்தில் நூர்முகம்மது ஆனந்தசங்கரி, குமாரசாமி, சிவசிதம்பரம் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

---

'ஈழநாடு'

இலக்கியப்போட்டியில் (காவியப்பிரிவில்) முதற்பரிசு பெற்ற வீர காவியம் காரை சுந்தரம்பிள்ளையின்

# சங்கிலியம்

## நூல் வெளியீட்டு விழாவும்

## பரிசளிப்பு விழாவும்

★

'ஈழநாடு' அலுவலக முன்றிலில்

22-4-70

மாலை 5 மணிக்கு நடைபெறும்

யாழ். மத்திய. யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையே அண்மையில் நடந்த கிரிக்கெட் மோதலைப்பற்றி ஈழநாடு 'றுப்பி' அட்வட்டைஸர்ஸ் ஆதரவுடன் நடாத்திய கிரிக்கெட் புதிரில் வெற்றிபெற்றோருக்குப்பரிசில்கள்வழங்கப்படும்.

★

இந்நூல் ஓர் 'ஈழநாடு' வெளியீடு

விலை: ரூ. 2-50 சதம்

---

## கட்டுப்பணம் 28 பேர் செலுத்தினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. அல்பிரட் துரையப்பா திரு. ஜே. எஸ். சுந்தரம் ஆகியோர் நேற்றுத் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தினர். இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் 28 பேர் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர்.

---

'ஈழநாடு'

## நாவல் போட்டி

"ஈழநாடு" பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட நாவல்போட்டி முடிவுகள் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சில இடையூறுகள் காரணமாக, முன்னர் அறிவித்தபடி இன்று வெளியிடமுடியவில்லை. இன்னும் சில தினங்களில் நாவல்போட்டிமுடிவுகள் அறிவிக்கப்படும். முடிவுகளை இன்று வெளியிடமுடியாமல் போனதற்காக நாவல்போட்டியில் கலந்து கொண்டவர்களிடமும் வாசகநேயர்களிடமும் மன்னிப்புக்கோருகிறோம்.



காந்தக் கண்களால் இதயத்தை கவர்ந்திழுக்கும் இந்தக் கவர்சிப்பாவை அழகு நடனத்தை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பயிலும் இந்த செல்வி. கிருஷ்-சாந்தி சேனாதிராசாவின் பரத அரங்கேற்றம் இம் மாதம் 25-திகதி மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ் துரைராசா தலைமைவகிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலும் தமிழர் நிலையும்

பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தேர்தல் பிரசாரம் பல இடங்களிலும் சூடுபிடித்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் முடிவடைந்தபின் ''தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடமாட்டோம்'' என்று ஐக்கியதேசியக்கட்சியினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் கூறுகின்றனர். அடுத்த அரசாங்கம் அமைப்பதற்கு சமஷ்டிக்கட்சியினரின் தயவை நாடவேண்டிய அவசியமிருக்காதென்றும் தங்களின் தயவையே நாடுவார்களென்றும் சிங்கள மகாஜனக்கட்சியின் தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயகா கூறுகிறார். இடதுசாரிகளை (மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சியினர்) தெரிவு செய்தனுப்பினால் எவ்வித நிபந்தனையுமில்லாமல் திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிபீடத்துக்கு வருவதற்காக ஆதரவளிப்பார்களென்றும் இதேபோல் தமிழ்காங்கிரஸ் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தனுப்பினால் அவர்களும்எவ்வித நிபந்தனையுமில்லாமல் திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியை ஆட்சிபீடத்திலமர்த்த உதவியளிப்பார்களென்றும் ஆனால்தமிழ்மக்களின் உரிமைகளுக்காக நிபந்தனையுடன் எந்தக்கட்சியும் ஆட்சிபீடத்திலமர உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கும் ஒரேயொரு கட்சிதமிழரசுக்கட்சிதான் என்று அதன் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் கூறுகிறார். தமிழரசுக்கட்சியையோ தமிழ்க்காங்கிரசையோ வேறு எந்தக்கட்சியையோ தமிழ்மக்கள் தெரிவுசெய்து அனுப்பினாலும் இப்போதுள்ள நிலையில் தமிழர் ஒருவர்பிரதம மந்திரியாக வரப்போவதில்லை ஆனாலும் அடுத்து யார் பிரதம மந்திரியாக வரமுடியுமென்பதை நிர்ணயிக்கும் சக்தி தமிழ் மக்களுக்கும் உண்டு.

தமிழ்மக்களின் அரசியல் நிலை பற்றி கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத்தினசரியான ''டெய்லி மிரரும்'' இடதுசாரிச் சார்பான 'டிரிபியூன்' என்னும் வாரப்பத்திரிகையும் தெரிவித்துள்ள கருத்தை வாசகநேயர்களுக்குத் தருகிறோம்.

## டெயலிமிரர் கூறுகிறது

['தமிழர்கள் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில்டெய்லிமிரர்12-4-70ம் திகதி எழுதிய தலையங்கம் இது]

இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் அதாவது இலங்கை சுதந்திரமடைவதற்கும், இங்கு வகுப்புவாதம் தலைதூக்குவதற்கும் முன்னர் இந்நாட்டுத் தமிழர்கள் தாங்கள் பிறந்த இந்த நாட்டில் புகழோடு வாழ்ந்தார்கள். பருத்தித்துறையில் இருந்து தெய்வேந்திர முனைவரைக்கும், குளியாப்பிட்டியிலிருந்து கொட்டியாரக் குடாவரையில் சிங்களச் சகோதரர்களோடு ஒன்றாக ஒற்றுமை பூண்டு தலை நிமிர்ந்து வாழ்ந்தார்கள்.

ஆனால் இன்று இந்த நிலை மாறியுள்ளது 23 வருட காலத்துக்குப் பின்னர் அதே தமிழ் சமூகத்தினர் தாங்கள் பிறந்த அதே நாட்டில் சுயமரியாதையோடு அந்நாட்டின் பிரஜைகளாக வாழமுடியாதவர்களாகவுள்ளார்கள். சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் அருணாசலம், திரு. கே. பாலசிங்கம் ஆகிய தமிழர்கள் தம் நாட்டுக்காகவும் தம் இனத்துக்காகவும் போராடி வெற்றிபெற்றவர்கள். இவர்கள் காலத்தில் புகழோடு மிக உயர்ந்த நிலையில் இருந்த தமிழ் இனம் இன்று தலைவர் பதவிகளுக்காகப் போராடும் தலைவர்களால் இருண்டதொரு சமூகமாக்கப்பட்டுள்ளது. இத்தலைவர்கள் தங்கள் இனத்தின் எழுச்சிக்காகப் போராடவில்லை. அதன் வீழ்ச்சிக்காகவே போராடுகிறார்கள்.

இது தமிழ் மக்களின் கடந்த 50 ஆண்டு காலத்தின் சுருக்கமான வரலாறாகும். சிங்கள மக்கள் போன்றே இவர்களும் நாட்டின் உயிர்நாடியாகவிருந்தவர்கள். இன்று தனிப்பட்ட ஓர் இனமாகத் தங்கள் உரிமைகளைப் பெறவும் தமிழினம் எனத் தங்களைத் தெரியப்படுத்தவும் போராடுகிறார்கள். முயற்சி செய்கிறார்கள். இத்தகைய தொடர் அவல நிலைக்கு தமிழ் அரசியல் தலைவர்களும் சில சிங்கள வகுப்புவாதிகளுமே காரணமாவர்.

தமிழ் மக்களை அரசியல் துறையில் தவறான வழியில் இட்டுச் சென்ற தமிழ் தலைவர்களில்மட்டுமன்றித தமிழர்களின் இன்றைய நிலைக்கு வருடா வருடம் அதே சுயநலத் தலைவர்களை அனுப்பி வைக்கும் மக்களும் பொறுப்பாவார்கள். தற்போது இவர்கள் இருசாராரும் ஆட்சிமன்றத்திற் போன்றே பொது மேடைகளில் ஒவ்வொரு கட்சியும் தங்கள் எதிரிக் கட்சிமீது வசைபாட ஆரம்பித்துள்ளனர். நாடு சுதந்திரமடைந்த பின்னர் தமிழ் சமூகத்துக்கு ஒருவிதமான ஆக்கவேலையும் செய்யப்படவில்லை. தமிழ் அறிஞர்கள் தங்கள் தமிழ் தலைவர்கள் தமிழ் சமூகத்துக்கு என்ன செய்துள்ளார்களென்பதை அத்தலைவர்கள் முயற்சியால் கிடைத்த பலன்களின் லாப நஷ்ட பட்டியலை நுணுகி ஆராய்ந்தார்களானால் தமிழ் மக்களின் மோசமான நிலைமையும் வீழ்ச்சியுமே வரவாக அமைகிறதைக் காண்பார்கள்.

தங்களின் இயல்புக்குப் புறம்பான புறக்கணிப்பு, வேறுபாடு ஆகியவற்றால் தமிழ்மக்கள் (அவர்களின் வளர்ச்சிக்கு லாபநஷ்டப் பட்டியலே உதவிசெய்யும் ஒரு சாதனமாக உள்ளது) தங்கள் அரசியல்வாதிகளின் வரவு செலவுப் புத்தகங்களைப்பற்றி அன்று தொடக்கம் கவலை கொள்வதில்லை. அதாவது அத்தலைவர்கள் தங்கள் சமூகத்திற்கு என்னென்ன செய்துள்ளார்கள் என்பதை மக்கள் ஆராய்ந்து பார்ப்பதில்லை. இதன் பலனாகவே தமிழர்கள் தம்நிலையிழந்து தமக்கொவ்வாத பாரபட்சமான சட்டங்களால் தாக்கப்பட்டும் குழப்பமான தலைமையால் சூழப்பட்டும் தங்களுக்கான நாட்டில் அதன் தலைவர்களின் செயலால் நம்பிக்கையிழந்தவர்களாகவுள்ளனர்.

இந்த நிலையில் இருந்து தமிழர்கள் எங்கே செல்வார்கள்? பொதுத்தேர்தல் நெருங்கிவிட்டது. மக்கள் தீர்மானத்தின் முக்கிய கட்டமும் அதனுடன் கூடவே நெருங்கிவிட்டது. 1947, 1952, 1956, 1960, 1965 ஆகிய வருடங்களிலும் பொதுத்தேர்தல்கள் நடைபெற்றனவெனினும் இந்தத் தடவைபோன்று ஆர்வமிக்கதாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை. இத்தகைய ஆறுவாய்ப்புகள் தமிழர்களுக்கு முன்னர் கிடைத்திருந்தன. அவற்றால் அவர்கள் என்னத்தைப் பெற்றார்கள்? இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழும்நிலையைவிட அவர்கள் பெற்றது ஒன்றுமில்லையெனலாம். அரசியலில் தங்கள் பங்கைச் செலுத்துவதற்கான வாய்ப்பு இச் சமூகத்தினருக்குத் தற்போது நெருங்கி விட்டது. இத்துடன் அவர்கள் விழிப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும். தாங்கள் வருங்கால ஆட்சி மன்ற அங்கத்தவர்களில் நம்பிக்கை வைக்கு முன்னர் மற்ற பகுதிகளின் பிரதி நிதிகளிலும் பார்க்க தமிழ்பிரதிநிதிகளின் பொறுப்பு அதிகமானது என்பதை தமிழ்மக்கள் நன்றாக உணர்ந்திருக்கவேண்டும்.

அவர்களின் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் தங்கள் தொகுதிகளுக்கு மாத்திரம் பொறுப்பாளர்களல்ல தமிழ் சமூகம் முழுவதற்குமே பொறுப்பானவர்கள் தமிழர்களின் வருங்காலம் தமிழ் பகுதிகளில் அதாவது தமிழ் மாகாணங்களின் எல்லைகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. 25,000 சதுரமைல்கொண்ட நாட்டின் முழுப்பிரதேசத்திலுமே தங்கியுள்ளது. ஒற்றுமை நிலவேண்டுமேயன்றி பிரிவல்ல.

தாங்கள் நினைத்த எல்லாவற்றையும் பெறவேண்டும்மென தமிழ் மக்கள் நம்பவும் கூடாது எதிர்பார்க்கவும் கூடாது. சமஷ்டிக்கட்சி சில இடங்களில் இதையுணர வேண்டும். தமிழ் மக்களும் உணரவேண்டும் எதிர்வரும் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கியதேசியக் கட்சிக்குமிடையில் உடன்படிக்கையேற்படுமென நாட்டின் சில பகுதிகளில் செய்திநிலவுகிறது இது உண்மையாகநடைபெற்றால் தமிழர்கள் நிரந்தரமாகவே புறக்கணிக்கப்பட்டுவிடுவார்கள்.

## டிரிபியூன் இப்படிக் கூறுகிறது

பொதுத் தேர்தல் வரும் ஒவ்வொரு காலத்திலும் நாட்டைப் பீடித்துக் கொள்ளும் தேர்தல்காய்ச்சலுக்கு இந்தத் தடவையும் நாடு விதிவிலக்காகவில்லை. திரும்பவும் தேர்தல் காய்ச்சல் பீடித்துள்ளதாயினும் முன்னைய தேர்தல்காலங்களிலும் பார்க்கக்குறைவாகவேயுள்ளது. ஐந்து ஆறு தேர்தல்களைக்கண்டு அனுபவித்த மக்களுக்கு இதுவும் ஐந்து வருடத்திற்கு ஒருதடவை நிகழும்சாதாரண ஒரு நிகழ்ச்சியாகபோய்விட்டது 1930ம் ஆண்டில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. 40 வருட காலமாக மக்களும் வாக்களித்துப் பழகிவிட்டார்கள். மேலும் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பாதுகாப்பாக தகுந்த தலைவர்களுக்கு அளிக்கத்தக்கவகையில் தேர்தல் சட்டங்களிலும்சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. கடந்தகாலங்களில் எண்ணற்ற ஊர்வலங்களினாலும் கட்சிகொடிகளைப் போட்டாபோட்டி போட்டுக்கொண்டு கட்டுதலாலும் குழப்பங்கள் ஏற்பட்டன. புதிய சட்டங்களின்கீழ் இத்தகைய 'தமாஷ்கள்' ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தேர்தல் காய்ச்சலின் உஷ்ணம் இந்தத் தடவை உயரவில்லை எனக் கூறினாலும் எதிர்வரும் தேர்தலில் போட்டி அதிகரிக்கும் இது கூட்டுச்சேரவேண்டிய நிலையையுருவாக்கும். நாட்டின் தற்போதைய தேர்தல் நிலையை நோக்கும்போது ஒவ்வொரு தொகுதியிலும் அதிகமானோர் எந்தவழியில் சென்றால் நமக்கு நல்லது, யாருக்கு வாக்களிக்கலாம் என்பதைத் தீர்மானித்து இரகசியமாக வைத்திருக்கிறார்கள் என்ற உண்மை புலனாகிறது. இவ்வாறு தீர்மானித்த வாக்காளர்கள் அமைதியாகவிருக்கின்றனர். இவ்வாறு யாருக்கு வாக்களிப்பது என இதுவரை அடுத்துவரும் 5வருடங்களுக்கும் நாட்டின் நிர்வாகத்தை யார் சரியாகக் கவனிக்கத்தக்கவர்கள் என்பதை ஆராய்ந்து யாருக்கு வாக்களிப்பது எனச் சரியானதொரு முடிவுக்கு வராத வாககாளர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்குத் தலைவர்கள் பெரும் ஆரவாரம் செய்கிறார்கள். கூட்டணியினரும், ஐக்கியதேசியக்கட்சியினரும் தோட்டத்தொழிலாளர்களுக்குக் குறிப்பாக இந்திய வம்சாவழியினருக்கு என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கப்போவதாக இலங்கைதொழிலாளர் காங்கிரஸும், ஜனநாயக தொழிலாளர்காங்கிரஸும்கூறுகின்றனர். சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் சமஷ்டியின் ஆதரவைப் பெறப் போட்டியிடுகின்றன. தமிழர் உரிமைகளை வழங்கும் அரசாங்கத்துக்குத் தாம் தம் ஆதரவையளிக்கப் போவதாக வெளிப்படையாகச் சமஷ்டி கட்சி தெரிவித்துவிட்டது. பொதுத்தேர்தலில் சிங்களத்தொகுதிகளிலுள்ள தமிழ்வாக்காளர்களின்செல்வாக்கைபெறும்தேவையேற்படாததால் சமஷ்டிக் கட்சி ஒரு பக்கமும் சாராத நடுநிலைமை நிலையை ஏற்கும் நிலையில் உள்ளது. சிங்களம் மட்டும் சட்டம் வந்த பின்னர் கடந்த 15ஆண்டுகளாக நடந்தசகலவற்றையும் பார்த்திருந்த கொழும்பு மற்றும் சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எவ்வாறு வாக்களிப்பார்கள் என்பது யாவருக்கும் தெளிவான தொடு விஷயமாகும். இதைவிட இப்பகுதிகளிலுள்ள முஸ்லீம்கள் எவ்வாறு வாக்களிப்பார்கள் என்பது மேலும் ஒரு பிரச்சனையாகவிருக்கிறது. முஸ்லீம்களில் பெரும்பான்மையினர் தங்களுக்கே வாக்களிப்பார்கள் எனகூட்டணியினர் கூறுகின்றனர் அதேவேளையில் ஐக்கியதேசியக்கட்சியினரும் பெரும் தொகையான முஸ்லீம் வாக்குகள் தங்களுக்கே கிடைக்கும் என நம்புவதாகத்தெரிகிறது. முஸ்லீம் வாக்கு யாருக்குக்கிடைக்கும் என்ற சரியான உண்மைஇதுவரைப்புலனாகாமலேயுள்ளது.

இதுவரை காலமும் வழமையாக ஐக்கியதேசியக்கட்சிக்கே போய்க் கொண்டிருந்த கத்தோலிக்கர்களின் வாக்குகளும் தற்போது முஸ்லீம்களினது வாக்கு போன்றே நாட்டின் சில பகுகளில் பிரச்சினைக்குரியதாக விருக்கிறது. இவர்களில் அதிருப்தியடைந்த சில இளைஞர்கள் வெளிப்படையாகவே ஐக்கியதேசியக்கட்சியை விடுத்து கூட்டணியைச் சார்ந்துள்ளனர், கத்தோலிக்க வாக்குகளில் இத்தகைய குறிப்பிடத்தக்கபிளவுகள் இருந்தாலும் கூட்டணி கத்தோலிக்கர்களில் பெரும் பகுதியினர் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிக்கத்தக்க வகையில் அவர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை

அடுத்து நாட்டின் பத்திரிகைகளைப் பொறுத்தளவில் ஒரு முக்கிய அம்சம் கவனிக்கத்தக்கது: நாட்டிலுள்ள 3 பெரிய பத்திரிகைப்பிரிவுகளும் பிரதான கட்சிகளுக்கு சமமான அளவு தங்கள் பத்திரிகைகளில் இடம் கொடுத்துத் தேர்தல்கூட்டங்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஐக்கியதேசியக்கட்சியின் கூட்டங்கள் அல்லாத மற்றவற்றைப் பற்றி பெரிய தினசரிப்பத்திரிகைகள் கவனிக்காதுவிட்ட காலமும் உண்டு. 'தினசரிப் பத்திரிகைகளைத் தேசியமயமாக்கவேண்டும்' என்ற கோரிக்கையைத் தடை செய்ய எல்லாக்கசிகளுக்கும் சமமான இடம் கொடுத்து நியாயமான முறையில் நடந்துகொள்வதுதான் ஒரே வழி என்பதை கடந்தகால அனுபவங்கள் அவர்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளன. இவ்வாறுஇருந்தபொழுதும் ஏரிக்கரைப்பத்திரிகைகளும் ரைம்ஸ் பத்திரிகைகளும் ஐக்கிய தேசியக்கட்சிக்குச் சார்பாகவுள்ளமையும், 'சன்-தவஸ பிரிவுபத்திரிகைகள் சுதந்திரக்கட்சிக்குச் சார்பாகவும் உள்ளமை அவற்றின் சில குறிப்புகளில்

[16ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் பற்றிய கருத்துகளுக்கு கிரேக்க தத்துவமே அடிப்படை

உலகில் வாழும் அங்கிகளின் (உயிரினங்களின்) நடத்தைகளை அறியும் விஞ்ஞானமே உளவியல். இவ்விலக்கணம் ஆரம்பத்தில் சிறிது பொருளுடையதாக இருக்கும். இவ்வியல் ஆரம்ப காலத்தில் ஒரு விஞ்ஞானமாகத் தொடங்கவில்லை. மெய்ப்பொருளியலின் ஒரு பகுதியாகவே இருந்ததெனப் பலர் கருதக்கூடும். இக்கருத்து பிறவிஞ்ஞானப் பகுதிகளுக்கு உண்மையே. ஆனால் கடந்த நூற்றுண்டிலேயே உளவியல் ஒரு தனிப்பிரிவாக அமைக்கப்பட்டது. மற்ற அறிவியல் கலைகளைப்போல இதுவும் தன்னுள் அடக்கிய பொருளை அறிவியல் நோக்கில் நோக்கத் தொடங்கியது இக்காலப் பகுதியேயாகும்,

நாம் உளவியல்பற்றிச் சிறிது நுணுகி ஆராய்வோம். பொதுவாக இது மக்களின் நலனை நாடுவதே. நம்முடைய முன்னோர்கள் தம்மைச் சுற்றியுள்ள தோற்ற உலகைப்பற்றி இயற்கையிலிருந்து எழும்பிய வினுக்களிலிருந்து கிடைத்த விடைகளே, வானியலாகவும், பௌதீகவியலாகவும் உயிரியலாகவும், மற்றுமுள்ள இயல்களாகவும் தோன்றின. அதேபோல, அவர்கள் தம்மைப்பற்றியும், சிறப்பாகத் தங்கள் அனுபவங்கள், நடத்தைகள் ஆகியவை பற்றியும் எழுப்பிய வினுக்களிலிருந்து பிறந்த மனேதத்துவமே இறுதியில் அறிவியல் உளவியலாகியது

Psychology- the fundermentals of Human Adjestment by N. L. Hurn Page 1)

நம்முடைய பழைய சமூகத்திலிருந்து உருவானவர்கள் இன்றும் சில தவருன கோட்பாடுகளை உடையவர்களாக இருக்கின்றனர். தங்களுக்குத் தோன்றும் கனவுகள், அவற்றில் தோன்றும் தூரதேச இடங்கள், தங்கள் பகைவர்களை வெல்லுதல், தாம் இறத்தல் போன்ற நிகழ்வுகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதுபற்றி இந்த இருபதாம் நூற்றுண்டில்கூட அறியாதவர்களாக இருக்கின்றனர். இதற்கெல்லாம் தங்கள் உள்ளே உள்ள அந்தராத்மாவோ அல்லது தேவதையோதான் காரணம் என நம்பி வந்திருக்கின்றனர். இப்பொழுதுகூட தாம் காணும் கனவைக் கொண்டு வருங்கால நிகழ்ச்சிகளை கூறுவதாகக் காண்கிருேம். இதில் உண்மைகள் ஏதாவது உண்டா இல்லையா என்பதுபற்றி -கனவு பற்றி தனியாக ஆராயும் பொழுது பார்ப்போம்.

எங்களுடைய 'உளம்'பற்றிய புதுமைக் கருத்துக்கள் சிலவும் 'Psychology' எனும் வார்த்தையும் கிரேக்க தத்துவத்திலிருந்தே பெறப்பட்டவை. ஆதிகால கிரேக்க நாட்டில் தோன்றிய மெய்ப்பொருள் அறிஞுகிய பிளாட்டோ Plato 427 -347 B C) 'உள்ளம்' பற்றிய ஆய்வில் மிகவும் கவனம் செலுத்தியவர். மனிதருடைய ஒழுக்கத்திற்கு உள்ளம் எவ்வாறு காரணமாகிறது என்பதுபற்றி விரிவாக ஆய்ந்திருக்கிருர். அவரோடு அரிஸ்டோட்டில், டேக்காட் போன்றவர்களும்

**"லங்காதீபன்"**

தங்கள் காலத்தில் இது பற்றி விரிவாய் ஆராய்ந்துள்ளனர்.

இன்று பலர் உளவியல் பற்றிப் பேசுவதைக் காண்கிருேம். இவர்களில் பெரும்பாலானேர் உளவியல் என்ருல் என்ன என்பதே அறியாதவர்கள்; அறிந்தவர் போல் பேசுபவர்கள். இவர்களால் உளவியல், உளவியலார் பற்றித் தவருன ஒரு கருத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. மனிதர்களுடைய உள்ளத்தை அறிவதும், அதை எடைபோடுவதும்தான் உளவியல் என இவர்களில் சிலர் கருதுகின்றனர். இன்னுஞ் சிலர், ஆத்மீகம், மனதினுல் பிற இடங்களில் உள்ளவற்றை அறிவிப்பது, அறிவது (Telepathy) எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்கூட்டியே சொல்வது என்று கருதுகின்றனர். இதனை நன்கு கற்ற சாஸ்திரி சொல்லிவிடுவான். ஒருவர் மனதைப்பற்றி இவர்கள் சொல்வதனுலும் மனிதர்களைத் தொகுத்து அறிவதனுலும், இவர்களை மேற்போக்காக ஒரு உளவியலாளன் என்று சொல்லிக்கொள்கின்ருர்கள். இவற்றைச் சொல்ல சாதாரணமாக வாழ்க்கையில் நடப்பவற்றைக் கூர்ந்து கவனிக்கும் மனிதனுடைய அனுபவமே போதும். இவர்கள் மற்றவர்களுடைய உள்ளத்தில் ஏற்படும் ஆசைகளை உணர்ந்தும், அவர்களுடைய கையெழுத்தைக் கொண்டும், எதிர்காலத்தில் அவர்கள் எப்படி வாழ்வார்கள்எவ்வாருன வாழ்க்கைத் திட்டம் அமைத்தால் சிறப்புக் கிடைக்கும் எனச்சொலித் தாங்கள் ஓர் உளவியல் அறிஞன் எனப்பெயர் பெற்றுவிடுகிருர்கள். அதைக்கொண்டு வாழ்க்கையையும் நடத்துகிருர்கள், இவ்வியல் ஒரு விஞ்ஞானம் என்பதையோ உளவியல் அறிஞர்கள் விஞ்ஞானிகள் என்பதையோ இவர்கள் அறியமாட்டார்கள்.


**விஞ்ஞானத்தின் விளைவு**

உலகப்பொருள்களை கூர்ந்து அவதானிப்பதிலேயே அறிவியல் தொடங்குகிறது. தான் முக்கியமாகக் கருதுகின்ற ஆய்வில்கூட பலவிதப்பட்ட கொள்கைகளைச் சேர்த்துக்கொள்வது அறிவியலல்ல. எப்பொழுதும் அறிவியல் கேள்வியோடே தொடங்குகிறது. இந்தக் கேள்விகளே விஞ்ஞானிக்கு முக்கியம். இக்கேள்விகளைக் கொண்டு அகனேடுதொடர்புள்ள பொருள்களிடத்து அக்கேள்விக்குரிய பதில் கிடைக்குமோவெனத் தேடுகிருன். இந்தநோக்கு ஒரு பொருளின்மீதோ அல்லது நிகழ்ச்சிமீதோ இருககலாம். நிலஆய்வாளன் பாறையை ஆய்வதை அல்லது உயிரியலாளன் பறவைகளின் இருப்பிடத்தைப்பற்றி ஆய்வதை உதாரணமாகக் கொள்ளலாம். எப்படி இருந்தபொழுதிலும் விஞ்ஞானி கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே பார்க்கிருன். அவன் இயற்கையிலுள்ள வேறுபாட்டினைக்கண்டு அவற்றின் முடிவைப் பதிந்து கொள்கிருன்.

இவன் இப்படி நுணுகி ஆயும்பொழுது பரீட்சை முறையிலோ அல்லது வேறு முறையிலோ அவ்விஞ்ஞானி ஏதோவொன்றை நிரூபிக்க முயல்வதில்லை. அப்படிச் செய்தால் அது குறைவுடையதே. சரியென உறுதியாகும் வரையில் எக்கண்டுபிடிப்பையும் அவர்கள் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். இதிலிருந்து பெறப்படும் உண்மையான கருத்துஎன்னவென்ருல். இதே ஆய்வை மற்றவர்களும் திரும்பவும் ஆய்ந்து பார்த்து அதே முடிவை மற்றவர்களும் பெறலாம். முன்பு குறிப்பிடப்பட்ட தந்தியின் இயக்கத்தை (Vibration) பிறவிஞ்ஞானிகளும் திரும்பவும் ஆய்ந்து, அதனிடையே உள்ள தொடர்புகளைக் காணும்வரை முன்கொள்கையை ஏற்றுக் கொள்வதில்லை.

ஆக தங்களால் எழுப்பப்பட்ட சிறப்பான விஞக்களுக்குரிய விடையைப் பெற முயல்வர் எங்கெங்கெல்லாம் முடியுமோ அங்கெங்கெல்லாம் தள ஆய்வு செய்வர். இந்த ஆய்வுகளின் முடிவுகளைத் திரும்பத் திரும்ப ஆய்ந்து பார்த்து மேலும் அவற்றிடையேயுள்ள இயைபுகளையும் கண்டு கொள்வர் இவ்வழியிலேயே விஞ்ஞானம் இன்று சந்திரனைக் கண்டு கொள்ளும் அளவுக்கு வானவியலிலும், மற்றுமுள்ள எல்லா வகையிலும் முன்னெறியுள்ளது.

## வலது குறைந்தாலும் நிறைவான மனம் இருந்தால் போதும்



வெள்ளிக்கிழமை ஓரிரவு, வட லண்டனிலுள்ள ஒரு நீச்சற் தடாகத்தில் ஒரே சப்தம் பிள்ளைகளின் குதூகல ஒலிகள். தங்களை மறந்து நீரில் விளையாடுகின்றனர்இச்சிறுபிள்ளைகள். இவர்கள் யாவரும் வலது குறைந்தவர்கள். இந்த மன நிறைவும், மகிழ்ச்சியும் தரும் காட்சியை இந்த நீச்சற் தடாகத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் காணலாம்.

இதை ஒழுங்கு செய்பவர்கள் மிகவும் உற்சாகமும் ஆர்வமும்கொண்ட இளம் தொண்டர்கள்தான். இத்தொண்டர்கள் சுமார் நூற்றைம்பது பிள்ளைகள் தரையில் காணமுடியாதவற்றை, செய்ய முடியாதவற்றை நீரில் செய்ய உதவுகின்றனர் இவ்வலது குறைந்த பிள்ளைகள் நீரில் பயமின்றி இறங்கி நீந்திக் குதித்து, விளையாடித் தம் குறைகளை மறந்து தாமும் சாதாரண பிள்ளைகள்தான் என்ற ஒருவித ஆத்ம திருப்தியைப் பெற இத்தொண்டர்கள் உதவுகின்றனர்.

இப்படி உதவுபவர்களில் பெரியவர்களிலும் பார்க்க வயது குறைந்த தொண்டர்களே அதிகம். இவர்களிற் சிலருக்கு பதின்மூறு வயதுதானிருக்கும்ஆரம்பத்தில்இவர்கள்''உதவுவதுதம் கடமை'' என்ற கொள்கைக்காக மட்டும் இப்பணியை செய்ய முன்வந்தனர். ஆனல் இன்று தம் மனத்திருப்திக்காக இவ் வலது குறைந்த பிள்ளைகளுக்கு உதவுவதில் ஏற்படும் மனநிறைவுக்காகச் சேவை செய்கின்றனர்.

பிரிட்டனில் இச்சிறந்த சேவையைச்செய்யும் இக்கிளப்பிற்கு 'த கென்சிங்டன் எம்பரஸ்'' என்று பெயர். 1955-ம் ஆண்டு ஆரம்பித்த இக்கிளப்பை, டாக்டர் ஜோன் மாட்டின் என்ற பெண்மணி நடத்தி வருகிருர். இவர் ஒரு சிறந்த நீச்சல் வீராங்கனை.

''வலது குறைந்த பிள்ளைகளைத் தனியே வரம்புகட்டிப் பிரித்துவைக்காமல் உடல், உளரீதியான நன்மைகளை அறிந்து, அவற்றை அவர்களுக்குப் புகட்டி, நிலத்தில் செய்யமுடியாதவற்றை நீரிலாவது செய்து நீந்திக் கற்று ஒரு மனநிறைவைப் பெறச் செய்யவேண்டுமென்பதே இக்கிளப்பின் நோக்கம்'' என்று டாக்டர் மாட்டின் கூறுகிருர்.

வலது குறைந்த பிள்ளைகளுக்கு நீரில் சமநிலை எய்துவது பெரும் பிரச்னையாக இருக்கிறது. ஆனல் வெகு சீக்கிரத்தில் இவர்கள் தம்மிடம் இருக்கும உறுப்புகளை வைத்து சமநிலைபெற்று. நீரில் அமிழ்ந்துவிடும் பயம் தெளிந்துவிடுகின்றனர். நீருக்கு மிதப்பாற்றல் இருக்கிறது என்ற உண்மையையும், இதனைத் தமக்குச்சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்கின்றனர்.

([illegible] பக்கம் பார்க்க)

## தனிமனித உரிமைக்கு நெப்போலியன் அளித்த மதிப்பு

நெப்போலியனுக்கு குழந்தை பிறந்தவுடன் அந்தக் குழந்தைக்குத் தனியாக ஓர் அரண்மனை கட்ட நினைத்தான். அதற்காக பான்டிஜினுவுக்கு எதிரில் உள்ள எல்லா வீடுகளும் விலைக்கு வாங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அவற்றில் ஏழை ஒருவனின் சிறு வீடும் இருந்தது.

அதன் அதிக மதிப்பு ஆயிரம் பிராங்குகள்தான் பெறும். ஆனல் அதன் சொந்தககாரனே பத்தாயிரம் பிராங்குகள் கேட்டான். அலுவர்கள் அரசனிடம் இதனைத் தெரிவித்தார்கள். 'சரி, கொடுத்தது வாங்கிவிடுங்கள்' என்ருன் நெப்போலியன்.

தொகையைக் கொண்டுபோய்க்கொடுத்துக் கிரயம் எழுதப்போகும்போது முப்பதாயிரம் பிராங்குகளுக்குக் குறைவாக அதைக் கொடுப்பதில்லை எனத்தான் முடிவுபண்ணிவிட்டதாகக் கூறினுன் வீட்டின் சொந்தக்காரன்.

மீண்டும் நெப்போலியனிடம் சென்று செய்தி அறிவிக்கப்பட்டது. அதற்கும் நெப்போலியன் சம்மதித்து முப்பதினுயிரம் பிராங்குகள் கொடுத்து வாங்கிவிடுங்கள் என்ருன். அதன்படி பத்திரம் எழுத வந்தபோது நாற்பது ஆயிரம் கொடுத்தால்தான் கொடுப்பேன். விரும்பினுல் வாருங்கள் என்ருன் வீட்டுக்குரியவன்.

மறுபடியும் நெப்போலியனிடம் போய் இதைத் தெரிவித்தார்கள். போனுல் போகட்டும் வாங்கிவிடுங்கள் எனக் கட்டளையிட்டான் காவலன்.

ஆனல், மறுபடியும் வீட்டின் சொந்தக்காரன் ஐம்பதினுயிரம் கொடுத்தால் விற்பேன்; இன்றேல் விற்கப்போவதில்லை என்ருன்.

இதை அறிந்த நெப்போலியனுக்கு கோபம்வந்துவிட்டது. வீட்டை வாங்கவேண்டாம். சட்டத்துக்கும் தனிமனிதன் சொத்துரிமைக்கும் நான் அளிக்கும் மதிப்பாக அவ்வீடு அங்கேயே இருந்துபோகட்டும் என்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமத்துறை

— கங்கா புத்திரன் —

## சிந்தனை ஒன்றை உடையவராவோம்:-

''மூப்பது கோடி முகமுடையாள்-உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்-அவள்
செப்புமொழி பதினெட்டுடையாள்-எனில்
சிந்தனை ஒன்றுடையாள்.''

இன்றைக்குக் குடியரசாகத் திகழும் பாரதநாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்திலே தேசிய ஒருமைப்பாட்டையும், மக்களின் இதயத்திலே மலர்ந்துகொண்டிருந்த சுதந்திர வேட்கையையும் உற்றுணர்ந்த அமர கவி பாரதி இவ்வாறு பாடியுள்ளார். இதை நாம் இப்போது ஞாபகப்படுத்துவதன் காரணமென்ன என்ற கேள்வி எழலாம். ஒரு நாட்டின் பல பகுதிகளிலும் வாழுகின்ற மக்கள் ஒரே இலட்சியத்தையடைகின்ற பண்பை உடையவர்களாக விளங்கவேண்டுமென்ற நோக்குடனே இதைக் குறிப்பிடுகின்றோம்.

சௌமிய ஆண்டு மறைந்துவிட, சாதாரண ஆண்டு பிறந்துள்ளது. இந்த ஆண்டு இலங்கையில் பெரும்பான்மையாக வாழ்கின்ற பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும் பொதுவானதாகும். இதை நிர்ணயித்தவர் யார்? எப்பவோ ஒருகாலத்தில் எத்தகைய குறுகிய நோக்கமும் இல்லாத பெருந்தன்மையாளர் சாஸ்திர அடிப்படையில் நிர்ணயித்துக்கொண்ட இத்தினம் இன்றைக்கும் ஒன்றாகவே அமைந்துள்ளது.

முதலும் முடிவுமில்லாது எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் ஒருவனே. இறைவனால் படைக்கப்பட்ட எல்லாமனிதர்களுக்கும் உணர்ச்சிகள் ஒன்றே. இந்த மேலான கருத்தை ஈழமெனும் சிறிய தீவிலே வாழ்கின்ற எல்லோருமே இதயத்தில் எடுத்துக்கொண்டால் இங்கே உண்மையான தேசியமனப்பான்மை உருவாகலாம். பாரதிபடைத்த பாடலை இலங்கைக்கு பொருத்தமாக,

செப்பு மொழியிங் கிரண்டுடையாள்-எனில்
சிந்தனை ஒன்றுடையான்

என்று கூறி எல்லோரும் இன்புற்று ஈழமணிநாட்டை நேசிக்கின்ற பண்பை வளர்த்தாலென்ன?

## கொதிக்கும் வெயிலில் கூட்டுக்கவிதை:-

மூச்சு விடும் முன்னே
முந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஆயிரம்பாட்
டாகாதோ?

இந்தப்பாட்டை அறியாதார் இல்லை. செந்தமிழ் மொழியில் முன்னாட்களில் மூச்சுவிடுவதற்கு முன்னே முந்நூறு நானூறு பாட்டுப்பாடினோர் பலர் இருந்தனர். ஆனால் இன்றைக்குமுன்னூறு நானூறு பாடுவோம் என்று சவால் விடுபவர்கள் இல்லையானாலும் நினைத்தவுடன் கவிதை பாடும் கவிஞர்கள் இல்லாமலில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒருநாள் அனலைதீவுக்கு கவியரங்கம் ஒன்றுக்கு கவிஞர்கள் நால்வர்கள் செல்ல வேண்டியிருந்தது. கவிஞர்கள் நால்வரையும் ஒழுங்கு செய்த நண்பர் மத்தியான வேளையில் கவிஞர்களை பஸ் நிலையத்தில் நிறுத்திவிட்டு கார் ஒன்றைப் பிடிப்பதற்கு சென்றுவிட்டார்.

மதியம்தாண்டி ஒரு மணி நேரந்தான். சூரியன் தனது நாக்குகளை நீட்டி- நெருப்பைக் கொட்டிக்கொண்டிருந்தான். கவிஞர்கள் நாலுபேரும் வெயில் கொடுமைக்காக ஓரிடத்தில்ஒதுங்கிநின்று நண்பரின்வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். நண்பர் வருவதாகக் காணோம். முதலாவது கவிஞரான கந்தனம் காணாமற்போன நண்பரைக் குறித்து

''வாழைப் பழம்வடை வாங்கச்
சென்றாரோ?
வாலைக் குமரியைத் தேடிச்
சென்றாரோ?

என்றதும் அடுத்தகவிஞர் காரை. செ.சுந்தரம்பிள்ளை,

சேலைத் தலைப்பைப் பிடித்திழுத்
தாரோ?
செருப்படி பட்டுத் திகைத்து
விட்டாரோ?

என்று கூற இளைஞரான கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி

மூலை முடுக்கில் ஒழித்திருப்
பாரோ
மூச்சைப் பிடித்துக்கொண்
டோடுகின்றாரோ

என்றார்.

அமைதியாக நின்றுகொண்டிருந்த கவிஞர் ஐயாத்துரை

வேலையிலாதிவர் எங்குசென்
றாரோ?
வீணாக வெய்யிலில் வெதும்புகின்
றோமே''

என்று முடித்தார்.

பின்பங்கே நடந்தவை இங்கு நமக்குத் தேவையில்லாதவை. ஆனால் கொதிக்கும் வெய்யிலிலும் கூட்டுக்கவிதை அமுதம் தருகின்றவர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள். வெறும் சூழ்நிலையை பற்றியோ சந்தர்ப்பத்தைப்பற்றியோ இவர்கள் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் கவிதையை உண்மையில் மனப்பக்தியோடு உபாசிக்கின்றவர் இவர்கள் என்பதுதான் உண்மை.

# சர்வசன வாக்குரிமையும் ஈழமும்

''நம்மை நாமே ஆட்சி புரிகின்றோம்'' என்ற பெருமித உணர்வைச் சுமந்துகொண்டு மக்கள்பவனி வருவது தேர்தல் காலங்களில் மட்டுமே. அவ்வாறானகாலத்தில் இன, மத, வர்க்க, பால் பேதமின்றி வயது வந்த அனைவருமே அதிகாரத்தை ஏற்றிருப்பது சர்வசன வாக்குரிமையளித்துள்ள வரப்பிரசாதம்.

ஈழமக்கள் சர்வசன வாக்குரிமைக்காகப் பெருங்கிளர்ச்சிகளையோ, போராட்டங்களையோ நடத்த வேண்டிய தேவையிருக்கவில்லை. பிரித்தானியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய சில வருடங்களில் ஈழத்திற்கு வருகைதந்த 'டொனமூர்க் குழுவினர்' இலங்கைக்கும் சர்வசன வாக்குரிமையை வழங்கினர். 1930 லிருந்து ஏறக்குறைய 40 ஆண்டுகளில் இலங்கையில் ஏற்பட்டுள்ள மகத்தான மாறுதல்களையும், என்றுமே மாறாது குடிகொண்டிருக்கும் விரக்தி மனப்பான்மையையும், குறிப்பாகத் தமிழ்ப் பெருங்குடிகளின் விபரீதப் போக்கினையும் பற்றிச் சிறிது சிந்திப்பதே இக்கட்டுரையின்நோக்கம்.

சர்வசன வாக்குரிமை அரசாங்க சபையிருந்த காலத்தில் அதாவது 1947 வரை பெரும் அதிகாரம் படைத்தது என்று கூறிவிட முடியாது. சனநாயகப் பயிற்சிக்கு உதவியாக இருந்தது என்று வேண்டுமானால் கூறலாம். இந்தக் காலகட்டத்திற் கட்டுக்கோப்பான கட்சிகளில்லாததும் மந்திர சபை முறையில்லாததும் வாக்குரிமைக்குப் பெரும் மதிப்பளிக்கவில்லை.

ஆயின் அக்காலத்திற் தோன்றிவிட்ட அரசாங்க சபை உறுப்பினர் நிர்வாக விஷயங்களிற் தலையீடும்-குறுக்கீடும் இன்றைய நாடாளுமன்ற அங்கத்தினராலும் செவ்வனே பின் பற்றப்படுகின்றது அன்று தொழிற் சங்கங்கள் இயங்காத காலத்தில் ஏற்றுக்கொண்ட பதவி நியமனம், மாற்றம் போன்ற விஷயங்களில் இன்றும் தாம் தலையீடு செய்வது எவ்வளவு கேவலமானது என்பதை இவர்கள் உணர்வது அத்தியாவசியம்.

'இலங்கையில் சர்வசன வாக்குரிமை மக்களிடம் அதிகாரத்தை வழங்கியுள்ளதா என்பது கேள்வி? இதற்கு ஆம் என்பதே திடமான பதில். சர்வசன வாக்குரிமை செவ்வனே செயற்பட நாட்டில் தெளிவான கொள்கைகளுடன் கூடிய இரண்டே கட்சிகள் அமைந்திருத்தல் பொருத்தம்என்பது பாராளுமன்ற சம்பிரதாயத்திற் தேர்ச்சி பெற்றோர் ஒப்ப முடிந்த கொள்கை.

இலங்கையில் தாமாக அவ்வாறு கட்சிகள் அமையாவிடினும் மக்கள் வாக்குரிமைப்பலம் இரண் கட்சி அணிகளை உருவாக்கியுள்ளது வலதுசாரியணியாக, சென்ற தேர்தலின்பின் ஆட்சிக்கு வந்த 7 கட்சிகளில் 2 இறந்துபட 5 கட்சிகளாக விளங்கினும் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய நான்கும் வலதுசாரியணியாகவே இன்றும் போட்டிக்குத் தயாராகின்றன. மற்றைய இடதுசாரியணியிலுள்ள மு கட்சிகளும் 1964 லிலிருந்து

''ஆரூரன்''

உடைக்கமுடியாப் பிணைப்புடன் இயங்குகின்றன. இருகட்சி ஏற்பாட்டிற்கு முதற்படியான இவ்வகைஅணிகள் அமைந்தது மக்கள் வாசுகின் பலத்தாலேயே. இவ்வாறு இவை முதிர்ச்சிபெற்று இருகட்சிகளாய் மாற்றமடையின் இலங்கையில் ஜனநாயக ஆட்சிமுறை நிலைத்துவிடும் என்பதில் எவ்விதசந்தேகமுமில்லை இருகட்சிகளும் நாடுமுழுதும் செல்வாக்குடன் விளங்கின் மக்கள்தெளிவாக எக்கட்சியை ஆதரிக்கின்றனர்? எக்கொள்கையை விரும்புகின்றனர் என்பது தேர்தல்களில் தெளிவாகப் புலப்படும்.

இந்நிலையேற்படின் கட்சியரசியலைக் கடிந்தொதுங்கும் நிலை கல்விமான்களுக்கேற்படாது. டாக்டர் மு. வரதராசன்போன்ற அறிஞர்கள் கட்சியரசியலை வெறுத்துக் 'குடவோலை' முறைக்குத் திரும்புவோம என்றங்கலாய்க்கும் நிலைமையேற்படாது. கொள்கைகளை உருவாக்குவதில் கட்சிகள் செய்யும் சாதனைகளை உணர்ந்திருக்கும் கட்சிகளதிகரித்து அவை நடத்தும் தில்லுமுல்லுகளைப் பார்த்துப் பொறுமையிழந்த தலைவர்கள் கட்சியரசியலுக்குமுழுக்குப் போடமுயலல்சரியல்ல

பொருளாதார, சமூகஉளவியல் அடிப்படையில் இருகட்சிகள் அமைவது சாலப் பொருத்தமே. அவ்வாறமைப்பதிலும் பராமரிப்பதிலும் வெற்றி பெறுவதே எதிர்காலத்தில் ஜனநாயகம் நிலைக்கவழி. மக்களில் ஒரு தொகுதியினர் எப்பொழுதும் துரிதவளர்ச்சிக்குக்கால் கோலுபவர்கள். மற்றையோர் இருப்பதை உரப்படுத்துவதில் (உரனுறுவதில்) விருப்புடையர். உதாரணமாக எமது இடதுசாரிக் கட்சியினர் புதியபுதிய கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் விருப்புடையர் வலதுசாரியினர்புதியன செய்யத்தயங்கிக்கொண்டே முன்னையவர் கண்ட நெறிகளை உரப்படுத்துவோராயுள்ளனர். துரிதமாற்றங்களையேற்படுத்து வோரென்றும், இருப்பதைப்பேணுவோரென்றுங் கொள்ளலாம். இந்த இரு தன்மைகளும் எல்லா நாட்டிற்கும், இனத்திற்கும், மதத்திற்கும் இயல்பானதே; வேண்டியதே. இதை நாம் பழகும் ஒவ்வொருவருடனும் அவதானித்தால் உணர்ந்து கொள்ளமுடியும். இந்தஇரு தன்மைகளுமே இருகட்சிக் கொள்கைகளுமாகின்றன. இந்நிலை இலங்கையில் ஏற்படக்கூடிய காலம் எது? இவ்விரு அணிகளும் இருகட்சிகளாய் மிளிர்வதுஎப்போது?

(14ம் பக்கம் பார்க்க)

## எலும்பையும் பிறருக்குக்கொடு:

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு

இது வள்ளுவனின் வாக்கு. இதன்தாற்பரியம் இது தான்: அன்பை மனதிலில்லாதவர் சுயவாழ்க்கையை மட்டும் பெரிதாகக்கொள்ளுவர். அன்பைக் கொள்கையாகவுடையவர்கள் எலும்பையும் பிறருக்கு வழங்குகின்ற பெற்றியுடையவர்.

இந்தத்தாற்பரியத்துக்குக் காரணமான கதையையும் இங்கு சொல்லுவது பயனுடைத்தாம் என்று கருதுகிறேன்.

ஒருமுறை விருத்தாசுரனின் கொடுமைக்காட்பட்டான் தேவர்கோன். விருத்தாசுரனைக் கொல்லக்கூடிய ஆயுதம் ததீசிமுனிவரின் முள்ளந்தண்டு என்று அறிந்தான். ததீசிமுனிவரின் முள்ளந்தண்டைப் பெறவேண்டுமானால் ததீசிமுனிவர் சாகவல்லவா வேண்டும். இந்திரன் இதற்காக மனம் நொந்தான். ஆயினும் தன்னுடைய எண்ணக்கிடக்கையை முனிவருக்கு வெளியிட்டான்.

அமரர்கள் வாழ்வதற்காக தன்னுடைய முதுகெலும்பை மனமுவந்து வழங்கி சாவை அணைத்துக்கொண்டார் ததீசிமுனிவர். இதுவே வள்ளுவரின் வாயினின்றும் வெளிவந்த அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்பதாகும்.

## காதல் நகை

—யுவரிஷி

எப்படிச் சொல்வேன்
இதயத்து ஆவலினை
செப்படி வித்தைகள்
செய்தேனும் மச்சானை
அப்பிட உங்கள்
அனுமதி வேண்டும்
இப்படிக்கு மருகன்
ஹிஹ்ஹிஹ்ஹி!

துப்பிடுவேன் முகத்தில்
தூ! மானங்கெட்டவனே
எப்படிக் கேட்பாய்
என்மகளை, முட்டாளே!
செப்பிடுகின்றேன்
சிந்திக்காதேயவளை
இப்படிக்குன் மாமன்
ஹஹ்ஹஹ்ஹா

அப்படியும் இப்படியும்
அறியாமல் சண்டையிடும்
அப்பாவும் மச்சானும்
அறிதற்கு ஓர் வார்த்தை
எப்படிச் சொல்வேன்
எதிர்வீட்டு'உஷ்' அழகே...
இப்படிக்கு உங்கள்
ஏந்திழை 'கிளுக்'

## வலது குறை.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமைகளில் இப்படி ஒன்றரை மணி நேரம் நீந்தக்கற்றுக்கொண்டபின், தொண்டர்கள் இப்பிள்ளைகளை வெளியேகொண்டுவந்து அவர்கள் உடைகளை மாற்ற உதவி செய்து சூடாக ஏதாவது பானத்தை அல்லது பழரசத்தைக் குடிக்கக்கொடுக்கின்றனர்.

இக்கிளப்பின் ஒரு முக்கிய அங்கத்தவர் திருமதி மேரி வெப். இவரும் வலது குறைந்தவர்தான். இருப்பினும் இக்கிளப்பின் முக்கிய நிகழ்ச்சிகளையும், அம்புலன்ஸ் வண்டிகள் மூலம் இப்பிள்ளைகளை வீட்டுக்கு எடுத்துச்செல்லும் அட்டவணைகளையும் தயாரித்து நடத்துவது இவர்தான்,

இக்கிளப் தொண்டர்களில் ஒருவர் பீற்றர்மக்கி இங்கு வந்தவர்கள் ஒரு பொழுதும் உதவிசெய்யாமல்திரும்பியதில்லை எம்மை-எம் மனத்தை அப்படியே ஆகர்ஷித்துவிடும் சக்தி இப்பிள்ளைகளுக்கு இருக்கிறது போல் தான் எனக்குப்படுகிறது. இப்பொழுது நான் வெள்ளிக்கிழமை எப்போ வருமெனக் காத்திருக்கிறேன்'' என்று உணர்ச்சி பொங்கக் கூறுகிறார் பீற்றர் மக்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[பாராட்டுக்கதை]

சிறுகதை

# மான நட்டம்

— திமிலைக் கண்ணன் —

**வா**திதரப்புவழக்கறிஞர் பிரதிவாதியை விசாரணை செய்து கொண்டிருக்கிறார்

''வழக்காளர் பாலரதியை உமக்குத்தெரியுமல்லவா?''

'தெரியும்.''

' எத்தனைவருடங்களாகத் தெரியும்?''

''மூன்று வருடங்களாக.''

''அவருடன் நீர் நெருங்கிய உறவு கொண்டிருந்தீர் என்பது உண்மைதானே?''

வழக்கறிஞர் கேட்டதும் பாலையா சற்றுத்தயக்கத்துடன்... ''இல்லை''யென்று பதிலளிக்கிறான். அதைத் தொடர்ந்து மதியநேர இடைவேளைக்காகக் கோடு கலைகிறது. நீதிபதி இறங்கிச் சென்றுவிட்டார். வழக்கறிஞர்களும்தமதில்லம்திரும்பி விடுகின்றனர். பார்வையாளர்கள் இருந்த இடம் வெறிச்சோடிப் போய்க் கிடக்கிறது. வழக்கில் சம்பந்தப்பட்ட பலர்முக்கியமாகப் பெண்கள் ஊண் உண்டியற்று, இன்னமும் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒருத்தி அழகுச்சிலையாக அதோ அமர்ந்து கொண்டிருக்கிறாளே, அவள் யார்? அவள் தான் பாலரதி. பெயருக்கேற்றாற்போல் நல்ல அழகாய்த்தான் இருக்கிறாள். அவளின் ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வொரு விதத்தில் எழிலூட்டிக் கொண்டிருக்கின்றன. கருமுகிலைநிகர்த்த அழகிய கருங்கூந்தல்; அலையலையாகச் சுருண்டு அழகூட்டிக் கொண்டிருக்கிறது. இளம்பிறையே இங்குவந்து, நம் நெஞ்சைப்பிளந்து, அதனுள்ளும் தன் ஒளிப்பிழம்பைப்பரப்பி, எம்மை என்னென்னவோ செய்கிறதே என ஏங்கவைக்கும் அவளது அழகான நெற்றி. புருவமத்தி ஆகா. கண்கொட்டாது அதைப் பொழுதெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்போல் தோன்றுகிறது. இந்த அதிரூபவதியாளின் உள்ளுணர்வுகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தானே அவன் யார்? அவன் ''இல்லை'' யென்று கூறியதை எண்ணியெண்ணி அவள் உள்ளம் குமைந்து, கொண்டேயிருக்கிறாள்? அவளை நான் நெருங்குகிறேன்; அவளின் முகத்தை நன்றாக கூர்ந்து கவனிக்கிறேன். அவள் உள்ளம் படும் வேதனைபுரிகிறது. ''இவளையா அவன் வேண்டாமென்று சொன்னான்? இந்த ரதியையா அவன் வெறுத்தான்? ஐயோ! கொடுமை கொடுமை கொடுமையிலும் கொடுமை. ஆயிரம் ஆண்டுகள்வேண்டுமானாலும், அவள் அழகு ஒன்றுக்காக அவள் காலடியில் கிடக்கலாமே!'' அவன் ஏன் இவளை வெறுத்தான்? என்னையே நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு விடைகாண வேண்டாமா? அவள் உள்ளத்தை நான் ஊடுருவிப் பார்க்கிறேன், அது, அவளதுபசுமையான நினைவலைகளை பம்பரம்போல் சுழற்றிக்கொண்டிருக்கிறது. கடந்தகாலத்தை நிழல் படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருக்கிறது. நான் தூலசரீரத்தைவிட்டுச் சூக்கும சரிரத்துட் புகுந்து, அவளது இதயத்தின் ஒரு மூலையில் ஒட்டிக்கொள்கிறேன்! நிழல்படக் கண் காட்சியில் எனக்கு இவ்வளவு ஆசை ஏனோ? எனக்கேபுரியவில்லை. ஒளித்திருந்தாவது அதைப் பார்த்தேதீரவேண்டும். காசு கொடுக்காது ஒவ்வொரு உள்ளங்களுக்குள்ளும் புகுந்து அங்கு நடக்கும் விந்தையான வேடிக்கையான சுவையான சம்பவங்களை மறைந்து நின்று பார்க்கும் மனோதத்துவக்கலை எனக்குக் கைவந்தகலை. ஆவலை என்னால் அடக்க முடியவில்லை கண்களை நன்றாக விழித்துப்பார்க்கிறேன்; கதை தொடர்கிறது...

ஃ

அன்று புதன்கிழமை. புனிதமான நாள். நாலுமணியிருக்கும். நான் கல்லூரிவிட்டு வந்து உடைகளைக் களைந்து மாற்றிக்கொண்டு நிற்கிறேன். 'ரதி!ரதி!' அப்பா தான் அழைக்கிறார். 'இதோ வந்துவிட்டேனப்பா!' துள்ளிக்குதித்துக்கொண்டு ஓடுகிறேன் நான்.

'ஆ!...யாரது? நல்ல வாட்டசாட்டமான ஆள், பார்த்தால் மன்மதனைப் போலத் தோன்றுகிறாரே.' ஒரேயொரு கணம் நான் அவரை உற்றுப்பார்க்கிறேன். அதற்குமேல் என்னால் அவரைப் பார்க்கமுடியவில்லை. தலை கவிழ்ந்துவிடுகிறது. பெருவிரலால் நிலத்தைச் சீண்டிக்கொண்டு நிற்கிறேன். அப்பா தொடர்கிறார். 'இவதான்தம்பி என் மகள்! எல்லாப் பாடத்திலும் சுட்டி. கணக்குப்பாடம் ஒன்றுதான் போகுதில்லை. நீ கணக்கில் புலி என்று உன் அப்பா சொல்லியிருக்கிறார். எப்படியோ இந்தவருடம் ஐம்பது புள்ளியாவது எடுக்கவைக்கவைத்து விடோணும்.'

நான் கடைக்கண்ணால் அவரைப் பார்க்கிறேன். 'நல்லாக் கணக்கும் விடுவார் போலிருக்கிறது' மனதுக்குள்ளாக எண்ணிக்கொள்கிறேன். அவர் என்னை விழுங்கிவிடுவதுபோல் பார்த்துக்கொண்டே 'சரிபார்க்கலாம்' என்று தலையசைக்கிறார். வெட்கம் என்னைப் பிடித்துத் தின்னுகிறது. 'நாளையிலிருந்து பாடத்தை ஆரம்பிக்கலாம தங்கச்சி! எந்த நேரம் வசதியாயிருக்கும் என வினவுகிறார். 'வந்த உடனேயே கதைக்க அடிபோடுகிறாரே! அப்ப இவர் சரியான ஆள்தான் என்று மதிப்பிட்டுக்கொண்டேன். வாய் திறக்கவிஎலை. அப்பா தான் பதில் சொல்கிறார். 'என்னதம்பி நீங்க, பிள்ளையிடம் இதைப் போய்க் கேட்டுக்கொண்டு... உங்களுக்கு வசதியான நேரத்தைக் குறிப்பிடுங்க.'

'சரி சரி நான்குமணிமுதல் ஐந்துமணிவரை வசதிதானே!' என்கிறார் அவர். நான்'ஆம்' என்று தலையசைக்கிறேன். அன்றுமுதல் ஒவ்வொருநாளும் நாலுமணியடிக்கப் பத்துப் பதினைந்து நிமிடத்திற்கு முன்னாடியே அவர் வந்துவிடுவார். நான் பள்ளிக்குச் சென்ற உடுப்புடனேயே 'ரியூஷன்' கேட்க ஆரம்பித்துவிடுவேன். சில நான் தெருவில்வந்துகொண்டிருக்கும்போதே அவரும் வந்துவிடுவார். சைக்கிள் மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கும். 'ஏன் இன்றைக்கு லேட்' என்று எதையாவது கதைக்க ஆரம்பிப்பார். நான் நமது ஆசிரியர்தானே என்ற துணிவுடன் கதைக்க ஆரம்பித்தேன். ஓரிருமாதங்களுக்குள்ளாக நாங்கள் நெருங்கிய நண்பர்கள் போலப் பழக ஆரம்பித்தோம். சிலசமயங்களில் பாடம் சொல்லித் தந்து கொண்டிருக்கும்போதே வேண்டுமென்று என்காலைத் தீண்டுவார். நான் மின்சாரத்தால் தாக்குண்டாற் போல அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருப்பேன் சில நேரங்களில் அவர் என் காதைப்பிடித்து 'மக்கு மக்கு' என்று திருகுவார். நான் 'ஐயோ என்காதை விடுங்களேன்' என்று கெஞ்சுவேன். வீட்டில் ஏதாயினும் புதிய பண்டங்கள் தயாரித்தால் அவருக்கென ஒருபகுதியை எடுத்துவைத்துக்கொள்வேன் அவர் வந்ததும் அதைக்கொடுத்து உபசரிப்பதில் எனக்கொரு தனி ஆனந்தம் ஏற்படும். ஆரம்பத்தில் தங்கச்சி! தங்கச்சி!' என்று அழைத்துப் பாடம்சொல்லித்தர ஆரம்பித்தவர் என் பெயரைச் சொல்லியே அழைக்க ஆரம்பித்தார் அவர் அப்படி அழைப்பதுதான் என் மனதுக்குப் பிடித்தமாக இருந்தது. ஒருநாளைக்கு அவர் வரத் தாமதித்தால் 'வர மாட்டாரா வரமாட்டாரா' என வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டிருப்பது வழக்கமாகி விட்டது. அன்புரதி! இன்பரதி! ஆசை ரதி என்றெல்லாம் அவர் அன்பை அள்ளியள்ளிச் சொரியும்போதெல்லாம் நான் என்னை மறந்து இன்பத்திலாழ்ந்திருப்பேன். ஒருநாளா, இருநாளா, எத்தனைநாள்கள் நான் அவருடன் படம் பார்க்கச் சென்றிருக்கிறேன். கல்லடிக்கடற்கரையில் இன்பமாகப் பொழுதுபோக்கிய அந்த நாட்கள் என்நெஞ்சைவிட்டு நீங்கா, ஓரியன் ஹோட்டலில் இரண்டு இரவுகள். அவரது ஆசைக்கு என் உடலை அர்ப்பணித்ததை என் வாழ்நாளில் என்றாவது மறக்கமுடியுமா? கள்ளங்கபடமற்ற உள்ளத்துடன் பழகுகிறார் என்று தானே நான் உடல்பொருள் ஆவியெல்லாம் அவருக்கு அர்ப்பணித்தேன். இப்படிக் கல்நெஞ்சனாக மாறுவார் என்று தெரிந்திருந்தால் ஐயோ, என்னையேநான் இழந்திருப்பேனா? அவர் என் அருகில் நெருங்கியதும் உணர்ச்சிவசப்படும் பிண்டமாகிவிட்டதே என் பெண்மை, தாலி கழுத்தில் ஏறும்வரைஉடல்புனிதமானதாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை இப்போதுதான் உணர்கிறேன். ஒருபடிப்பினை ஏற்படும் போதுதான் ஓர் உண்மை வெளிப்படுகிறது. உலகத்திலுள்ள ஊழல்கள், என் கண்களுக்குத் தெரியாது போய்விட்டனவே. வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பி ஏமாந்துவிட்டேன். பாழாய்ப்போன நம்பிக்கையென்ற அத்திபாரத்தில் இருந்துதானே வாழ்க்கையென்ற மாளிகையைக்கட்டி எழுப்பமுடியும் நான்அவரை நம்பியது தவறா? ஒருவரை ஒருவர் நம்பாது உலகத்தில் வாழத்தான் முடியுமா? நான் நம்பிக்கெட்டவளாகிவிட்டேன். நம்பிக்கைத்துரோகம் செய்தவனை அரசநீதி தண்டிக்காதுவிட்டாலும் தெய்வநீதி சும்மாவிடாது. என் பாவமும் பழியும் அவர் அடிச்சுவட்டைத் தொடர்ந்து சென்று பிடிக்காது விடாது. தாய் தந்தையரின் வாக்கைத் தேவவாக்காகக் கருதிஎன்வாழ்வைக் கெடுத்தவரும் ஒரு மனிதரா? தாயைப்போல் நானும் ஒரு தாயாக வேண்டியவள். தாய்க்குலத்தைச் சேர்ந்தவள் என்பதை மறந்துவிட்டாரே! பெண்மையைப்பாதுகாக்கவேண்டியஆண்குலமே இப்படி கடமைதவறலாமா? கல்நெஞ்சராகலாமா? கடவுளே! நீ ஒருவன் இருந்தால் இந்தத் துரோகியைச் சும்மா விடமாட்டாய் என் மனம் பத்தியெரிவதைப் போல அவரும் அவர் உடலும் எரிந்து...''

''ஐயோ வேண்டாம்! வேண்டவே வேண்டாம்... என்ன இருந்தாலும் நான் நான்... அவர் மனைவி. இரண்டு நாளாவது நான் அவருடன் வாழ்ந்திருக்கிறேன். அவர் உடலுக்கு ஒரு தீங்கென்றால் அதை என்னால் தாங்கவேமுடியாது! என்னால் அதைத் தாங்கவேமுடியாது. எள் தந்தை என்னை அனாதையாக்கியதைப்போல் அவரும் என்னைக் கைவிட்டுவிட்டார். அப்பா இருக்கும்போது நான் அவருக்கு அழகியாகவும், இனியவளாகவும்தான் இருந்தேன். அப்பா இறந்ததும் நான் அவருக்கு கசந்துவிட்டேன். ஏன்? பணம்! பணம்! பணம்! இந்தக்கொடிய பணப்பேய் மனிதனை மிருகமாக்கிவிடுகிறதே. பணம், பதவி ஆதனம் இல்லையென்றுதானே அவர் என்னை மறந்தார். மாலையிட மறுத்தார். சீதனத்துடன் பெண்கொடுக்கப்பலர் தயாராயிருக்கும்போது, இந்த ஏழையை அவர் ஏற்றுக்கொள்ள முடியுமா...? என் வாழ்வு எப்படியாவது போகட்டும் அதைப்பற்றி எனக்கு கவலையில்லை. அவர் வாழ்வு நல்வாழ்வாக அமையட்டும். அவர் சீரும் சிறப்போடும் வாழ்வதைப் பார்த்து நான் பெருமைப்படவேண்டும், உற்றார் உறவினர்களின் பேச்சைக்கேட்டுநான் இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கவேகூடாது. பெரும் தவறு செய்துவிட்டேன். அவரது மனைவியென்பதை அவர் மறந்தாலும் அவர் என் கணவரென்பதை என்னால் மறக்கமுடியுமா? கணவனைத் தெய்வமாக மதிக்கும் பரம்பரையில் பிறந்தவள்தானே நான். தாலிகட்டி என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ள அவர் மறந்துவிட்டார். நீதிமன்றத்திலாவது அவர் உண்மையை ஒருமுறை ஒரேயொருமுறை ஒப்புக்கொள்ளுவாரென எதிர்பார்த்தேன். அந்த எண்ணமும் மண்ணாகிவிட்டது. நீதிமுன் நான் அவர் மனைவி என்பதை நிலைநிறுத்த ஆசைப்பட்டேன். அந்த ஆசை...? நிராசையாகிவிட்டது இல்லை நிராசையாகவில்லை. அவர்விரும்பினால்?... இன்னும் காலம் கடந்துவிடவில்லை. உடலுறவு கொண்டதை அவர் ஒரேயொருமுறை ஒப்புக்கொண்டாற் போதும். கடவுளே! நீயாவது அவர் மனத்தை மாற்ற மாட்டாயா அவர் மனதிற்குள் புகுந்து இதை ஒப்புக்கொள்ளச் செய்யமாட்டாயா? என்னுடன் அவர் வாழ்நாளெல்லாம் சேர்ந்து வாழவேண்டாம், நான்அவர் மனைவியென்பதை அவர்ஒருமுறை-ஒரேயொருமுறை ஒப்புக்கொண்டால்போதும். முருகா! நான் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன், நீயாவது உதவிசெய்யமாட்டாயா?''

இவ்வாறாக அவள் தெய்வசிந்தனையில் அவ்வேளை மூழ்கியிருந்ததாக அவள்மனதுக்குள் புகுந்துசுழியோடியதில் எனக்குப்புலப்பட்டது.

கோர்ட்சேவகனின்கம்பீரமான குரல் அவளது சிந்தனைக்கு முற்றுப்புள்ளியிட்டது.

மதிய இடைவேளைக்காகக் கலைந்த கோர்ட் மீண்டும் கூடியது.

நீதிபதி தமதுஆசனத்தில் வந்து அமர்ந்தார். வாதிதரப்பு வழக்கறிஞர் விசாரணையை ஆரம்பித்துவிட்டார்.

''வழக்காளி பாலரதியை அழைத்துக்கொண்டு நீர்பல தடவை படம் பார்க்கச் சென்றிருக்கிறீரல்லவா?''

''இல்லை, நான் செல்லவில்லை.''

''கடற்கரைக்குச்சென்றீர்தானே அவருடன்?''

''இல்லை''.

''ஓரியண்ட் ஹோட்டலில் இரண்டுநாள் அவருடன் உடலுறவு கொண்டதைநீர் ஒப்புக்கொள்கிறீரா? இல்லையா?''

''இல்லை, நான் உடலுறவு கொள்ளவில்லை'' -பாலையா கண்டிப்பான குரலில் பதிலளிக்கிறான்

' கனம்நீதிபதியவர்களே! எனக்கு நட்ட ஈடு வேண்டவே வேண்டாம் கல்லடி முருகன் கோயிலில் அவர் கற்பூரத்திலடித்துச் சத்தியம் செய்துவிட்டுப் போகட்டும்'' என்று, ஆவேசம் பிடித்த குரலில் பாலரதி எழுந்து கூறினாள். கோர்ட்டில் குழுமியிருந்தவர்களெல்லாம் பிரமித்து அவளைப் பார்த்தனர். நீதிபதி அவ

(12ம் பக்கம் பார்க்க)

''லீடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரீ சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காலமேஸ் (Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள-தமிழ் இலக்கியங்கள்

# நவின சிங்கள இலக்கியங்கள் புராதன இலக்கிய அந்தஸ்தை அடையவில்லை

ஈழத்துத் தென்னகத்தில் சிங்கள மரபில் பிறந்தவனுயிருந்தும் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்தில் நான் நிற்கிறேனென்ருல் அது தமிழ்தந்த பெருமையேயாகும். உண்மையாகவே தொன்மொழிக்குச் தொன்மொழியாய் பழமைக்குப் பழமையதாய் விளங்கும் மொழி தமிழ். சமஸ்கிருதமாகிய வடமொழியிலிருந்து இந்தியும் கிரேக்கலத்தின் பாஷைகளிலிருந்து ஆங்கிலமும் தோன்றிய போதிலும் அவற்றிற்குக் காரணமாய் இருந்த அம்மொழிகள் இன்றுபேச்சுவழக்கற்று இறந்த மொழிகளாகிவிட்டன. சாகுந்தலம், மேகதூதம் போன்ற வடமொழி நூல்களைத் தந்த ஆரிய மொழியின் தோற்றத்திற்கு அப்பாலும் ஆயிரமாயிரம ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த மொழி திராவிடம். அதாவது தமிழ் என்று சொன்னுல் மிகையாகாது.

ஒருகாலம் தமிழகம் லெமூரியா என்ற கண்டம் கடல் கொள்ளப்பட்ட பின்னும் அழியாக்குமரியாக தமிழ் வாழ்ந்துவரும் அதிசயத்துக்குமேலும் தமிழ்மொழிக்குப் பெருமை வேண்டுமா? சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன் போன்ற உலகப் பழமை மொழிகள், அவை பிறந்த நாடுகள் இருந்தும் இறந்த மொழிகளாயினவே. இத்தகைய வல்லமைமிக்க தமிழ்மொழி – தேவபாஷை எத்தகைய தீய சக்திகளாலும் மாளாது, வீழாது.

இற்றைக்குஇரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்



எழுந்த உலகப்பொது நூலாக இல்லற வேதமான மனித இலக்கியமான திருக்குறளைத் தந்த உலகப் புலவன் வள்ளுவன் தமிழில் கண்ட வளம் அதுவாகுல் அந்த வள்ளுவன் காலத் தமிழ் வளர்வதற்கு முன்னுல் எத்தனை முதுபெரும் புலவர்கள் வாழ்ந்திருக்கவேண்டும். புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, கீழ்க்கணக்கு நூல்கள்- இவைகளெல்லாம் காலத்தால் முந்தியவை. இவற்றுக்கும் முந்தியது தொல்காப்பியம். இந்தஇலக்கண நூலுக்கு இலக்கியங்கள் உண்டே. அவை தொல்காப்பியத்திற்கும் முற்பட்டவை; தொல்காப்பியத்திற்கும் முற்பட்ட அகத்தியம் என்ற பேரிலக்கணநூல் தமிழில் அகத்தியரால் எழுதப்பட்டது. இந்தப்பேரிலக்கணத்திற்கும் இலக்கியம் உண்டல்லவா? அது அகத்தியத்திற்கும் முற்பட்ட இலக்கியம் - நினைவுக்கு எட்டாத கால இலக்கியங்கள்.

டி. டி. நாணயக்கார

இந்துமகா சமுத்திரத்துடன் சேனநாயக சமுத்திரத்தை ஒப்பிடலாமா? ஒப்பிட இயலாவிட்டாலும் அதனை அதன் பயனளவில் பேசிக்கொள்ளலாம். தமிழ் இலக்கியங்களோடு சிங்கள இலக்கியங்களை ஒப்பிட்டுப் பேசுதல் அறியாமை. ஆனபடியால் சிங்கள இலக்கியங்கள் தோன்றிய கதையை மாத்திரம் சொல்கிறேன்.

புத்தபகவான் தோன்றிய காலம் நமக்கு நன்ருகத் தெரியும். அது இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன். ஆனுல் புத்தபகவானின் போதனைகள் இலங்கைக்கு வந்தமைஅதற்குப் பின்னரேயாகும். அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் பெளத்தமதம் இலங்கைக்கு வந்தபின்னரே அம்மத ஆகமங்கள் எழுதப்பட்டபாளிமொழி, இலங்கை மக்களுக்குத் தெரியவந்தது அதற்கு முன்னர் சைவமதமும் திராவிடமொழியும் இலங்கைக்குரியவையாக இருந்திருத்தல்வேண்டும். இதற்குச் சாட்சிமூத்தசிவன் போன்ற அரசர்கள். (அவரும் ஒரு தமிழர் அல்லவா?)

அக்கலத்தில் பாளி, சமஸ்கிருத மொழி வல்லுநர்களான பிராமணர்கள் தாம் புதிய மொழியாகிய சிங்கள மொழியை இலங்கையில் தோற்றுவிக்கக் காரணர்களாயிருந்தார்கள். கெளடில்யரின் அர்த்த சாஸ்திரத்தை பொருள்நூலைச் சிங்கள மொழியில் ஆக்கம்செய்தவர் பாணபத்திரன் என்ற பிராமணரே. இதுபோல வடமொழி நூல்கள் பல சிங்கள மொழியில் பெயர்க்கப்பட்டன. காளிதாசனின் சாகுந்தலம், மேகதூதம் ஆகியன அவ்வாறு பெயர்க்கப்பட்டன. வடமொழி இராமாயணத்தை அடியொற்றி ''ஜானகி கரணம்''போன்ற சிங்கள இலக்கியங்கள் உருவாயின. குமாரதாசன் போன்ற புலவர்கள் பாளி, சம்ஸ்கிருத பாஷைகளில் வல்லவர்களாகி சிங்கள இலக்கியங்களைத் தந்தனர். இன்னும் யசோதர காவியம் போன்ற பல நூல்கள் சிங்களத்திலும் தோன்றின. அந்நிய நாட்டினர்களாகிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வரவால் இந்த இலக்கியங்களையும் சிங்கள மக்கள் மறந்து இருந்த காலமும் ஒன்று உண்டு. இன்று சுதந்திர இலங்கையில் சிங்கள இலக்கியங்கள் மறுமலர்ச்சி பெற்றுள்ளன. ஆகியும் என்ன? சிறந்த புராதன இலக்கியங்களைப் பாதுகாப்பதைவிட நவீன நாவல் எழுத்தாளர் கூட்டமே பெருகிவருகிறது. சிறுகதை எழுத்தாளர்கள் ஓரளவு கிராமிய இலக்கியங்களுக்குப் புதுமெருகூட்டிவருகிருர்கள், நாட்டுப் பாடல்கள் நன்கு வளர்ந்து கிராமிய இலக்கியங்களாகின்றன. யதார்த்த இலக்கியங்களாக மாட்டின் விக்கிரமசிங்காவின் 'கம்பெரலியா' போன்ற சிறுகதைகள் மக்கள் இலக்கியங்களாக மலர்கின்றன. சரச்சந்திரவுடைய நாடகங்களும் சிறுகதைத் தொகுதிகளும் சிங்கள மக்களிடையே பெருமதிப்புப்பெறுகின்றன. உலக இலக்கியங்களாகிய பல சிறந்த நூல்கள் சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியாகிவருகின்றன.

கவிதைகள் விசேஷ இடம் பெற்று பல புலவர்களை அறிமுகஞ் செய்கின்றன. காவியங்கள் வேகமாக வளர்ந்துவரும் சிங்கள இலக்கிய சிருஷ்டிகள், இன்னும் புராதன இலக்கியத் தகுதிப்பாட்டை அடையவில்லையென்றே சொல்லலாம்.




காதல் நெஞ்சம்- ஆசிரியர்: வித்துவான் புலவர் வேல்மாறன் (பி. ஆனந்தராயர்) வெளியீடு: சிறி சண்முகநாதன் அச்சகம், யாழ்ப்பாணம். விலை: சாதாரண பதிப்பு ரூ. 3.50. பரிசுப் பதிப்பு: ரூ. 5-00.

ஒருகாலத்தில் தமிழ்நாட்டில் காதலும் வீரமும் இருகண்ணெனப் போற்றப்பட்டுவந்தன. அதனுல் தமிழினமும் சாதிகளற்ற இனமாய், சமயங்களற்ற இனமாய், அகிலத்திலேயே தலைசிறந்த இனமாய், முன்னேற்றப்பாதையை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது. இனி அக்காலத்தில் தோன்றிய அகநானூறு திருக்குறள் மற்றும் புறநானூறு போன்ற இலக்கியங்களும் இவற்றைப் பிரதிபலித்து உயர்ந்த பண்பாட்டின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன.

இடைக்காலத்தில் அன்னியருடைய வருகையால் இவைகளெல்லாம் தலைகீழாகமாற்றம் பெற்றன. கண்ணென மதிக்கப்பட்டு வந்த காதலும் வீரமும் புண்ணென ஒதுக்கப்பட்டன. தலைவன் தலைவியரின் காதல் வாழ்வுடன் (காமத்துப் பால்) தொடங்கி அவர்களின் துறவறத்துடன் (துறவறவியல்) முடிந்த திருக்குறள் தலைகீழாக மாற்றப்பெற்றது. அகநானூறு புறநானூறுகள் செல்வாக்கிழந்து ஆயிரங்கோடி சாதிகளையும் பல்லாயிரங்கோடி மூட நம்பிக்கைகளையும் பிரதிபலிக்கும் ஆபாச இலக்கியங்கள் உலாவத் தொடங்கின. தமிழினமும் தாழ்வுப்பாதையை நோக்கி பயணம் செய்யத் தொடங்கிற்று.

இப்பொழுது தமிழ்நாட்டிலே நிலைமை மாறிவிட்டது. ஆபாச இலக்கியங்களெல்லாம்அகல அகநானூறு திருக்குறள்போன்ற ஆதித் தமிழ் இலக்கியங்களெல்லாம் கதை கட்டுரை, கவிதைகளாக உருவெடுத்து அனைத்துத் தமிழ் மக்கள் நாவிலும் தவழத்தொடங்கிவிட்டன. திரைப்பட நாடகங்களாகித் திரும்பிய பக்கமெல்லாம் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. ஆனுல் ஈழநாட்டில் நிலைமை இன்னும் மாறவில்லை. அன்னியர் தம்ஆபாச இலக்கியங்களுக்குத் துதிபாடும் அவலநிலை- உமிக்குற்றிக் கைசலிக்கும் இழிநிலை-ஓயவில்லை. இந்நிலையில் இக்குறையை நிவர்த்தி செய்ய எமது நாட்டில் எழுந்த முதல் இலக்கிய நாவல் வித்துவான் புலவர் வேல்மாறனின் 'காதல் நெஞ்சம்' என்ருல் மறுப்பதற்கில்லை.

எழில் கொஞ்சும் 'கலைவாணி' இலக்கிய இதழ் மூலம் பல தமிழ் நெஞ்சங்களுக்கு சொந்தக்காரராகிய வேல்மாறனுல் இன்பம் கொஞ்ச உருவாக்கப்பட்ட இக்காதல் நெஞ்சம், ஆண் பெண்ணின் மெல்லிய மனப் போராட்டங்களை இக்கால மனேதத்துவ நிபுணர்களும் அதிசயிக்கும் வகையில் சித்தரிக்கும் வள்ளுவரின் காமத்துப்பாலை முதலிரு பகுதிகளிலும் இனிய நாவல் வடிவில்தருகிறது. 'அவனும் அவளும்' முதலாக ஆரம்பமாகும் இருபது அத்தியாயங்களும் காதலர் சந்திப்பு, அதனுல் அவர்களிடையே ஏற்படும் மாற்றங்கள், 'எங்கே கண்ணை மூடிக்கொண்டு மைதீட்டினுல் [illegible] வாரோ' என்றேங்கி மைதீட்டாமலும், சூடான பாலைக் குடித்தால் நெஞ்சுக்குள் உள்ள காதலர் வெந்துவிடுவாரென்று சூடான பாலைப் பருகாமலும் காதலி படும் அவதி, இரவிலும் பகலிலும் சந்திப்பதற்கு ஏற்படும் இடையூறுகள், அதனல் இருவரும் அடையும் ஏமாற்றங்கள், திருமணத்தையடுத்து அரசாங்கவேலை காரணமாக அவன் பிரிந்துவிட அவள் உயிரைக் கொல்லவரும் மாலைப் பொழுதுடனும், உறங்கமறுக்கும் கண்களுடனும், கண்சிமிட்டியும், கைநொடித்தும் வம்பு பேசும் ஊர்ப்பெண்களுடனும் நடத்தும் போராட்டங்கள், இரவிலே உறக்கம் வராமல் இருவரும்ஒருவரையொருவர் நினைத்துப்புலம்புதல் இறுதியில் இருவரும் ஒன்றுசேர்தல் என்றின்னேரன்ன சுவையான நிகழ்ச்சிகளை உணர்ச்சிபூர்வமாக உள்ளத்தைத்தொடும் வகையில் விளக்குகின்றன. முதல் அத்தியாயம் ''வானமெங்கும் வெள்ளிய நுரைகளைச் சிதறிச் சிந்தும் பல அருவிகள் வீழும் பாங்கானமலை'' என்ற அழகான வசனத்துடன் ஆரம்பமாகி... ''அவனுடைய அவ்அவாப் பெருக்கினைப் (ஆசைப்பெருக்கம்) போலவே மாலைக்காலத்துக் கதிரவனும் மேற்கு வானின் அடிப்புறத்தே கருகிக் கொண்டிருந்தான்'' என்ற அழகான வசனத்துடன் முடிகிறது. ஏனைய அத்தியாயங்களும் இவ்வாறே எழிலுடன் ஆரம்பமாகி எழிலுடன் முடிகின்றன.

இவ்விருபது அத்தியாயங்களுள்ளும் 'மீட்பு' என்ற அத்தியாயமே மிகச் சிறந்து விளங்குகிறது. 'துன்பமாலை' சிலப்பதிகாரத் துன்பமாலை போல் பயங்கரமும் துன்பமும் தருவதாகவிருக்கிறது. 'கனவும் நினைவும்' அத்தியாயத்தில் கனவுக்காட்சி கவினுறச் சித்தரிக்கப்படுகிறது. 'ஊடலும் கூடலும்' தலைவன் தலைவியரின் வேடிக்கையான உரையாடல்களுடன்கூடி உவகையைத் தருவதாக அமைந்திருக்கிறது.

இவைகளெல்லாவற்றையும்விட காதல்நெஞ்சத்தின் இறுதிப்பகுதியில் அடங்கிய அகநானூற்றுக் கதைகளே எளியதமிழுடனும் எதிர்பாராத திருப்பங்களுடனும் கூடிக் 'காதல் நெஞ்சத்துக்கு நிறைவைத் தருவதோடு நம்நெஞ்சத்துக்கும் நிறைவைத் தருகின்றன. அண்ணமலையில் அகநானூறு படிப்பிப்பதில் பேராசிரியர் இராமநாதன் பேர்போனவர். இதை அறிஞர் அண்ணவே சிதம்பரத்தில் ஒரு கூட்டத்தில் சொல்லி அகமகிழ்ந்திருக்கிருர். இவ்வாறு அண்ணவிடம் சர்டிபிக்கற் பெற்ற அப்பேராசிரியரும் பெருமைப்படும்வகையில் அவரது மாணவராகிய வேல்மாறனுல் பின்னப்பட்டிருக்கும் அக்கதைகள் 'தமிழில் சிறுகதைகள் இல்லையென்றும் அவைகளெல்லாம் வெளிநாட்டிலிருந்து தான் நம்நாட்டிற்கு இறக்குமதியாக்கப்பட்டனவென்றும் புலம்புவோரது வாயை அடைக்கவைப்பதாகவுமிருக்கின்றன.

இன்னும் கதை ஓட்டத்தைக் குறைக்கும் 'அவா' 'விசை' போன்ற கடுஞ்சொற்களும் கதைவிறுவிறுப்

(13ம் பககம் பார்கக)

நிரந்தர சேமிப்புக்கு
வருடம் 9 சதவீத வட்டி
கொடுக்கப்படும்.
இச்சேமிட்பை 30 நாள் அறிவித்தலில்
வருடம் 6 சதவீத வட்டியுடன்
எப்பொழுதும் எடுக்கலாம்.
மறுவிபரங்கட்கு:
தம்பி அன் கோ
வண்ணர்பண்ணை — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயப்படை வீரர்களின் நெஞ்சைக் கவர்ந்த கலைவிழா




நாற்புறமும் காடுகள் சூழ்ந்த விஸ்வமடு, விவசாயப்படை முகாமில் நடைபெற்ற ஈராண்டு நிறைவு விழா. என்றென்றும் மனதை விட்டகலாவண்ணம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### ஆண் நடனமாடினர்

பெண்களுக்கென்றே உரித்தான கலை நாட்டியம். அதை ஒரு ஆண் பெண்வேடமணிந்து ஆடுவதென்றால் யாவராலும் போற்றப்படக் கூடிய விடயம். ஆம்! விவசாயப்படை வீரன் செல்வன் து. ஜெயபாலன் பெண் வேடம் பூண்டு, அசல் நாட்டிய மங்கையாக, பரதநாட்டிய கீர்த்தனைகளுக்கும், சினிமாப் பாடல்களுக்கும் ஏற்றவாறு நடனமாடி- யாவர் மனதையும் கவர்ந்துவிட்டார். அவர் நடனமாடிய வேளையில் அவரை ஒரு பெண்ணாக - நாட்டிய ராணியாக நினைக்கத் தோன்றியதே தவிர, ஒரு ஆணாக நினைக்க முடியவில்லை. அப்படி இருந்தன அவர் நளினங்களும், ஆடல்களும்.

### நகைச்சுவை

விஸ்வமடுவிலேயிருந்து ''அப்பலோ-13'' என்றொருக்கற் புறப்பட்டதாகவும்- அது புறப்பட்ட வேளையில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து, எமக்கு நேர்முக வர்ணனையொன்றை அளித்து, தனது கற்பனைமூலமும் நகைச்சுவை மூலமும் யாவர் மனதிலும் நீங்கா இடம் பெற்றுவிட்டார் திரு. சிவலிங்கம் அவர்கள். அவருடைய கற்பனையும், நகைச்சுவையும் பாராட்டத்தக்கது.

### நாடகம்

''பட்டிக்காட்டுப் பணக்காரருக்கு- வாழ்க்கைப்படுகிறாள் நவநாகரீக மங்கை ஒருத்தி. அதே பணக்காரரிடம் வேலைக்காரனாகப் பணி புரிகின்றான் ஒரு வாலிபன்- நாகரீகம் தெரிந்தவன், கட்டிய கணவனிருக்க, வேலைக்காரனை நாடுகின்றது நங்கையினுள்ளம். கடைசியில் பணக்காரர் பரிதவிக்க- பறந்துவிடுகிறது ஜோடி'' இதுதான் கதை. வெண்ணிலா நாடகமன்றமளித்த ''சொல்லித்தான் தெரிய வேண்டுமா'' என்ற நகைச்சுவை நாடகம் யாவரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்துவிட்டது.

பட்டிக்காட்டுப் பணக்காரராக வி. அற்புதராஜா, வேலைக்காரனாக என். கந்தசாமி, நவநாகரீக யுவதியாக எஸ். கணேஷமூர்த்தியும், மற்றும் பொன்னுட் போன்றோரும் சிறப்பாக நடித்தனர். இந்நாடகம் 10-வது தடவையாக மேடையேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக இடம் பெற்ற ''கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை'' என்ற நகைச்சுவை நாடகம் சிறப்பாக அமைந்தது.

''தற்செயலாகச் சந்திக்கும் ஒரு பெண்ணை, மாந்திரீகமுறை மூலம் அடைய விரும்பும் வாலிபன். கடைசியில் கோட்டைவிட்டு, பரிதவிக்கின்றான். இதுதான் கதையின் அம்சம்.

### இன்னிசை

காட்டின் நடுவே கான மழை பொழிந்தன! விஸ்வமடு வெண்ணிலா இசைக் கோஷ்டியும். வளர்மதி இசைக் கோஷ்டியும்- இவ்விரு கோஷ்டிகளும் ''பைலா'' பாடல்களையளித்து தூங்கிவழிந்த வீரர்களையெல்லாம் உற்சாகமூட்டினரென்றால் மிகையாகாது.

—'கருணையூர் பாலன்'

### ஒரே மேடையில் மூன்று நாடகங்கள்

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் எதிர்வரும் வைகாசி மாதம் நடாத்தவிருக்கும் பெற்றோர் தின விழாவில் வித்தியாலய மாணவ மன்றத்தினரின் ''செத்தும் கொடுத்தான்'', ''இரத்தப் பரிசு'', ''உலகம் சிரிக்கிறது'' ஆகிய மூன்று நாடகங்கள் இடம்பெறவிருக்கின்றன. மேற்படி நாடகங்களை சைவப்புலவர் திரு நா. க. தங்கரத்தினம் ஆசிரியர் தயாரித்து அளிக்கிறார்.

---

# சளைக்காமல் எத்தனை மணிநேரமும் பாடுவார்!

## நம்நாட்டுக் கலைஞர் 'பூந்தான்' யோசேப்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆரம்பத்திலும் இறுதியிலும் முக்கியபாத்திரமேற்று 'பூந்தான்' யோசேப் சபையினரின் பாராட்டுதலைப்பெற்றுவிடுவார். இந்தக் கோஷ்டியில் சேர்ந்தவர்கள் எவருமே ஒருவருக்கொருவர் சளைத்தவரல்ல. ஒவ்வொருவருமே தனியாகக் கூத்துப்பழகக்கூடிய அண்ணாவிகளாக விளங்கியவர்கள். ஆனால் திரு. யோசேப் அவர்கள் எந்த நாடகத்திலும் சளைக்காமல் எத்தனை மணிநேரமும் பாடக்கூடிய பாங்குபெற்றிருந்தார்.

### மதமுத்திரை கிடையாது

இந்தக் கோஷ்டியினர் ஆடுகின்ற நாடகங்களுக்கும் ஏனைய ஊரிலுள்ளவர்கள் ஆடுகின்ற நாடகங்களுக்கும் வித்தியாசமுண்டு. யாழ்ப்பாணப்பகுதியில் பெரும்பான்மையாக நாட்டுக் கூத்துக்களைக் கத்தோலிக்கர்களே எல்லா ஊரிலும் ஆடிவந்தனர். ஆனால் பனைவளவுக்கோஷ்டி கத்தோலிக்கர்களாக இருந்தாலும் மதம் என்ற எல்லைக்குள் நின்று தமது நாடகங்களுக்கு மதமுத்திரை குத்தாது பல் வேறுபட்ட கதைகளையும் நாடகமாக்கி மேடையிட்டனர். அக்காலத்தில் வாசகரிடையே செல்வாக்குப் பெற்று விளங்கிய ''கருங்குயில் குன்றத்துக்கொலை'' என்ற நவீனத்தை வெகு புதுமையான முறையில் மேடையிட்ட பெருமை இவர்களுக்குண்டு. நாடகங்கள் மதப்பிரசாரமாகஅமையக்கூடாது என்ற கொள்கைக்கு இந்நாடகம் உதாரணமாக விளங்கியது.

இந்நாடகத்திலேதான் நாட்டுக்கூத்தில் அரைக்கு மணியாடை கட்டாமல் நல்ல உயர்ந்த ரகச்சேலைகளை நடிகர்கள் முதன்முதல்கட்டத்தொடங்கினர். அதுவரைகாலமும் இருந்துவந்தநடைமுறைக்கு இது முரணாக அமைந்த போதிலும்காட்சிக்குஅமைப்பாக இருந்தது.

### இரு வேடங்களில் சக்கைபோட்டார்

இந்த நாடகத்தில் திரு. ம. யோசேப் அவர்கள் இரு வேடங்களைத் தாங்கியுள்ளார். இரு பாத்திரமுமே இந்நாடகத்தின் ஜீவப்பாத்திரங்களாகும். ஒன்று இராஜகிரி ஜமீந்தார் மற்றது கொலைக்குற்றஞ்சாட்டப்பட்ட அனந்தன் (பின் பகுதி) என்பது.

திரு. யோசேப் தான் மாத்திரமல்லாது தனது உறவினர்கள் பலரையும் இந்த நாடகத்தில்மேடையேற்றினார். இவரது குடும்பத்தவருள் முக்கியமானவர்கள் யாபேரும் நாட்டுக்கூத்தில் நல்ல புலமையுடையவராக இருக்கின்றமைக்கு இவரது சேவையே அடிப்படைக்காரணமாகும்.

இன்றைக்கும் 65-வதுபராயத்தில் உள்ள இவர்மிகவும் உறுதியோடு நாடகத்தின் பித்துக்குலையாதவராக விளங்குவதற்கு இவரது ஒழுக்கமும் செயல்களுமே காரணமாகவுள்ளன.

### முதல் அனுபவம்

தனது 21-வது வயதில் அதாவது 1926-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ம் திகதியன்றுதான் இவர் முதன் முதல் மேடையேறினார் சுண்டிக்குழியில் கோவில் கொண்டிருக்கும் பரிசுத்த யுவானியார் ஆலயத்தில் அன்னாரின் பெயர்கொண்டதான 'சஞ்சுவான்' நாடகத்தில் முதன் முதலாக இவர் இராஜவேடம் தாங்கினார். அன்றுமுதல் நாடகத்திலேயே இவர் ஒரு அரசன்தான் என்பதை இரசிகர்களுக்கு மெய்ப்பித்துவிட்டார்.

அன்று தொடங்கி இன்று வரையுள்ள 45 ஆண்டுகளில் இடைவிடாது நாடகங்களில் நடித்துவருகின்றார். நாட்டுக் கூத்தின் பாரம்பரியம் அற்றுவிடக்கூடாது என்பதால் 1930-ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள பல கிராமங்களிலும் இளைஞர்களையும், ஆர்வம்மிக்க பெரியவர்களையும் ஒன்று திரட்டி தானே அண்ணாவியாராக நின்று பழக்கி மேடையேற்றியிருக்கிறார்.

கட்டைக்காடு, வெத்திலைக்கேணி, தாளையடி, முகமாலை, செம்பியன்பற்று. நாகர் கோவில், குடத்தனை. மணற்காடு, பருத்தித்துறை, சக்கோட்டை. பலாலி, மயிலிட்டி, மாரீசன்கூடல், மாதகல், ஊர்காவற்றுறை, சில்லாலை. பெரியவிளான், சிறுவிளான், இளவாலை, வசாவிளான், ஒட்டகப்புலம், அச்சுவேலி, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, மன்னார், முருங்கன், திருகோணமலை ஆகிய இடங்களில் மேடையேறி நாடகமாடியதுமட்டுமல்ல, பல இடங்களில் நாடகங்களைப் பழக்கி சிறந்த அண்ணாவியார் என்ற பெருமையையும் பெற்றுள்ளார் திரு. ம. யோசேப்.

### சங்கிலியனாக....

1960-ம் ஆண்டு யாழ்ப்பாணம் பிரதேச கலாமன்றம் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடாத்திய கலைவிழாவில் யாழ்ப்பாணத்துக் கடைசி மன்னனான சங்கிலியன் நாடகத்தில் சங்கிலியனாகத் தோன்றி தனது திறமையையும் புலமையையும் வெளிக்காட்டினார்.

இக்கலைவிழாவை உள்நாட்டமைச்சராக விளங்கிய மைத்திரிபாலசேனநாயக்கா ஆரம்பித்துவைத்தார். நாடகத்தைப் பார்ப்பதற்கு உள்நாட்டமைச்சருடன் அக்காலத்திய அமைச்சர்களான திரு, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா. திரு. கலுகல்ல ஆகியவர்களும் வந்திருந்தனர்.

அமைச்சர்களின் பாராட்டுதலுக்கிலக்கான திரு. ம. யோசேப் அவர்களுக்கு அக்காலத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபதியாக விளங்கிய திரு.ம.ஸ்ரீகாந்தா தங்கப் பதக்கமும் நற்சாட்சிப்பத்திரமும் வழங்கி நாட்டுக் கூத்துக் கலைஞன் என்று இவரைப் பாராட்டியுள்ளார் 1963-ல் யாழ் பிரதேச கலாமன்றம் திறந்த வெளியரங்கில் நாடகப் போட்டியில் இராசவேடந் தாங்கி முதலிடம் பெற்றமைக்கும் 40 வருட சேவைக்குமாக 'நாடக சிரோன்மணி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

### வானொலியில்.--

யாழ்ப்பாணத்திலும் நாட்டுக்கூத்து அண்ணாவி மரபில் வளர்ச்சி பெற்றுவருகின்றதென்பதை 1961-ம் ஆண்டு தொடங்கிஇலங்கை வானொலியில் அவ்வப்போது இவர் பங்குபற்றிய நாட்டுக் கூத்து நிகழ்ச்சிகள்மூலம் தெரியவைத்துள்ளார் இந்நிகழ்ச்சிகளின் போது பல மணித்தியாலங்கள் எடுக்கக்கூடிய நாடகங்களைச் சுவை குன்றாது சுருக்கி ஒரு மணித்தியாலத்துக்கு ஒலியின்மூலம் வெளிப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

1965-ம் ஆண்டு யாழ் நகரமண்டபத்தில் முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம் தலைமையில் யாழ் நாடக கலாலயத்தார் நடாத்திய கூட்டத்தில் நாட்டுக் கூத்துக் கலாநிதியென்ற கௌரவப் பட்டம் வழங்கி வாழ்த்துக் கொடுத்தனர்.

அண்மைக்காலத்தில் இவரது கவனம் ஒருநல்ல நாடகப்பரம்பரையை யாழ்ப்பாணத்தில் உருவாக்கவேண்டுமென்பதாகும். ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி மாணவர்கள், சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்களுக்கு முறையே எஸ்தாக்கியார், சங்கிலியன் ஆகிய நாடகங்களை இவர் பழக்கியுள்ளார்.

இவர் நடித்த நாடகங்களுள் பிரபலம்பெற்றவையாகவுள்ளவற்றுள் சஞ்சுவான், எஸ்தாக்கி, கருங்குயிற்குன்றத்துக்கொலை, விஜயமனோகரன் ஆகியவை யாழ்ப்பாணத்தில் மிகப்பிரபலம் பெற்றுள்ளன.

நாட்டுக்கூத்து ரசிகர்கள் இவருக்குரிய சொந்தப்பெயருக்குப் பதிலாக 'பூந்தான்' என்ற பட்டப் பெயரைக் குறிப்பிட்டே கதைப்பார்கள். இந்தப் பெபர் ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணம் என்னஎன்று அவரிடம் விசாரித்தபோது அதற்காக ஒரு தனிக்கதையையே நமக்குக் குறிப்பிட்டார்.

இவர் இளமைக்காலத்தில் தேவசகாயம்பிள்ளை யென்ற நாடகத்தில் மன்னனாகக் கொலுவீற்றிருந்தார். அச்சமயம் நீலகண்டன் என்னும் மந்திரி சத்திய வேதத்தைத் தழுவினான் என்பதை இன்னோர் மந்திரி பாடல் மூலம் தெரிவிக்கின்றான்.

அந்தப்பாடல் இதுதான்:

செங்கன முடிபுனைந்து
செகம்புரக்கும்
தேர்வேந்தே
இங்கேயோர்
செய்தி என்றன்
இருசெவியாற்
கேட்டறிந்தேன்
சங்கரனார்
சமயமதை
தான்பழித்து
நீலகண்டன்
பொங்குசத்ய
வேதம்
''புகுந்தான்''
அறிவீரே

இந்தப் பாடலின் ஈற்றடியிலே உள்ள புகுந்தான்என்ற பதத்தை பூந்தான் என்று தவறுதலாக மந்திரி உச்சரித்தார். இந்தப் பூந்தான் என்னும் பெயர் இவருடன் ஒட்டிக்கொண்டுவிட்டது.

இப்பொழுதும் திரு. யோசப்பை பூந்தான் யோசெப் என்று குறிப்பிட்டாற்றான் விளங்கும். அடக்கமும் பண்பும் கொண்ட திரு. யோசப் அவர்கள் இன்றைக்கும் நாடகம் பற்றிய கனவுடையாராகவே இருக்கின்றார். இவர் ஒரு நகை வியாபாரியாக இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமிகு வடக்கில் பொருள் வளம் காண்போம்

—மயிலை சிவ. சண்முகதாசன் —

தொன்று தொட்டு சமுதாயங்கள் சிந்தனைப் போக்கிலும் செயல்போக்கிலும் பொருளாதாரப் போக்கிலும் காலத்திற்குக் காலம் மாறிவருகின்றன. உலகம் முழுவதிலும் முதலாளித்துவ தொழிலாளித்துவ போராட்டங்களும் பொருளாதாரத்தால் அடிமைப்படுத்தப்பட்ட இனங்கள் யாவும் அரசியலிலும் அடிமைகளாய் விளங்குவதை நாம் காணலாம். இதனால்தான் ஆசியஜோதியாய் விளங்கியவரும் ஏழைமக்கள்மீது என்றும்பேரன்புகொண்டவருமான நேரு அவர்கள் ''அரசியல் சுதந்திரம் அடைந்துவிட்டால் மட்டும் போதாது; பொருளாதாரத்திலும் தன்னிறைவு பெறவேண்டும் அப்பொழுதுதான் உண்மையான சுதந்திரத்தை நாம் அடைந்தவர்களாக முடியும். என்று கூறினார். சமுதாய மாறறத்தை நாம் எண்ணங்களினாலோ, கற்பனைவாதத்தினாலோ மாற்றிவிடமுடியாது திட்டமிட்ட பொருளாதார அமைப்பால் சமுதாயத்தை மாற்றி ஒரு சிறந்த சமுதாயததை உருவாக்கவேண்டும் இயற்கை வளம்பெற்ற நாடுகள் பல திட்டமிட்ட பொருளாதார அமைப்பு இல்லாத காரணத்தால் வறுமையில் வாடுகின்றன. ஆனால் வளமற்ற சிறுநிலப்பகுதிகள் கூடத் திடங்கொண்ட மனிதஉழைப்பாலும் கூட்டுறவாலும் திட்டமிட்ட அமைப்பாலும் பொருளாதாரத்தில் வளர்ந்து நிற்பதைக் காணமுடிகிறது.

இந்நிலையில் நாம் எமது வாழும் நிலமாகிய வடமாநிலத்தின் நிலவளத்தாலும் கடல்வளத்தாலும் உருவாக்கக்கூடிய பொருள் வளத்தை உருவாக்கும் வழிவகைகளை ஆராய்ந்து கண்டு அவற்றிற்கேற்ப விரைவான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும், வடமாநிலத்தில் வளங்களில்லாமலில்லை: அவற்றைச் சரியானமுறையில் நாம் பயன்படுத்தவேண்டும்.

பொருளியல் புவியியல் அறிஞர்களின் ஆய்வினை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் வடமாநிலத்தில் திட்டமிட்ட பொருளாதார அமைப்பால்பொருளாதாரத்தைச் சிறப்பாக உருவாக்க முடியும் என்பதை அறியலாம்.

ஒரு நாட்டினதோ அல்லது மாநிலத்தினதோ பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு நிலம், மனிதசக்தி, மூலதனம் ஆகிய மூன்றும் தேவை. விவசாயத்திற்கும் கைத்தொழில் பேட்டைகள் அமைப்பதற்கும் வேண்டிய நிலப்பகுதிகள் இம்மாநிலத்தில் உண்டு. உழுது உழைக்கும் மனிதசக்தியும் தொழிற்சாலைகளில் சிறப்போடு பணிபுரிய அறிவின் சக்தியும் இங்கு வாழும் மக்களிடையே நிறைய உண்டு. மூலதனத்தை உடையோரும் இங்கு வாழ்கின்றனர். ஆனால் உழைக்கும் மக்களில் பலருக்கும் உழைப்பதற்குச் சொந்தமாய் நிலமில்லை. மூலதனமுடையோரும் நாட்டின் பொருள் வளத்தைக் கவனியாது தம் பொருள் வளத்தைக் கவனித்துத் தம் பணவளத்தைப் பெருக்கும் நோக்கோடு வேறு மாநிலங்களை நாடிச் செல்கின்றனர். எனவே இவையாவும் சரியானமுறையில் வளமாநிலத்துக்குப் பயன்படுத்தப்படுமேயானால் இம்மாநிலம் செழிப்புற்றுத் திகழமுடியும்.

இலங்கையை மன்னர்கள் ஆண்டகாலத்தில் வடபகுதியில் விவசாயம் சிறப்புற்றிருந்தது. குளங்கள் வெட்டப்பட்டு நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டன. ஆனால் அவையாவும் இன்று வளமிழந்து பயனற்றுக் கிடக்கின்றன.

## நெல் உற்பத்தி

விவசாயத்தில் நாம் நெல்லுற்பத்தியை முதலாவதாக எடுத்துக் கொள்வோம். நெல் விவசாயத்திற்கு முதலில் நீர்வளம் வேண்டும். ஆனால் வடமாநிலம் நீண்டகாலம் உலர்வலய சூழலில் இருப்பதனாலும் அப்பருவத்திற்குப்பின் நெல்லுற்பத்தி செய்வதற்கு நீர்த்தேக்கங்கள் அவசியம் ஆகையாலும் வடமாநிலத்தில் செய்யக்கூடிய மழை நீரைக் கடலுக்குச் செல்லவிடாது தடுப்பதோடுகுளங்கள் மூலமும் நீரைத் தேக்கி வைக்கவேண்டும். தூர்ந்துபோயிருக்கும் குளங்கள் திருத்தப்படவேண்டும். இப்படி நாம் செய்யாதவிடத்து நெல்லுற்பத்திக்கு நீர் இல்லாது போய்விடும்.

இன்னும், அரசாங்கம் குடியேற்றத் திட்டங்களை அமைத்து காணிகளைப் பங்கீடு செய்கையில் காடுகளை முற்றாக அழிந்துவிடாது கவனிக்கவேண்டும். அழிக்கும் காட்டு மரங்கட்கேற்ப புதிய மரங்களை நட்டு வளர்க்கவேண்டும். மழை பொய்க்காது பெய்வதற்கு காடுகள் மிக்க அவசியமாகும்.

# நெல் உற்பத்தி

### உபஉணவு வகை

அடுத்து நாம் உபஉணவுப் பொருட்களில் கவனம் செலுத்தவேண்டும். வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு முதலியவற்றை இங்கேயே உற்பத்திசெய்ய முடியும். 1966-67-ம் ஆண்டுகளில் கால போகத்திற்காகிய சின்ன வெங்காயம், மிளகாய் பயிர்ச்செய்கை இலக்கிற்கு மிதமிஞ்சியது. 1967-ம் ஆண்டில் உருளைக்கிழங்கின் கொள்முதல் 99 தொன்னால் அதிகரித்தது. மலையாளப் புகையிலைவியாபாரத்தை நிறுத்தி உப உணவுப் பொருட்கள் பயிரிட்டதனால்சிறந்தபலனை நம்மால் பெறமுடிந்தது. வெங்காயம் 2170 ஏக்கரிலும், மிளகாய் 5700 ஏக்கரிலும். உருளைக்கிழங்கு 157 ஏக்கரிலும் 1968-ம் ஆண்டில் பயிரிடப்பட்டது. உற்பத்தியில் நிதானம் தேவை. ஒருபொருளுக்குத் தேவை அதிகரிக்கும்போதும் விலை அதிகரிக்கும்பொழுதும் குறிப்பிட்ட அப்பொருளையே தேவைக்கதிகமாக நம்மவர் உற்பத்தி செய்து குவித்து வருகின்றனர். இந்த அதிக உற்பத்தியினால் சந்தையில் அவற்றின் விலை வீழ்ச்சியடைகின்றது. அத்துடன் மற்றப் பொருட்களின் உற்பத்தி குறைந்து அவற்றின் விலை உச்சமடைகின்றது. எனவே நாம் பணத்துக்காக பொருட்களை உற்பத்தி செய்யாமல்மக்களின்தேவைகளை நோக்கமாகக்கொண்டு அவற்றை உற்பத்திசெய்யவேண்டும், மற்றும் மக்களின் அத்தியாவசிய தேவைகளை உற்பத்திசெய்வதைவிடுத்து பணப் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்வதையும் கட்டுப்படுத்தவேண்டும்.

### பனைச்செல்வம்

வரண்ட பிரதேசத்தின் கொடை பனைச்செல்வம். ஈழம் முழுவதற்கும் இது பயன் தருவதாகும். பனையின் வேரிலிருந்து குருத்தோலை வரை பயனுள்ளது. உற்பத்திச் செலவில்லாமல் பயன்தருவது. இதுமண்ணைப் பாதுகாப்பது மட்டுமன்றிக் காலநிலை விருத்திக்கும்பயன்படுவது. எனவே பனைகளை எங்கெங்கு உற்பத்தி செய்ய முடியுமோ அங்கெல்லாம் உற்பத்தி செய்யவேண்டும். அவற்றை நன்கு செய்கை பண்ணும் திறன்பற்றியும் ஆராயவேண்டும். பனைமரத்தில் தளபாடங்களும், பழத்திலிருந்து சொக்கலேட் மற்றும் உணவுவகைகளும் பட்டையிலிருந்துகாகிதமும் பனங்கொட்டைத் தும்பிலிருந்து மெத்தை முதலியனவும் ஊமலைத் தூளாக்கி ஓடுகள், அஸ்பெஸ்ரஸ் முதலியனவும், கருப்ப நீரிலிருந்து சீனி முதலியனவும் செய்யலாம். கள்ளைப்போத்தலில் அடைத்து பிறநாடுகட்கு ஏற்றுமதிசெய்யலாம்.

எனவே யாழ்க்குடாநாட்டின் வருமானத்தின் பெரும் பகுதியை இது பெற்றுத் தரும்.

### கடற்செல்வம்

வடமாநிலத்தின் பெரும் பகுதி கடலால் சூழப்பட்டிருக்கின்றது இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் உலக மக்கள் பெருக்கத்திற்கு கடல்படு பொருட்கள்தான் உணவாகப் பயன்படவேண்டிவருமென்று ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார அறிஞர்கள் கருதுகின்றனர். கடலிலிருந்து கிடைக்கும் மீன் முதலியன மட்டுமன்றி பாசி போன்றனவற்றிலும் உணவுப்பொருட்களை உற்பத்திசெய்ய மேலைநாடுகளில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. எமது பகுதியைப் பொறுத்தவரையில் மன்னார் கடலில் முத்துக் கிடைக்கின்றது. முத்துக்குளிப்பதில் யப்பான் [illegible] கையாளும் நவீனமுறையைநாமும்இங்கு கைக்கொண்டு செயல்படலாம். கடலட்டையை சீனா, யப்பான், மலேசியா போன்ற பகுதிகட்கு அண்மைக்காலத்தில் நாம் ஏற்றுமதி செய்கின்றோம். கடல் அட்டையைப் பதனிட்டு மேலும் அதிக ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய வாய்ப்புக்களைச் செய்யவேண்டும். வடகடலில் 'பீற்று பாங்' போன்ற மீன் அதிக உற்பத்திபெறும் இடங்கள் உண்டு. கரையோர மீன்பிடியையும் ஆழ்கடல் மீன்பிடியையும் நவீன கருவிகள்கொண்டு வளம்பெறச் செய்யவேண்டும். கடலில் ஏற்படும் கொந்தளிப்புகளுக்கும் சூறுவளிகளுக்கும் மீனவர் உட்பட்டு அழிவுறாமல் மீன்பிடியில் ஊக்கம் பெறும் வகையில் தொழிற்சாதனங்கள் நவீனமாக்கப்படவேண்டும். பிடிக்கப்படுகின்றமீனைக்குளிர்சாதன மூலமோ அல்லது தகரத்தில்அடைத்தோ பிறமாநிலங்களுக்கும் நாடுகளுக்கும் ஏற்றுமதிசெய்யலாம். பேசாலை, மயிலிட்டிபோன்ற இடங்களில் மீன்பிடித்துறைமுகங்களமைக்கப்பட்டு, பேசாலையிலும், காரைநகரிலும் மீன்கள் தகரத்தில் அடைக்கப்படுதல்போன்று இன்னும்பல தொழிற்சாலைகளை நிறுவக்கூடிய அளவுக்கு கடல்வளமும் மீன்வளமும் இங்கு உண்டு. இதனை நாம் அரசாங்கத்தை எதிர்பாராமல் கூட்டுறவு இயக்கங்கள் மூலம் சிறப்பாக நடத்தமுடியும்.

### உடை

நமக்குத் தேவையான உடைகளைப் பெறுவதற்கு துணுக்காய், முருங்கன், முறிகண்டி போன்ற பகுதிகளில் பருத்தி விளைவிக்கமுடியும். இப்பொழுது நமது மாநிலத்தின் பல பகுதிகளில் கைத்தறி நிலையங்களும்நெசவாலைகளும் மின்தறி நிலையங்களும் அமைக்கப்பட்டுவருகின்றன. இவற்றிற்குவேண்டிய பருத்தியும் நூலும் பெரும்பாலும் பிறநாடுகளிலிருந்தே இறக்குமதிசெய்யப்படுகின்றன. மேற்கூறப்பட்ட இடங்களில்நாம்பருத்தியை உண்டு பண்ணுவோமேயானால் ஓரளவு நமக்குத் தேவையான பருத்தியைப் பெறமுடியும்.

வாழைத் தண்டிலிருந்து செயற்கைப்பட்டுநூல் செய்யலாம். இதுபற்றி நாம் ஆராய்ந்து செயல்படவேண்டும்.

நாகர்கோவில், வல்லிபுரக்கோவில் போன்றபகுதிகளில் கண்ணாடித் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருட்கள் நிறைய உண்டு. ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதற்குஅனுமதியோ அவற்றை உற்பத்திசெய்வதற்குவேண்டிய உற்பத்தியுபகரணங்களோ பெறமுடியாமலிருக்கின்றது. இதற்கானதடைகள் பலவும் நீக்கப்பட்டால் பலர் இத்தொழிலில் மூலதனமிடத்துணிந்து முன்வருவர்.

அரேபியப் பிரதேசங்களில் வருவாயைக் கொடுத்துக்கொண்டிருக்கும் பெற்றோல் தென்னிந்தியாவில் இருக்கக்கூடிய எரிபொருட்கிணறுகட்கு ஓடிக்கொண்டிருக்கும் நரம்புகள் வடமாநிலத்துக்கூடாக ஓடிக்கொண்டிருப்பதை உலகநிபுணர்கள் ஆய்ந்து சொல்லியிருக்கின்றனர். தொண்டைமானாறு, மன்னார் போன்ற பிரதேசங்களில் இவ்வளமதிகமுண்டாம். இவற்றை நாம் சரியான முறையில் ஆய்வுசெய்து பயன்பெறும் வகையில் செயல்படுத்துவோமேயானால்வடமாநிலத்தின் பொருள்வளத்தைக் கேட்கவும் வேண்டுமா?

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இவற்றை மேலும் அபிவிருத்தி செய்தால் வருவாய் அதிகரிக்கப்படலாம். இவற்றையெல்லாம் விட பலாலிவிமானத்தளம், காங்கேசன்துறைத் துறைமுகம் ஆகியன சிறப்பான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டால் எவ்வளவோ வருவாயை நாம் பெறக்கூடியதாக இருக்கும்.

உப்புக்காக நாம் பல கோடி ரூபாய்களைப்பிறநாடு நாடுகளிடம் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இந்நிலை மாற்றப்படும்வகையில் சாவகச்சேரித் தொகுதியிலுள்ள கச்சாய் என்னும் இடத்தில் 20 கோடி ரூபா செலவில் உப்பளம் ஒன்று

உருவாக்கப்படவிரு
தெரிந்ததே. இந்த
ளம் நிறைவுபெற்றுமு
யடையும் காலத்து நா
பைப் பிற நாடுகளி
இறக்குமதிசெய்யவேன்
அவசியமே இராது.

இவையெல்லாவற்
விட வடமாநிலத்தில்
தொழில்பேட்டைகள்
வாக்கப்பட வேண்
மிகஅவசியம். இத
துணையாக நீர்மின்சார
டம் அவசியம்தேவை.
வலிகங்கைத்திட்டம்
மத வேறுபாடின்றித்
திருப்பப்பட்டு வடமா
துக்கும் வருமேயானால்
துறையில் நாம் ஓர
பயனடையலாம்.

வட[illegible]குதியில் [illegible]முந்
செய்[illegible] கணிச[illegible]ன
வுக்குப் பயன்தரும்
நம்பலாம்.

வடமாநிலமக்கள்
போக்கையும் பிறநாடு
பொருளாதாரவளத்
அதற்கு அடிப்படையா
கின்ற மனித ஒற்றுமை
யும் நாட்டுப்பற்றையும்
தானித்து செயல்ப
டும். நமது சமுதாய
முன்னேற்றும் பணியில்
னின்று உழைப்போமா

# தேம

...தேமது
உலக

என அவாவுற்றான் ஓ
ஞன்

... பழங்கல
மகிமை இ
திறமான
வெளிநாட்
செய்தல்

# புதுயுகம்
# புரட்சி

வோல்கா நதிக்கரையில் இப்பொழுது உல்யானேவ்ஸ்க் என்றழைக்கப்படும் சிம்பிர்ஸ்க் நகரில், 1870-ம் ஆண்டு ஏப்ரல்22-ம் நாள் விளாதிமிர் இலியிச் லெனின்(உல்யானேவ்)பிறந்தார். இவரது தந்தை இலியா நிக்கோலேயேவிச் உல்யானேவ் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.

லெனினது தாய் மரியா அலெக்ஷாந்திரோனேவ் பிளான்க், ஒரு மருத்துவரின் மகள்; கிராமத்தில் வளர்ந்தவராயினும் உயர்ந்த கல்வி அறிவைப் பெற்றவர்: அவருக்குப் பல மொழிகள் தெரியும்; இசையில் விருப்பம் உண்டு; ஆர்மோனியம் நன்றாக வாசிப்பார்.

### உலகமறிந்த இளைஞன்

லெனினது சிறுபிராயம் வாலிபப் பருவ ஆண்டுகள்- அதாவது 3-ம் அலெக்ஸாண்டரின்ஆட்சிக் காலம்-ரஷ்யாவின் வரலாற்றிலேயே மிகவும் சோதனை மிகுந்த காலமாகும். நரோத்னயாவோல்யாக் கட்சியின் அங்கத்தினர்கள் 2-ம் அலெக்ஸாண்டரைக் கொலைசெய்த பின்னர் எதேச்சாதிகாரம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றிற்கெதிரான ஒவ்வொரு கிளர்ச்சியும் ஜார் அரசாங்கத்தால் நசுக்கப்பட்டு வந்தது. விபரங்களை ஆராயும் சிந்த

ஞ்வாதியான இந்த
ஞனின் மனத்தில் இச்
நிலைகள் ஆழப்பதிந்
தொழிலாளர்கள், விவ
களின் தாங்கமுடியாத
வாழ்வையும் ரஷ்யப்பிர
கள் அல்லாத இதர ம
கொடுமைப்படுத்தப்ப
கேவலமாக நடத்தப்ப
தையும் லெனின் கண்ட
தன் மனத்தை அழுத்
இக்கேள்விகளுக்கான ப
களைப் பெற முயன்
ரஷ்ய உலகப் புனைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுகிறது

…தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்

அவாவுற்றான் ஓர் அமரகவி. அவாவுற்ற இக்கவி

… பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமை இல்லை;
திறமான புலமையெனில்
வெளிநாட்டோர் அதை வணக்கஞ்
செய்தல் வேண்டும்

ாக்கப்படவிருப்பது
நதே. இந்த உப்ப
றைவுபெற்றுமுழுமை
ம் காலத்து நாம்உப்
பி ற நாடுகளிலிருந்து
மதிசெய்யவேண்டிய
மே இராது.

யெல்லாவற்றையும்
மாநிலத்தில் கைத்
ல்பேட்டைகள் உரு
ப் பட வேண்டியது
சியம். இதற்குத்
க நீர்மின்சாரத்திட்
வசியம்தேவை. மகா
கைத்திட்டம் இன,
றுபாடின்றித் திசை
ப்பட்டு வடமாநிலத்
வடுமேயானால் இத்
ல் நாம் ஓரளவு
டயலாம்.

குதியில் முந்திரிச்
கணிச ன அள
ப் பயன்தரும் என
ம்.

ா நிலமக்கள் உலகின்
கயும் பிறநாடுகளின்
ாதாரவளத்தையும்
அடிப்படையாயிருக்
மனித ஒற்றுமையை
ட்டு பற்றையும் அவ
து செயல்பட வேண்
மது சமுதாயத்தை
ற்றும் பணியில் முன்
உழைப்போமாக.

என ஆசைப்பட்டான். அவன் அன்று கண்ட இக்கனவு இன்று நனவாகி அவனது ஆசையும் நிறைவேறிக் கொண்டுவருகிறது.

பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனி, பிரித்தானியா, ஒல்லாந்து, பெல்ஜியம், செக்கோஸ்லாவக்கியா, ருஷ்யா, மலேஷியா, பர்மா, இத்தாலி, சுவீடன், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஹங்கேரி, யப்பான், போர்த்துக்கல், ஸ்பெயின், சுவிற்சர்லாந்து முதலிய உலக நாடுகளில் இன்று நம் தேமதுரத் தமிழோசை முழங்குகிறது. இந்நாட்டவர்கள் தமிழ் மொழியின் திறமான புலமையால் அதை வணக்கம்செய்கிறார்கள்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முதல், இடை, கடையென முச்சங்கங்கள் மதுரையில் இருந்தன. இச்சங்கங்களின் மூலம் புலவரும், புரவலரும் ஒன்று சேர்ந்து தமிழை ஆராய்ந்தனர்; வளர்த்தனர். அன்று ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் ளே யே தமிழ்மொழி பரவி வளர்ச்சியடைந்திருந்தது. இன்றும் தமிழை ஆராயவும் வளர்க்கவும் அம் முச்சங்கங்கள் போன்றதோர் சங்கம் நிறு

வப்பட்டுள்ளது. அதுதான் அனைத்துலக தமிழாராய்ச்சிச் சங்கம். இது தமிழின் வளர்ச்சிக்காகக் கடந்த சில ஆண்டுகளாக ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. பிரான்ஸிய அறிஞரான திரு. ஸோன்பிலியோசா என்பவரைத் தலைமையாகக் கொண்டது இச்சங்கம். பேராசிரியர் ஸோன் பிலியோசா 'எகோல் பிரான்சைஸ் டீ எக்ஸ்றீம் ஒறியன்'ரின் அதிபராகவும் 'பரிஸ் கொலிஜ் டீ பிரான்ஸி'ன் பேராசிரியராகவும் கடமையாற்றுவதோடு புதுச் சேரியிலுள்ள இந்திய கலாச்

மிழாராய்ச்சி மகாநாடு நடைபெறவிருக்கிறது. இம்மகா நாடுகளின்மூலம் தமிழின் தொன்மையும அதன் பெருமையும், கலையும் கலாச்சாரமும், சொல்வளமும் கருத்தாழமும் மேலை நாடுகளில் பரவியுள்ளன. பரவுவதற்கும் ஏதுவாகவுள்ளது.

மேற்குறிப்பிட்ட நாடுகள் பலவற்றின் பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழியும், தமிழ்க்கலாச்சாரமும் இன்று பாடங்களாகப் போதிக்கப் படுகின்ற அளவுக்கு உள்ளதை அறியுமிடத்து உலகில் தீந்தமிழாம் நம் செந்

கலாச்சாரத்தாலும் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து அவர்களது மொழியில் ஈடுபாடு உடையவர்களானார்கள். தமிழர்களது தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்றுல்தான் தம் மதத்தை அவர்கள் மொழிவாயிலாக இலகுவாகப் பரப்பித் தம் அரசியல் ஆதிக்கத்தையும் ஸ்திரப்படுத்தலாம் என நினைத்து தமிழ்மொழியைக் கற்ற இந்தப் பிறநாட்டவர்களைத் தமிழ்மொழி விடுவதாயில்லை தமிழன்னையை அணிசெய்யும் அகப்பொருள், புறப்பொருள் நூல்களும், திருக்குறள்,

டன. இவைகள் தென்னிந்தியா, வங்காளம் ஆகிய இடங்களில் கத்தோலிக்க குருமார்களால் வாங்கப்பட்டவையாகும்.

இப்பகுதிகளில் தம் மதத்தைப் பரப்பும் நோக்கமாக வந்த கிறிஸ்தவ பாதிரிமார்களும் கத்தோலிக்ககுருமார்களும் அப்பகுதிமக்களின் மொழி, கலாச்சாரம் மட்டுமன்றிப் பொதுவாக இந்திய கலாச்சாரத்தைக் கற்பதில் அதிக அக்கறைகாட்டினர். வண. பிதா ரூபேட்டி நொபிலி, வண பிதா பெஸ்க்கி ஆகிய இரு இத்தாலிய குருமார்களும் தமிழை இலக்கியங்களையுருவாக்கும் நோக்கத்தோடு ந்ன்கு கற்றார்கள் தமிழ் ற்ற ஐரோ பியர்களுள் இலக்கியநோக்குடன் கற்ற இவர்கள் இருவரும் முன்வைத்தெண்ணத்தக்கவர்கள்.

## திறமான அதன் புலமையால் வெளிநாட்டார் போற்றுகின்றனர்

சார பிரான்ஸிய கல்வி நிறுவனத்தின் அதிபராகவும் கடமையாற்றுகிறார். இச்சங்கம் 3 வருடங்களுக்கொரு முறை மகாநாடுகூடி பல தேசத்தறிஞர்களையும்கூட்டி தமிழாராய்ச்சி செய்துவருகிறது. 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மலேஷியத் தலைநகரான, கோலாலம்பூரில் ஒரு மகாநாடும் அதையடுத்து 1968-ம் ஆண்டு சென்னையில் ஒரு மகாநாடும் நடாத்தி அம்மகாநாடுகளில் தமிழர்தம் கலை, கலாச்சாரத்தையும் அவர்கள் வரலாற்றையும், தமிழ் மொழியின் அமைப்பையும் இன்னும் இது போன்ற பல்வேறு அம்சங்களை பல நாட்டறிஞர்கள் ஆராய்ந்தனர். இவ்வாண்டு பிரான்ஸிய தலைநகரான பாரிஸில் 3-வது தமி

தமிழின் வளர்ச்சி எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இந்த நாடுகளில் தமிழ் மொழிக்கல்வி எப்போது எவ்வாறு ஆரம்பமானது; தற்போது எந்த அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது என்பனபோன்றவிடயங்களை நாம் ஆராய்ந்தறிந்திருத்தல் நம்மொழிக்கும்நமக்கும் நன்மைபயப்பதாகும்.

இந்த அந்நிய நாடுகளில் பல தம் மத அரசியல் காரணங்களுக்காக தமிழ் மக்களைத் தம் வழிக்குக் கொண்டுவருவதற்காகத் தமிழ் மொழியில் அதிக ஆர்வம் காட்டினார்கள். என்றாலும் காலகதியில் அம்மொழியின் சிறப்பாலும் அதைப்பேசுபவர்களது

நாலடியார் போன்ற அறநூல்களும், பக்திச்சுவைநனி சொட்டும் பக்தி இலக்கியங்களும், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்களும், மற்றும் தத்துவச்சார்பு இலக்கியங்களும் தம்மைக்கற்க முயற்சித்த இவர்களைத் தம்பால் ஈர்த்துக்கொண்டன. இதன் கார

### — குணம் —

ணமாகவே பிற்காலத்தில் தமிழ்மொழி, அதனைப்பேசுபவர்களதுகலை, கலாச்சாரம் போன்றவற்றை மேனாட்டார் ஆர்வமுடன் கற்று அவர் தம் நாடுகளில்தமிழ்க் கல்விக்கும் இடமளித்துள்ளார்கள்.

3-வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு இவ்வாண்டுபிரான்ஸியத்தலைநகரான பாரிஸ்நகரில் நடக்கவிருக்கிறது. இவ்வேளையில் எமது கல்வித்துறையில் தமிழ்க்கல்விக்கும் தமிழர் கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்து இவற்றைத் தம் பல்கலைக்கழகங்களில் ஒரு பாடமாகவும் கொண்டுள்ள உலகநாடுகளின் தமிழ்க்கல்வி பற்றி ஆராயுமிடத்து 3வது மகாநாடு நடக்கவிருக்கும் பிரான்ஸ்நாட்டின் தமிழ்க் கல்வி பற்றி ஆராய்தல் பொருத்தமுடைத்தாகும்.

இந்தக் காலத்தில்தான் பிரான்ஸியபாதிரிமார்களும் பாரிஸுக்கு தமிழ் இலக்கணங்களையும் மற்றும் நூல்களையும் சேகரித்தார்கள். இவ்வாறு சேகரிப்பில் ஈடுபட்ட பிரான்சியபாதிரிமாரில் வணபிதா டி. போர்கே என்பவரும் ஒருவராவார். இவர் தமிழ்ச்சொற்களை ஆராய்ந்து 1101 பக்கங்கள் அடங்கிய தமிழ்—பிரான்ஸ் மொழி அகராதியொன்றைத் தொகுத்தார்.

இந்த ஆக்கவேலையைத் தொடர்ந்து இந்திய பண்பாடு கலாச்சாரம் பற்றிய கல்வி, தமிழ்மொழிக்கல்வி ஆகியவற்றில் பிரான்ஸியர் கூடுதலாக ஈடுபடலாயினர். 18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அதாவது 1756ம் ஆண்டு ஜோசெப் டீகைனெஸ்என்னும் பிரான்ஸியர் கிழக்காசியா பற்றிய வரலாற்று நூலொன்றைப் பிரான்ஸிய மொழியில் எழுதினார். இவரது இந்தவேலைக்கு உதவிசெய்யுமுகமாக புதுச்சேரியிலுள்ள தமிழறிஞரான மரிதாஸ் பிள்ளை என்பவர் பாகவதத்தைப் பிரான்ஸிய மொழியில் பெயர்த்து இவருக்கு அளித்தார். இவரது இந்த மொழிபெயர்ப்பு நூல் ஐரோப்பாவிலுள்ள பல வேறு அறிஞர்களின் தொடர்பையும் பெற்று பாரிஸில் 1788-ம் ஆண்டு

# …கம் காணப்புறப்பட்ட …சி வீரன் லெனின்

பான இந்த் இளைஞர்
மனத்தில் இச் சூழ்
ஆழப்பதிந்தன.
ாளர்கள், விவசாயி
ாங்கமுடியாததுன்ப
யும் ரஷ்யப்பிரஜை
லாத இதர மக்கள்
மப்படுத்தப்பட்டு
ாக நடத்தப்பட்ட
லெனின் கண்டார்;
னத்தை அழுத்திய
விகளுக்கான பதில்
பெற முயன்றார்;
லகப் புனைகதைக

இளைஞர் சிறந்தனவற்றையும் புரட்சிகர ஜனநாயக இலக்கியத்தையும் லெனின் படித்தார்.

### இளமை வாழ்வு

இளவயதிலேயே லெனின் பெருந்துன்பத்தை அனுபவித்தார். 1886 ஜனவரியில் ஐம்பத்து நான்குவயதே ஆகியிருந்த அவரது தந்தைதிடீரெனகாலமானார். இதற்கு ஓராண்டு கழித்து, ஜாரை கொலைசெய்வதற்கான

முயற்சியில் ஈடுபட்டதற்காக அவரது தமையன் அலெக்ஸாண்டர், ஸெயின்ட பீட்டர்ஸ்பர்க்கில் கைது செய்யப்பட்டார்; இதை அடுத்து அவரது சகோதரி அன்னாவும் கைதுசெய்யப்பட்டார். இரசாயனத்திலும் விலங்கியலிலும் சிறந்து விளங்கிய திறமைமிக்க மாணவர் அலெக்ஸாண்டர் உல்யானேவ் தனது இருபத்தோராவது வயதில் 1887


மே மாதம் தூக்கிலிடப்பட்டார்.

தமையனின் தூக்குத்தண்டனை, லெனினுக்குப் பேரிடியாகவிருந்தது; ஆனால் அவரது புரட்சிகரக் கருத்துகளை அது அசைக்கவில்லை: மாறாக அது முன்னைவிட, கொடுமை சுரண்டல் ஆகிய அடிமைத் தளைகளிலிருந்து மக்களைவிடுவிப்பதற்கான போராட்டத்தின் அவசியத்தை அவருக்கு வலியுறுத்திற்று எனலாம். பயங்கரவாதப் பாதையும் தனிநபர் போராட்டக் கொள்கையும் பின்பற்றக் கூடாதவை என அப்பொழுதே லெனின் கண்டார் மக்களின் சுதந்திரத்தையும் சந்தோஷத்தையும் பயங்கரமானவழிகளில் பெற முடியாது என்பதை அவர் உணர்ந்தார்.

### கல்வியில் திறமை

அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும்பெரிதும் துயரம் தோய்ந்த அந்த நாட்களில், லெனின் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் பட்டம் பெற்றார். பட்ட நற்சான்றிதழ் பெறுவதற்கான பரீட்சைகளை மிக அருமையாக எழுதியிருந்தார். தூக்குத் தண்டனை பெற்ற அலெக்ஸாண்டரின் தம்பிக்கு எவ்வாறு தங்கப் பதக்கம் … என்று பெருநிலில்

[12ம் பக்கம் பார்க்க]



# பிரான்ஸில் தமிழ்க்கல்வி

### 18-ம் நூற்றாண்டில் ஆரம்பம்

பிரான்ஸில் தமிழ்க்கல்வி இந்த 20-ம்நூற்றாண்டிலோ அல்லது 19-ம் நூற்றாண்டிலோ ஆரம்பமானதல்ல. 18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்திய நாகரிகம் பற்றிய முறையான கல்வி அங்கு ஆரம்பமானது. இதற்கு முன்னர் இந்தியாவை அவர்கள் இந்தியப்பிரயாணிகள் மூலமே அறிந்திருந்தார்கள். இந்தவேளையில் பாரிஸிலுள்ள அறிஞர்கள் சிலர் கிழக்காசியாவிலுள்ள மக்களது இலக்கியங்களை அவர்களது இலக்கணம், அகராதி முதலியவற்றோடு சேகரிப்பது எனத்திட்டமிட்டார்கள். ரோயல் நூல் நிலையப் பொறுப்பாளரான அபி பிக்னன் என்பவர் தமது பெருமுயற்சியால் கிழக்காசிய நூல்கள் பலவற்றைச் சேகரித்து அவற்றின் பெயர்ப்பட்டியல் ஒன்றையும் இலத்தீன் மொழியில் 1739 ம் ஆண்டு தயாரித்து வைத்திருந்தார். இந்த சேகரிப்பிலுள்ள இந்தியதஸ்தாவேஜுகளில் அநேகமானவை தமிழ் மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் காணப்பட்

ஃபவுச்சர் டீ ஒப்சன் வில்லி என்பவரால் பிரசுரிக்கப்பட்டது தமிழ், இலத்தீன், சமஸ்கிருதம், பிரான்ஸ் ஆகிய மொழிகளில் சிறந்த பாண்டித்தியம் பெற்ற மரிதாஸ்பிள்ளையின் இடையறு முயற்சியின் லேயே ஐரோப்பியர்களுக்கு தமிழ் இலக்கியச் செல்வம் வழங்கப்பட்டு அதன்மூலம் இந்திய கலாச்சாரம் பற்றிய அறிவு அவர்களால் பெறப்பட்டது. பிரான்ஸிய குருவான வணபிதா கோடுக்ஸுக்கு சமஸ்கிருதம் இலத்தீன் ஆகிய இருமொழிகளுக்கும் உள்ள ஒற்றுமையை எடுத்து முதன்முதல் விளக்கியவரும் மரிதாஸ் பிள்ளையேயாவர் இவர் பாகவதத்தைவிட வானசாஸ்திர நூல், பஞ்சதந்திரம், பாரதத்தின் ஒருபகுதி ஆகியவற்றையும் பிரான்ஸியருக்கு அவர்களது மொழியில் மொழியாக்கம்செய்து உதவியுள்ளார்.

### தமிழில் வானசாஸ்திரத்தையும் கற்றனர்

இலக்கண இலக்கிய நூல்களை மட்டுமன்றி பிரான்

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## விவசாயத்தில் ஈடுபட்டு நாட்டை முன்னேற்றுவோம்

நிலவளம் மிக்க ஒரு நாட்டின் செல்வநிலை உயர்வடைய விவசாயத்திலும் உயர்ந்த மார்க்கம் எதுவுமில்லை. விஞ்ஞான ரீதியில் தகுந்த நவீன சாதனங்களைப் பயன்படுத்தி நாம் விவசாயம் செய்தால் எமது தேவைக்கு மிதமிஞ்சியிருக்கும் உணவை ஏற்றுமதி செய்யலாம். இம்முறையை அனுஷ்டித்து மேல்நாடுகள் தங்கள் செல்வத்தை பெருக்கி வரும் பொழுது, நாம் உணவு நிலையில்கூட பின்தங்கியுள்ளோம். அது மட்டுமன்றி நெய்க்குடத்தை நாடிச்செல்லும் எறும்புகளைப் போல சீனு, பர்மா போன்ற நாடுகளிடம் உணவுக்காகதேடிச் செல்ல வேண்டியதாயிற்று. இந்நிலையை நீக்க வேண்டுமென விரும்பி அரசாங்கம் தானுகவும், தனியார் முயற்சியின் மூலமும் உணவுற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி எடுத்துவருகிறது.

நம் நாட்டிலே மக்களின் தொகை அதிகரிக்கின்றது. ஆனுல் உணவு அதிகரிக்கவில்லை. அரசனுக்கும், உலகில் ஓரங்குலம்தானும் பற்றற்று முற்றுந்துறந்த முனிவருக்கும் உணவே முக்கிய தேவையாகும். எறும்பு முதல் யானை ஈருகவுள்ள எல்லா உயிர்களும் தத்தம் உணவுகளை தாமே தேடிக்கொள்கின்றன. ஆகவே மனிதராகிய நாம் உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் உணவைத் தேடிக்கொடுக்கும் உழவுத்தொழிலில் ஈடுபட வேண்டும். படையெடுக்கும்வீரரையும், பாட்டிசைக்கும் புலவரையும் விட ஏரடிக்கும்உழவரே ஏற்றமாக வாழ்கின்றனர்.

உழுதுண்டு வாழ்வோர் இல்லங்களில் நெல்லும், புல்லும், வரகும், தினையும், எள்ளும், கொள்ளும், பயறும், படுப்பும் நிரம்பி இருக்கும். கழனியிற் பணிசெய்யும் காளை மாடுகளும், காலையும், மாலையும் பாலைப்பொழியும் கறவைமாடுகளும் தொழுவங்களில் நிறைந்திருக்கும். ஆதலால் பாலும், தயிரும், நெல்லும், சோறும் உழவன் வீட்டில் நிறைந்திருக்கும்.

மன்னுயிர் நிலைபெறுவதற்கு இவ்வுழவுத்தொழில் இன்றியமையாததாய் இருப்பதுமன்றி பொய், களவு முதலான குற்றங்களடங்காத சிறந்ததொழிலாகவும் இருக்கின்றது. ஆனுல் கற்ற வாலிபர்கள் காற்சட்டை அணிந்து உத்தியோகம் செய்ய வேண்டுமென அலைந்து திரிகின்றனர். உழவுத்தொழிலோ அடிமைத்தனமற்ற சுதந்திரமான தொழிலாகும்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு
பின்செல்வர்''.

ஒருவர் பிற தொழிலாற் பொருளெய்தியவிடத்தும் அவர் உணவின் பொருட்டு உழவரிடத்துசெல்லவேண்டுமாதலில் பிறதொழில்கள் உழவுத்தொழிலுக்கு பின்னவையே.

''சுழன்றும் ஏர்பின்னது உலகம்'' என்ருர் திருவள்ளுவர். ஏனைய தொழிலுக்கு பழுதுவரும்; ஆனுல்உழவுத் தொழிலுக்குப் பழுது வராது. எவ்வளவுதான் செல்வத்தோடு சந்தோஷமாக வாழ்ந்தாலும் உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை. ஒளவையார் கொன்றவேந்தனில் 'சீரைத் தேடின் ஏரைத்தேடு', ''தொழுதூண் சுவையிலும் உழுதூண் இனிது'' என்று சிறப்பாகக் கூறியுள்ளார். ஆகவே வஞ்சியிளம் விவசாய வீரர்கள் மகாவலி கங்கையெனும் மங்கையை அழைத்துவர வேண்டும். இளம் காளையரனைவரும் தோள்தட்டி விவசாயம் செய்ய வேண்டும். நாடு நன்மையடையும். பசி பிணி நீங்கும். நாட்டில் சந்தோஷமும், சமாதானமும் நிலை பெறும்.

ஆர். எம். எம்.
அந்தோனிப்பிள்ளை

### சேர் விக்டர் ஏ. எச் ஹோர்ஸ்லி

(1857—1916)

இவர் இங்கிலாந்தில் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். தனது ஆராய்ச்சிப் பாதையில் பல துன்பங்கள் வந்துற்றபோதும் அவைகளைப் பொருட்படுத்தாது வைத்தியத் துறையில் தீவிரமாக ஈடுபட்டார். இத்தீவிர ஆராய்ச்சிக்கு வழிகோலியது விஞ்ஞானி டேவிட் பெறியரின் கண்டுபிடிப்புக்கள். தொடர்ந்து ஆராய்ந்து ஈற்றில் மூளை சம்பந்தமான வியாதிக்குப் புதிய முறை சிகிச்சையைக் கண்டுபிடித்தார்.

## கிழக்கு வெளுக்கிறது!

மேலைப்புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி—

கொக்கரக்கோ கொக்கக்க்கோ கோழி கூவுது
கொஞ்சுமுலகக் கோலங்காண எழவும் சொல்லுது
-கொக்கரக்கோ

கங்குலிருள் கலையக்கிழக்கு வெளுத்துக்காணுது
தங்கநிகர் பரிதிவானில் கதிரும் பரப்புது
-கொக்கரக்கோ

தந்தனத்தோம் தந்தனத்தோம் தாளம் கேட்குது
பந்தனைக்குப் பள்ளியெழுச்சி பாடிக் கேட்குது.
-கொக்கரக்கோ

குக்கூக்கூ குயிலும்கூவிக் கூடிக் களிக்குது
கொஞ்சுகுரல் அஞ்சுகமும் பேசிப்பயிலுது
-கொக்கரக்கோ

கஞ்சமலர்க் கதிரைக்கண்டு களித்து மலருது
அஞ்சியதோ யாரறிவார் அல்லி கூம்புது
-கொக்கரக்கோ

நெஞ்சமது நினைவும் தொடர நேரம் காட்டுது
விஞ்சுபுகழ் வினைவிளைவை விரும்பியாடுது.
-கொக்கரக்கோ

# விஞ்ஞான உலகின் தந்தையர்

—தொகுப்பு: கி. அல்பிறட் பங்கிராஜ் —

### கலென்

(கி. மு. 129)

வைத்திய மகோன்னத புருஷர்களுள் கலென் முன்னணியில் நிற்கும் மாபெரும் விஞ்ஞான மேதை. உடலமைப்பு இயலின் தந்தை. மாபெரும் அறிவு மேதை என்பவை இவருக்கு வழங்கப்பட்ட அநேக பட்டங்களில் சில. ''உடலமைப்பு அப்பியாசங்கள்'' என்ற அவரது வைத்தியக் கலைக்களஞ்சியம் வைத்தியத் தொழிலுக்கு ஊன்றுகோலாகவும் 1500 ஆண்டுகட்குமேல் வைத்தியத் தொழிலின் அதிகாரபூர்வமான நூலாகவும் திகழ்ந்து வந்தது. ஆசியா மைனரில் செல்வஞ் செழித்த குடும்பத்தில் பிறந்த கலென் தந்தையினது அறிவாற்றலாலும் புத்திமதிகளாலும் சிறந்த முறையில் கல்வி பயின்று ரோமாபுரியில் வாள் யுத்தத்தில் காயப்பட்டவருக்குச் சிகிச்சை செய்யும் தொழிலில் ஈடுபட்டார். கலென் தனது பதவி நிலையைப் பயன்படுத்தி உடலமைப்பைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்திவந்தார். கலென் உடலமைப்பைப்பற்றி இருபது நூற்தொகுதிகளை எழுதினுர் இருதய அமைப்பு, நரம்பு மண்டலம். இரத்த ஓட்டம் போன்றவற்றைப் பற்றி ஆராய்ந்து எழுதியிருந்தார். அவரது கருத்துக்களில் ஒரு சிலவே பிற்காலத்தில் திருத்தத்துக்குட்பட்டன.

### யோசப் ஜே தாம்சன்

(1856—1940)

காற்று மூலம் மின்சாரம் செல்லக்கூடும் என்பதை முதன் முதலாகக் கண்டுபிடித்த விஞ்ஞானி தான் யோசப்ஜே தாம்சன். இவர் இங்கிலாந்தில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து பிற்காலத்தில் கணிதமேதையாகவும், விஞ்ஞானியாகவும் திகழ்ந்தரர். இவர் 1906-ல் பெளதீக ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்ருர்.

### பெஞ்சமின் பிராங்க்லின்

(1706—1790)

நவீன உலகத்து இடியேறு தாங்கியைக் கண்டுபிடித்தவரும், மண்ணெண்ணை அடுப்புகளைத் திருத்தியமைத்தவரும் மின்சார ஆராய்ச்சியாளரும். மாவிஞ்ஞான மேதையுமாகத் திகழ்ந்தவர் பெஞ்சமின் பிராங்லின். அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் தாய் தந்தையருக்கு பதினைந்தாவது குழந்தையாகப் பிறந்தார். நீச்சலில் வெகு சமர்த்தர். இவரது 10-வது வயதோடு படிப்பு நின்றுவிட்டது. பன்னிரண்டாம் வயதில் அச்சுக்கோப்பாளராகச் சேர்ந்தார். பதினுருவது வயதில் தாவர உணவின் சிறப்பறிந்து மாமிச உணவை நீக்கினுர். தமது சுயமுயற்சியினுல் முன்னேற்றப் பாதையில் காலடி வைத்து பல ஆராய்ச்சிகள் செய்து மேற்கூறியதனைக் கண்டுபிடித்தார். இவர் விஞ்ஞானிமட்டுமல்ல, தத்துவஞானியாகவும் விளங்கினுர்.

### கொன்ராட் ரொஞ்சன்

(1845-1923)

மருத்துவத் துறையில் சக்தி வாய்ந்த ''எக்ஸ்'' கதிர்களை அறிமுகப்படுத்திய விஞ்ஞானிதான் ஒல்லாந்து தேசத்தைச்சேர்ந்த வில்ஹெம் கொன்ராட் ரொஞ்சன். தாயில்லம் ஒல்லாந்து. தகப்பனில்லம் ஜெர்மனி. ஒல்லாந்தில் ஆரம்பக் கல்வியைத்தொடர்ந்த ரொஞ்சன் சிறுவயதிலேயேபௌதீகவியல் சம்பந்தமான பாடங்களில் கூடிய ஆர்வம் காட்டினுர். இத்துறையில் சிறந்து விளங்கிய சிறுவனை அவனது பெற்ருேர் சுவிட்சிலாந்து பல்கலைக்கழகத்துக்கு அனுப்பினுர்கள். ஆங்கு கலாநிதி பட்டம் பெற்ருர்.

அதைத்தொடர்ந்து ஒரு கல்லூரியில் பௌதீக ஆசிரியராகக் கடமையாற்றினுர். மேலும் பதவி உயர்வினுல் பேராசிரியராகப் பணியாற்றி ஒய்வு நேரங்களில் ஏதேனும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார். இக்காலத்தில் மைக்கல் பரடே தான் கண்டுபிடித்தவைபற்றியும் அதைப்பற்றிய தன் கருத்தையும் வெளியிட்டிருந்தார். இதை ஆதாரமாக வைத்து முக்கியமாக ஒளித்துறையில் ஆய்விலிறங்கிய ரொஞ்சன் ஈற்றில் பலகடினமான பொருள்களையும் ஊடுருவிச்செல்லும் எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்து உலகசாதனை ஏற்படுத்தினுர்.

### லூயுகி கல்வானி

(1737—1798)

பொதுவாக விஞ்ஞான மேதைகள் எல்லோரும் இளமையிலே வறுமைப்புயலில் சிக்குண்டு அல்லலுற்றனரென்பதை அவர்களது வாழ்க்கை ஏட்டைப்புரட்டும்போது தெரிகிற உண்மை. (ஒரு சில விஞ்ஞானிகளைத்தவிர) அதே வறுமையில்வாட்டம்பெற்ற லூயிகி கல்வானி ஏழ்மையில் பிறந்து பிற்காலத்தில் உலகம்போற்றும் மாபெரும் விஞ்ஞானியாகத் திகழ்ந்தார். இத்தாலியைப் பிறப்பிடமாகக்கொண்ட லூயிகி உலோகச்சேர்க்கையில் மிகவும் சக்திவாய்ந்த மின்சாரத்தை உண்டுபண்ணமுடியும் என்ற கோட்பாட்டை உலகுக்கு அளித்தார். அவரது ஆராய்ச்சிகள் அடங்கிய வெளியீடு உலகத்தையே பிரமிக்கவைத்தது

### ஜே எச வி ஹோப்

(1852—1911)

இளமையிலேயேகல்வியில் அதிஊக்கம் செலுத்திய ஹோப் பிற்காலத்தில் இரசாயனப் பேராசிரியராகவும், ஆராய்ச்சியில் மாமேதையுமாகத் திகழ்ந்தார், இவரது ஆழ்ந்தகருத்துக்களை இன்றுள்ள விஞ்ஞான நிபுணர்கள்கூடப்பின்பற்றுகிருர்கள். 1901-ல் இரசாயன இயலுக்கான நோபல்பரிசை இலகுவில் பெற்றுக்கொண்ட ஹோப் ஒரு டச்சுக்காரர் ஆவர். அவரது அரிய ஆராய்ச்சிகள் அடங்கிய வெளியீடு இன்று விஞ்ஞான இலக்கியங்களாகத் திகழுகின்றன.

### ஹம்பிரி டேவி

(1778—1829)

விஞ்ஞானஉலகுக்கு பிரிட்டனை அறிமுகப்படுத்திய விஞ்ஞானமேதைகளில் முதலிடம் வகிப்பவர் ஹம்பிரி டேவி, இன்றைய சத்திர சிகிச்சைகளுக்குஇன்றியமையாத மயக்கமருந்து கண்டுபிடிப்புக்கு அடிகோலியவர் ஹம்பிரிடேவிதான். இவரது ஆய்வுத்திறன் ஒன்றை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. பல முனைகளில் பலவாறு ஆராய்ச்சியிலிறங்கி றுதியாக சுரங்கத்தொழிலாளரின் வரப்பிரசாதமாக அவர்களை ஆபத்து அணுகாமல் இருக்கும் வண்ணம் சுரங்க விளக்கைக் கண்டுபிடித்தார் (1815). இதுவுமல்லாமல் எரிமலைகளின்குமுறல், அவை உண்டாவதற்காய காரணங்களை அறியும் அவாவிலும் அநேக ஆராய்ச்சிகள் அவரால் மேற்கொள்ளப்பட்டன. இவரது புகழ் என்றும் மங்காதிருக்க டேவியின் விளக்கு'' என்ற நாமம் இன்றும் இருந்துவருகிறது.

## தேமதுரத்—

(9ம் பக்கத் தொடர்ச்சி)

ஸியர்தமிழ் வானசாஸ்திரத்தையும் கற்க பெரு விருப்புக்கொண்டனர். பிராஸ்ஸிய வானசாஸ்திரிகளில் ஒருவரான லா ஜெண்டில் பிரான்ஸிலிருந்து தமிழ் வானசாஸ்திரம் கற்கப் புதுச்சேரிக்கு வந்தார். புதுச்சேரியில் சிலவருடகாலம் தங்கியிருந்த இவர் மரிதாஸ் பிள்ளை, மல்லியப்பா ஆகிய இருவரிடமும் தமிழ் வானசாஸ்திரத்தைக் கற்ருர். வானசாஸ்திரத்தை நன்கு கற்றுச்சென்ற லாஜென்ரில் தாம் எழுதிய வொஜேஜ் என்னும் நூலில் வானசாஸ்திரத்துறையில் தமக்குக் குருவாக இருந்தவர்களான மல்லியப்பா, மரிதாஸ் பிள்ளை ஆகிய இருவரையும் குறிப்பிட்டெழுதியிருந்தார். இவரைத் தொடர்ந்து காசினி, ஜேன்சில்வெயின், பெய்லி ஆகியோரும் இந்திய வானசாஸ்திரத்தில் நாட்டங்கொண்டு கற்றனர்.

மற்றுமொரு பிரான்ஸிய அறிஞரான சொனரைட் என்பவருக்கு மரிதாஸ்பிள்ளை தமிழ்நாட்டின் மதங்கள் கலாச்சாரம், விழாக்கள், கொண்டாட்டங்கள் ஆகியன பற்றி விபரமான தகவல்களைக் கொடுத்தார். லா ஜெஜென்டில், டிகைனெஸ் போன்று சிறந்த அறிஞராக இல்லாவிடினும் சொரைட் தனக்குக் கிடைத்த மேற்படி தகவலை விரிவாக அழகாக வர்ணித்து வெளியிட்டார். கல்கத்தாவில் 'ஆசிய சங்கம்' (Asiatic Society) நிறுவப்படும். வரை தென் இந்தியாவின் கலாச்சாரத்தை அறிந்தால் இந்திய கலாச்சாரத்தை அறிந்துகொள்வதற்கு நிகரானதென்ற கொள்கை நிலவியது.

கல்கத்தாவில் ஆசிய சங்கம் நிறுவப்பட்டதும்பிரான்ஸியர் தம்மொழியைக் கற்பதிலும்பார்க்க ஆரியமொழியாகிய சமஸ்கிருதத்தில் நாட்டங்கொண்டனர். இதுவரை தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா முதலிய தென்பகுதிகளின் மொழி கலை கலாச்சாரம் ஆகியவற்றைக் கற்றவர்கள் வட இந்திய கலாச்சாரம் மொழி ஆகியவற்றைக் கற்றனர். இதனுல் தமிழ் மொழிக்கல்வியின் முக்கியத்துவம் பிரான்ஸியர் மத்தியில் சிறிது குறைந்தது. எனினும் தென் இந்திய வேதாந்த தத்துவ அறிஞர்களான சங்கரர், இராமானுஜர், மாதவர் ஆகியோர் சமஸ்கிருதத்தில் பல சமய இலக்கியங்களை உருவாக்கியிருந்தனர். அவைகளையெல்லாம் பிரான்ஸீய அறிஞர்கள் கற்றுர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகனின் உத்தியோகம் மட்டும் தான் முக்கியமா?

## குணத்திற்கும் நகைச்சுவைக்கும் முதலிடம் என்கிறார் பீட்டர்காப்

நம்நாடு பல்வேறுதுறைகளில் இன்று முன்னேறியிருந்தாலும் சில சில விடயங்களில் முன்னேற்றத்துக்குப்பதில் பின்னேற்றமே அடைந்துவருகிறது எனலாம். உதாரணமாக ஆண் பெண் திருமண விடயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். நம் நாட்டில் இது ஒரு வியாபாரம்.

திருமணம் என்றவுடன் சம்பந்தப்பட்ட மாப்பிள்ளைக்கு என்ன உத்தியோகம் என்று கேட்பார்களே ஒழிய அவனின் குணம் எப்படி, அவன் புத்திசாலியா, சமூகத்தில் எல்லோருடனும் சகஜமாகப் பழகக்கூடியவனா என்பது போன்ற நல்லம்சங்கள்பற்றிக் கேட்கும் பெற்றோர்கள் மிகக்குறைவு. அவனின்உத்தியோகத்துக்கு மதிப்பேயொளிய குணம் நடைகளுக்கல்ல. ஆனால் ஜெர்மன் நாடுகளில் இதற்கு மாறான தன்மையையே நாம் காணுகிறோம். தமக்கு வாழ்க்கைத் துணையைத் தேடும் பெண்கள் அழகையும்உத்தியோகத்தையும்ஒரு பக்கத்தில் ஒதுக்கிவிட்டு தங்களுக்குவரும் கணவன்மார்கள் நல்ல குணமுடையவர்களாகவும், நல்ல புத்திசாலியாகவும், நகைச்சுவையுடையவர்களாகவும் இருக்கவேண்டுமென விரும்புகிறார்களென மேற்கு ஜெர்மனியின் சமுதாய ஆராய்ச்சியாளரான பீட்டர் காப் தற்கால சமூகத்திலுள்ள மனிதப் போக்கை ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்நங்கையர் தங்கள் கணவன்மார் இன்ன வேலையில் தான் இருக்கவேண்டும் என்பதுபற்றி பொருட்படுத்துவதில்லை. தங்களைக் காப்பாற்றக்கூடிய அந்தஸ்து இருந்தால்போதும் என்ற மனப்பான்மையுடையவர்களாகவே பெரும்பான்மையினோர் உள்ளனர்.

இந்த ஜெர்மன் நாட்டு நங்கையர்களின் பண்பு நம் நாட்டு நங்கையரிடத்தும் ஏற்படுமானால் மணவாழ்வு சிறப்பாகவமையும் தங்கள் பிள்ளைகளின் நல்வாழ்வை விரும்பும் பெற்றோர்களும் உத்தியோக கணவனைத் தங்கள் பெண்ணுக்குத் தேடிக் கொடுப்பதற்காக தங்களிடம் உள்ள சகல பொருள்களையும் விற்றும் கடன்பட்டும் சீதனம் என்ற பெயரில் ஏராளமான பணத்தையள்ளிக் கொடுத்து நல்ல குணம் ஒழுக்கமில்லாத ஒருவரைத் தேடிக் கொடுத்து அவள் வாழ்வைப் பாழ்படுத்துவதிலும் பார்க்க ஜெர்மன் மங்கையர் நாடும் பண்புகளைக் கவனித்துச் செயலாற்றுவார்களானால் பல பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளலாம்.

ஜெர்மன் சமுதாய ஆராய்ச்சியாளரான பீட்டர் காப் மேலும் தனது அறிக்கையில் 'திருமண விளம்பரங்களில் காணப்படும் வாசகங்களில் இருந்து மேற்கு ஜெர்மனியிலுள்ள ஆண்களாகட்டும், பெண்களாகட்டும் சகிப்புத்தன்மையுடையவர்கள், எவ்வித பேதமுமின்றி கலந்து பழகக்கூடியவர்கள், பெருந்தன்மையான போக்குடையவர்கள். எந்த ஜெர்மன் ஆடவனும் நகைச்சுவையில்லாமல் இருக்கமாட்டான் எனத் தெரிவிக்கிறார்.

சகிப்புத்தன்மையும், பேதமுமின்றி கலந்து பழகும் பண்பும், பெருந்தன்மையான போக்கும் அவர்களுக்குமட்டுமன்றி நமக்கும் வேண்டியவையாகும். இவைகள் யாவும் தம்பால் ஒருங்கு சேரப்பெற்றவர்களுக்கு வாழ்க்கையை வழமானதாக்கப் பெரிய உத்தியோகஸ்தர்கள்தான் வேண்டுமென்பதல்ல. இவர்களுக்கு சாதாரணமான ஒரு சிறிய தொழில் இருந்தாலே போதும் குடும்ப வாழ்க்கையைக் துதூகலமாக்கிவிடுவார்கள்.

எனவே மேலைநாட்டு நாகரீகங்களைப் பின்பற்ற அவாவுறும் நாம் அவர்களிடம் காணப்படும் மேற்குறிப்பிட்ட சிறப்பியல்புகளையும் எமதாக்கிக்கொள்ளப் பழக வேண்டும்.

எம். கே. ஜி.




தயாரிப்பு:

குணம்

# முக்கனிகளில் ஒன்றின் மகத்துவம்

ஏப்ரல் மாதம் பிறந்துவிட்டால் மாங்காய்ப்பேச்சு எங்கும் அடிபடும். ஏப்ரல், மே மாதத்தில் தொடங்கும் இந்தம் பேச்சு ஆகஸ்ட் வரை நீடிக்கும்.

இவ்வாறு பெயர் சம்பாதிக்கும் அளவுக்குப் புகழ்பெற்ற அந்த மாங்காய், மாம்பழத்தை நாம் அதிகமாகக் கிடைக்கும் இக்காலத்தில் சேமித்து ஆண்டு பூராவும் ரசித்துச் சுவைத்து உண்ண நாம் பயன்படுத்தும் வழிகளைத் தெரிந்து கொள்ளவேண்டாமா?

இலக்கியப் புகழ்பெற்ற முக்கனிகளில் மாம்பழம் முதலிடம் பெறுகிறது. இலக்கியங்களில் பல இடங்களில் உவமானமாகப் பயன்படுத்தப்படும் இம்மாங்கனியை நல்ல முறையில் பாதுகாத்தால் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவுப்பற்றுக்குறையை ஓரளவு தீர்க்கலாம்.

யுத்த காலத்தில் ஐரோப்பாவில் மரத்தூளை ரொட்டியில் கலந்து உணவுகளாக மாற்றி சாப்பிட்டிருக்கும் கதையைக் கேட்டோம். அப்படி அவர்கள் அங்கு சாப்பிட்டு நாட்டின் உணவுப் பஞ்சத்தைப் போக்கி தேசத்தைக் காப்பாற்றினார்கள்.

நாமும் நமது நாட்டின் உணவுப் பற்றுக்குறையை இந்த மாம்பழத்தின்மூலம் நீக்க பல வழிகள் இருக்கின்றன. மாங்காயைப் பல ரூபமாக நாம் பயன்படுத்தலாம்.

மாம்பிஞ்சை சிறியதாக ஊறுகாய்போடுவதை நாம் பார்த்திருக்கிறோம். அதைப் பல வகையில் ஊறுகாய் தயாரித்து, தமிழ்நாட்டில் போத்தல்களில், ஜாடிகளில் அடைத்து விற்கிறார்கள். விழுந்து வீணாகும் மாம்பிஞ்சை எடுத்து சிறிய துண்டுகளாக வெட்டி மற்ற ஊறுகாய்கள்போன்று தயாரித்து சேமிக்கலாம் மேலும் மாங்காயை நாம் அதிகமாக மலிவாகக் கிடைக்கும் போது வாங்கி துண்டுதுண்டாக வெட்டிக்காயப் போட்டு வற்றலாக்கிமழைக் காலங்களில் காய்கறி கிடைக்காத வேளையில் வற்றல் குழம்பு தயாரிக்கலாம்.

நாம் சாப்பிட்டதுபோக மீதமுள்ள மாம்பழங்களை வெட்டி ஒரு பெரிய பாத்திரத்தில் வேகவைத்து சர்க்கரையைச்சேர்த்து மற்ற சில வாசனைப்பொருள்களையும் சேர்த்து மாம்பழ ஜாம் தயாரித்துக் கெட்டுப்போகாமல் ஜாடிகள், போத்தல்களில் அடைத்துவைத்து பலகாரம், ரொட்டி இவைகளுடன் உண்ணலாம். இந்த ஜாம் ஒருவருடம் கூடக் கெடாமல் இருக்கத்தக்கது.

நாம் தினம் சாப்பிடும் மாம்பழ விதைகளை வீணாக்காமல் அவைகளை சேமித்து வைத்து அவற்றை நன்கு வெயிலில் காயவைத்து அவற்றின் பருப்பை உடைத்து அந்தப்பருப்பை நாளாந்தம் நமது உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

சுமார் 80 ருத்தல் நிறையுள்ள புன்செய் தானியங்களில் கிடைக்கும் புரோட்டீனும், 86 ருத்தல் மாவுப் பொருளும் 100 ருத்தல் மாம்பருப்பில் இருக்கின்றன.

மாம்விதைகளை வீணாக்குவதால் நாம் இவ்வளவு அரிய செல்வத்தை இழக்கிறோம். மாம்பருப்பில் கார்போஹைட்ரேட்ஸ் என்ற மாவுப்பொருளும் கொழுப்புப்பொருளும்அதிகமாக இருக்கின்றன. மாம்பருப்பில் உள்ள புரோட்டின் நம் உடம்பில் அழிந்துபோன மாமிசக்குறைவைப் பூர்த்தி செய்கிறது. மாவுப்பொருள் உடலுக்குசூட்டையளிக்கிறது. மாம்பருப்பு சிறந்த ஆகாரப் பொருள் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தமிழ் நாட்டில் இயந்திர மூலம் மாம்பழச் சாற்றையெடுத்து அல்வா, ஜாம், மாம்பழச்சாற்றுக்கட்டி போன்ற பல பொருள்களைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

இவ்வாறு நல்ல பயன் தரும் இக்கனியை அது அதிகமாகக் கிடைக்கும் காலத் [illegible] களில் சேமித்துவைக்கலாம்.

— எம். ஜி. ராஜ்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சோர்வுக்கு காரணம்

— டாக்டர் வில்லியம் ஷெர்மான் —

அடைசல் மிகுந்த அறைகள், எரிச்சலூட்டும்வர்ணங்கள், கூசும் வெளிச்சம், சௌகரியக்குறைவான நாற்காலிகள், போதுமான உடற்பயிற்சி செய்யாதிருப்பது, போதுமானஓய்வில்லாதிருப்பது இவை எல்லாமே சோர்வுக்குக காரணங்கள்.

அடைசல் மிகுந்த வீட்டில் வசிப்பது உடல் சோர்வு, மனச்சோர்வு இரண்டுக்கும் பெரும்பாலும் காரணமாகிறது. நடமாடப்போதுமான இடம் இல்லாமல் போவதால் ஏமாற்ற உணர்ச்சி ஏற்படுகிறது. அளவுக்கு மீறியவேலையைவிட இந்த ஏமாற்றமே சோர்வுக்குப் பெரும்பாலும் காரணமாக இருக்கினறது.

வீட்டுச்சுவர், சூழ்நிலை இவற்றில் பூசும்வர்ணங்கள் எரிச்சல் கூட்டுகிறவையாக இருப்பதும் சோர்வுக்கு மற்றொருகாரணம். வெள்ளை நிறம், சோர்வை அதிகரிக்கும். ஊதா, பழுப்பு, தீவிர மஞ்சள், நீலத்தின் சில வகைகள் இவையும் சோர்வுக்குக் காரணம்.

உலோகங்கள், கண்ணாடி இவற்றின் கண்கூசும்இயல்பு சோர்வுககுக் காரணம். இவற்றை மெல்லிய துணி போட்டு மூடுவதால், இந்தக் கேட்டைத்தடுக்கலாம்.

சௌகரியக் குறைவான நாற்காலி அல்லது மேஜையும் சோர்வையுண்டாக்கும் இவற்றின் உயரம் சரிவர இல்லாவிட்டால் சோர்வுஏற்படும். சாதாரணமாக உபயோகத்தில் இருக்கும் நாற்காலிகளுள் இருபது சதவீதம் ஆறுதலாகஉட்காரத் தகுதியற்றவை.

உடற்பயிற்சி சோர்வைத் தடுக்கும்; உடற்பயிற்சிசெய்யாதவருக்கு உடற்பயிற்சி செய்பவரைவிட அதிகமான பிராணவாயு வேண்டியிருக்கும்.

ஓய்வும் சோர்வைப்போக்கக்கூடியதொன்று. முற்பகல் வேலையின்போதும் பிற்பகல் வேலையின்போதும்இடையே பத்து நிமிஷ ஓய்வு இருந்தால் வேலைத்திறமையும் அதிகரிக்கும்; சோர்வும் குறையும்.

வேலையின் முடிவில் இன்பம் கிடைக்கும் என்ற நிச்சயம்சோர்வைக்குறைக்கும். தொழிற்சாலை ஊழியர்களை ஆராய்ந்ததில் ஒரு கூட்டத்தார் சோர்வு மிக்கவராக ஓய்ந்திருந்தார்கள், அதே அளவு நேரம் வேலைசெய்த மற்றொரு கூட்டத்தாரோ சோர்வின்றி உற்சாகமாக இருந்தார்கள். காரணம் இதுதான்:- உற்சாகமாக இருந்தவர்களுக்கு வேலை முடிந்ததும் மாலைநேரத்தை இன்பமாகக் கழிக்கும் வாய்ப்பு இருந்தது

## குடும்ப தலைவிக்கு..

### நிறத்தைப் பாதுகாக்க

கீரைகளை வேகவைக்கும் போது அதன் பச்சைநிறம் மாறாதிருக்க வேண்டுமானால் வேகவைக்கும் தண்ணீரில் ஒரு டீ ஸ்பூன் உப்பைக் கலந்துவிடுங்கள். சோடா உப்புப் போடாதீர்கள்.

## வட்டிலாப்பம்

### தேவையான பொருள்கள்

முட்டை -6
தேங்காய் -1
கருப்பட்டி -1 ரூ.
முந்திரிப்பழம் சிறிதளவு.
கடலை தேவையான அளவு (வறுத்த கடலை)

### செய்கை முறை

முட்டையின் மஞ்சற் . வெள்ளைக்கரு இரண்டையும் ஒன்றாகக கலந்து நன்றாக அடிக்கவேண்டும் தேங்காயைத் துருவி கட்டியாகப் பாலைப் பிழிந்து எடுக்கவேண்டும். கருப்பட்டியை துண்டு துண்டாக வெட்டிப் பிழிந்து வைத்த பாலுடன் சேர்த்து நன்றாகக் கரைக்கவேண்டும். தோல் நீக்கிய கடலையைத் தூள் செய்து வைக்கவேண்டும். அடித்து வைத்த முட்டையில் பாலுடன் சேர்த்து கரைத்து வைத்த கருப்பட்டிக் கலவையை ஊற்ற வேண்டும். தூள் செய்து வைத்த கடலையையும் கலவையில் சேர்த்துவிடவேண்டும். பிறகு முந்திரி வற்றல்களை இடைக்கிடை கலவையில் வைக்கவேண்டும். அரைவாசிக்கு இன்னொரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து தண்ணீர் விட்ட பாத்திரத்தினுள் ஏற்கனவே குறிப்பிட்டபடி செய்து வைத்துள்ள பாத்திரத்தை வைத்து மூடியால் மூடிவிட வேண்டும். ஒரு மணித்தியாலம் கடந்து வட்டிலாப்ப பாத்திரத்தை எடுத்து ஆறவிடவேண்டும். பதமானதும் வெட்டிச் சாப்பிடலாம்.

செல்வி சித்திபரீடா முகமட், நாவலப்பிட்டி.

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் வேண்டுதலுக்கிசைந்து ''என்ன நீர் அவருடன் உடலுறவு கொள்ளவில்லையெனச் சத்தியம் செய்ய ஒப்புக்கொள்கிறீரா?'' என்ருர். ''ஆம்'' என்றுபாலையா பதிலளிக்கவே கோடு கலைந்ததும் கோவிலுக்குச் செல்ல இருதரப்பினரையும்ஆயத்தமாகும்படி நீதிபதிகூறிமுடிக்கிருர். வழக்கைத் தள்ளுபடி செய்து, சத்தியம் செய்ய இருதரப்பினரும் சம்மதமளித்ததாகத் தீர்ப்புவழங்கப்படுகிறது. பாலையாவின் இதயத்தைத்திகில்பிடித்துக் கொள்கிறது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கோர்ட்டைவிட்டு வெளியேறுகிருன். உண்மை யார் பக்கத்தில் இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. பார்வையாளர்கள் இருவரையும் மாறி மாறிப்பார்க்கின்றனர். உண்மையை மறைக்க ஒன்றின்மேல் ஒன்ருக அவன் கூறிய பொய்களை எண்ணியெண்ணிப் பாலரதியின் உள்ளம் குமுறிக்கொந்தளித்தவண்ணம் இருக்கிறது. அரசநீதிக்கு அணை போட்டுவிட்டுத் தெய்வ நீதியை எதிர்பார்த்தபடி அவள் கோட்டைவிட்டு வெளியேறுகிருள். அவளை ஒரு புதியபெண் பின்தொடர்கிருள். அது அவளது அன்னையாகத்தானிருக்க வேண்டும். அவள் முடிச்சை அவிழ்த்து ஐந்துரூபாத்தாள் ஒன்றை எடுக்கிருள், பாலரதி அதை வாங்கிக் கர்ப்பூரம் வாங்க ஒரு பையனிடம் கொடுத்துவிட்டு கோர்ட்டுக்குள் ஒருபுறம் ஒதுங்கிக் கொள்கிருள். கோர்ட்டுக்குள் நின்ற கூட்டத்தில் ஒருபகுதி கலைந்துவிட்டது. நீதிபதி பெரும்பாலான வழக்குகளைத் தவணைபோட்டபடியிருக்கிருர். சிலர் சாட்சிக் கூண்டில் ஏறி இறங்குகின்றனர். கோடு கலையும் நேரம் வந்து விட்டது. நீதிபதி தமது காரில் வந்து ஏறிக்கொள்கிருர் அதேகாரின் பின் சீட்டில் முதலியும் சேவகனும் ஏறிக்கொள்கின்றனர். மூன்றுகார்கள் கல்லடி முருகன் ஆலயமுன்றில் முன் வந்துநிற்கின்றன. ஆவேசம் வந்தவளைப்போல் பாலரதி காரைவிட்டிறங்கிச் சென்று கோயில் சந்நிதியில் கர்ப்பூரத்தைக் கொளுத்துகிருள். முதலி கூறியபடி பாலையா கூறிக் கர்ப்பூரத்தை அடித்து அணைக்கிருன். சத்தியம் சுடும் என்பதை அந்தக் கர்ப்பூரச் சுடர் அவன் கையில் சுட்டு உணர்த்துகிறது. அவன் அதை உணரவில்லை, மான நட்டம் ஐயாயிரம் கட்டாது தப்பினேம் என்று மனநிறைவை வரவழைத்துக் கொள்ள முயல்கிருன். அது அவனுல் முடியவில்லை. உண்மை அவன் இதயத்தைச் சுட்டுப்பொசுக்கி விட்டது. இதயமற்ற நடைப்பிணம்போல் அவன் நடந்து போய்க்கொண்டிருக்கிருன். பாலரதி பொலுபொலெனக் கண்ணீர் சொரியக் கோயிலை வலம் வந்துகொண்டிருக்கிருள், அவளின்வாய் எதையோ முணுமுணுத்துக் கொள்கிறது. ஆவேசம் பிடித்தவளாகஅவன்சென்ற திசையை நோக்கி மூன்று முறை மணலைவாரி வீசுகிருள். அந்த ஆலயத்துள் சிலைவடிவாய் அமர்ந்திருக்கும் முருகன் அவள் செயலைப் பார்த்துப் புன்னகை புரிகிருன். அவனது அபயகரம் அவளுக்கு மானநட்டம் அளிக்கப்படுமென்பதைக் குறிக்கிறது. மனநிறைவுடன் அவள் தன் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கிருள்.

(யாவும் கற்பனை)

# புதுயுகம் காணப்புறப்பட்ட

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

பள்ளிக்கூட அதிகாரிகள் தயங்கியபோதும் இறுதியில் லெனினுக்கு அதனை அளிக்கும்படி ஆயிற்று.

## புரட்சியாளருடன் தொடர்பு

பின்னர்உல்யாளேவ்குடும்பத்தினர் 1887 கோடையில், சிம்பிர்ஸ்க்கிலிருந்து காஸானுக்குச் சென்ருர்கள். சட்டம் பயிலுவதற்காக லெனின் காஸான் பல்கலைக்கழகத்தில்சேர்ந்தார். அங்கே அவர் சீர்திருத்தக் கருத்துக்களையுடைய மாணவர்களுடன் தொடர்புகொண்டு, புரட்சிகர வட்டங்களில் சேர்ந்தார். மாணவர் கிளர்ச்சிகளில் கலந்துகொண்டதற்காக 1887 டிசம்பரில் லெனின் பல்கலைக்கழகத்தினின்றும் வெளியேற்றப்பட்டார். பின்னர் கைது செய்யப்பட்டு கோகுஷ்கினே கிராமத்திற்கு நாடுகடத்தப்பட்டு, அங்கே ரகசிப் பொலிசாரின் கண்காணிப்பிலிருந்தார்.

## புரியாதன புரிந்தன

இதுவே லெனினது புரட்சிகர வாழ்க்கையின் ஆரம்பமாகும். நாடு கடத்தப்பட்டிருந்தபொழுதும், ஓராண்டிற்குப் பின் காஸானுக்குத் திரும்பி வந்தபொழுதும் லெனின் மிகக் கவனத்துடன் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வுபற்றிய விபரங்களைக் கூறும் நூல்களைப்படித்தார். அவர் கார்ல் மார்க்ஸின் 'மூலதன'த்தை ஆழ்ந்து படித்து, அதன் உள்ளடக்கங்களை ரஷ்யாவிலிருந்த சமூக பொருளாதார நிலைமைகளுக்குப் பயன்படுத்த முடியுமா என்பதை நன்கு சிந்தித்து ஆராய்ந்தார். தன் இளமைக்காலத்திலிருந்து புரியாத புதிராகவிருந்த கேள்விகளுக்கான பதில்களை. முக்கியமாகத் தொழிலாள மக்கள் தங்கள் விடுதலைக்கான போராட்டத்திற்கு எவ்வழியை மேற்கொள்வது என்ற பதிலை கார்ல் மார்க்ஸிடம் கண்டார். விரைவில் லெனின், பிரபல ரஷ்ய மார்க்ஸிஸ்ட்களுள் ஒருவராக, ஒரு மெய்யான வழக்கறிஞராக, விஞ்ஞான ரீதியான கம்யூனிஸப் பிரச்சாரகராக ஆனுர். பின்னர் அனைத்து ரஷ்யத் தொழிலாள மக்களின் விடுதலைக்கும், சோஷலிஸத்திற்குமான போராட்டத்தின் நடைமுறைக்கு மார்க்ஸிய புரட்சிகரக் கோட்பாடுகளை, அவர் மிகத் திறமையாகக் கையாண்டார். இன்றும் நடைமுறைக்குப் பொருந்தக்கூடிய தன்மைகளைக் கொண்ட தத்துவ நூல்களை லெனின் எழுதினுர்.

## வழக்கறிஞர்

பல்கலைக்கழகத்தில் மீண்டும் நுழைவதற்கான அனுமதி, இளம் லெனினுக்கு மறுக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் முழு பயிற்சி ஆண்டுகால பரீக்ஷைகள் எழுதுவதற்கு 1890 வரை அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. 1891-ல் ஸெயிண்ட் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் அவர் சட்டப் பரீக்ஷைகளில் மிக உயர்ந்த விருதுகள் பெற்று தேர்ச்சியடைந்தார். சமாராவிலுள்ள வழக்கறிஞர்கள் குழுவில் அனுமதிக்கப்பட்டு வழக்குகளை வாதாடினுர். அவரது கட்சிக்காரர்கள் பெரும்பாலும் விவசாயிகளே.

## புரட்சித்தலைவன்

1893 முதல் 1897 வரை லெனின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வசித்தார். லெனினது வாழ்க்கைப் பணியின் மிக முக்கியமான காலம் இது. இங்கு அவரது நடவடிக்கைகள், அவரைத் தொழிலாள மக்களின் புரட்சித் தலைவன் என்று உறுதியாகத் தீர்மானித்தன. தொழிலாளர்கள் வர்க்க உணர்வின் அடிப்படையில் விழிப்புற்று வந்ததால், பீட்டர்ஸ்பர்க் மார்க்சிஸ்டுகள் அரசியல் போராட்டத்திற்கு அவர்களைத் தயாரிக்க வேண்டுமென லெனின் பணித்தார்.

## குருப்ஸ்கயாவின் தோழமை

1894 பனிக்காலத்தில் லெனின், நதாஷா குருப்ஸ்காயாவிற்கு அறிமுகமானுர். அவர் முதியோர்களுக்கான ஞாயிறு இரவுப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாகவும், தொழிலாளர்களின் மார்க்சிஸ்ட் வட்டத்தின் அங்கத்தினராகவும் இருந்தார். குருப்ஸ்காயா, லெனினது வாழ்க்கைத் துணைவியாகவும், உதவியாளராகவும், தொழிலாளர்களின் குறிக்கோளுக்கான போராட்டத்தில் உற்ற தோழராகவும் ஆனுர். அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் புதிய ரஷ்யாவின், பொதுஜனக் கல்வித் துறையின் பிரபல தலைவர்களுள் ஒருவராக இருந்தார்.

1895 இலையுதிர் காலத்தில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள எல்லா மார்க்சிஸ்ட் வட்டாரங்களும் லெனினது தலைமையின்கீழ் ஒரே அரசியல் குழுவாக இணைந்தன...... இதற்கு ''தொழிலாள வர்க்கத்தின் விடுதலைப் போராட்ட லீக்'' என்று பெயரிடப்பட்டது. விரைவில் அக்குழு பொலிஸாரால் நசுக்கப்பட்டு, லெனினும் அவரது தோழர்களும் கைது செய்யப்பட்டனர். லெனின் பதினுன்கு மாதங்கள் சிறையிலிருந்தார். 1897 பெப்ரவரியில் கிழக்கு சைபீரியாவில் ரயில் நிலையத்திலிருந்து 600 கிலோ மீட்டர்கள் தூரத்திலிருந்த ஷுஷென்ஸ்கோயி கிராமத்திற்கு, மூன்று ஆண்டுகள் அவர் நாடு கடத்தப்பட்டரர்.


## மார்க்சிஸ்ற் தலைவர்

தண்டனைக் காலம் 1900 ஜனவரியில் முடிந்தது. அதன் பின்னர் அவர் சைபீரியாவிலிருந்து மத்திய ரஷ்யாவிற்குத் திரும்பினுர். மாஸ்கோ, செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் இன்னும் பல இதர பெரிய நகரங்களில் வசிப்பதற்கு அவருக்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததால், அவர் பிஸ்கோவ் என்ற சிற்றூரில் வசித்தார்.

1900 டிசம்பரில் தினசரி பத்திரிகையான 'இஸ்க்ரா' (தீப்பொறி) வின் முதல் இதழ் வெளியாயிற்று. இதை இயக்கியவர் லெனின். ரஷ்யாவிலிருந்த கட்சிக் கமிட்டிகளிடையே 'இஸ்க்ரா' பெருஞ் செல்வாக்குப் பெற்றது. கட்சியின் எல்லா அணிகளும் இப்பத்திரிகையின் மூலம் ஒன்றிணைந்தன. லெனினது தலைமையின்கீழ், இப்பத்திரிகையின் உதவியினுல், ரஷ்ய சோஷலிச ஜனநாயகத் தொழிற் சங்கக் கட்சியின் இரண்டாவது

(13-ம் பக்கம் பார்க்க)

நீங்கள் வீடு கட்டும் பொழுது
ஒட்டுப் பலகை
கதவுகளை பாவித்து
விலையை 40% குறைக்கவும்
விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.



☐ ஒட்டுப் பலகை கதவுகள் பாரம் குன்றந்தனத, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை. எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. பூலரக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. கிரிகம்பலிகை, கூலன்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9''
அகலம் : 2' 3'', 2' 9'', 3' 6''
கனம் : $1\frac{1}{4}$''

☐ விட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நிர்: 18, பலாலி வீதிச் சந்தி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 508.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி: 95846, 92903

THUNDERFLASH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுயுகம்...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டிற்கான சங்க அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ரஷ்ய சோஷலிச ஜனநாயகத் தொழிற்கட்சியின் இரண்டாவது மாநாடு 1903-ல் நடைபெற்றது ரஷ்யாவின் மெய்யான போர்க்குணம் படைத்த புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி, இம்மாநாட்டில் நிறுவப்பட்டது. இக்கட்சியின் ஸ்தாபகரும், இயக்குநரும் லெனின் தான் என்று கூறத் தேவையில்லை.

முதல் ரஷ்ய பூர்ஷ்வா ஜனநாயகப்புரட்சி(1905-1909) வெடித்தபொழுது நாட்டிலிருந்து லெனின் வெளியேற்றப்பட்டிருந்தார். ஆனால் புரட்சியை வளர்ப்பதற்கான கட்சியின் நடவடிக்கைகளை லெனின் வழிநடத்தி வந்தார்.

### பொதுப்பணிகளில் தலைமை

1905 நவம்பரில் லெனின் ரஷ்யாவுக்குத் திரும்பிவந்து புரட்சிகர நடவடிக்கைகளை மேலும் செழுமைப்படுத்தும் பணிகளில் முழுவேகத்துடன் செயலாற்றினர். மத்திய கமிட்டி, ஸெயிண்ட் பீட்டர்ஸ்பர்க் போல்ஷ்விக் கமிட்டிகளுக்குத் தலைமை தாங்கினர். எண்ணற்ற கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பேசினர். ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிக்கான அமைப்புக்களில் நேரடியாகப் பங்கு கொண்டார். மாஸ்கோவில் டிசம்பரில் நடந்த ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி, ஜார் அரசாங்கத்தால் நசுக்கப்பட்டது. இன்னும் பல நகரங்களில் நடந்த கிளர்ச்சிகளும் இதே கதியையடைந்தன.

இருந்தாலும், ஜார் எதேச்சாதிகாரத்திற்குப் பாட்டாளிவர்க்கம் தன் முதல் அடியைக் கொடுத்தது. ஜார் ஆட்சியை வீழ்த்தினுல் மட்டும் போதாது. அதை வேருடன் பிடுங்கி எறிந்துவிட்டு அதன் இடத்தில் தொழிலாள மக்களின் ஆட்சியை நிறுவ வேண்டுவது அவசியம் என்று புரட்சி, தொழிலாள மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டிற்று. இக் குறிக்கோளை நோக்கி லெனின் கட்சியையும் தொழிலாள வர்க்கத்தையும் வழிநடத்திச் சென்றார்.

### புரட்சி தோல்வி

1905 புரட்சி தோல்வியடைந்தபின்னர், ஜார் அரசாங்க ஒற்றர்கள் லெனினை மிகத் தீவிரமாக எல்லா வழிகளிலும் தேடினர்கள். முதலில் அவர் பின்லாந்தில் தலைமறைவாக இருந்தார். 1907 டிசம்பரில் போத்யூனியா வளைகுடாவின் பனிக்கட்டிகளிடையே கால்நடையாகவே பல இடையூறுகளுக்கிடையே பிரயாணம்செய்து ஸ்டாக்ஹோமை வந்தடைந்தார். பின்னர் அங்கிருந்து ஜெனிவா சென்றார். இரண்டாம் முறையாக லெனின் நாட்டைவிட்டு வெளியேறியிருந்த காலத்தின் ஆரம்பம் இது. ஒன்பது ஆண்டுகளுக்குமேல் அதாவது 1917 ஏப்ரல்வரைபூர்ஜ்வா ஜனநாயகப் புரட்சி ரஷ்யாவில் வெற்றிபெறும் வரை அவர் இவ்வாறு இருக்க நேரிட்டது.

இரண்டாம் முறையாக நாட்டைவிட்டு வெளியேறிய இந்தக் காலத்தில், லெனின் விடாமுயற்சியுடன் பணியாற்றினர். சட்டபூர்வமற்ற கட்சியை வலுப்படுத்திப் பாதுகாப்பது, முதல்ரஷ்யப் புரட்சியின் அனுபவங்களை அலசி ஆராய்வது இருண்ட பிற்போக்கு தலைதூக்கிநிற்கும் காலத்திலும் புரட்சிகர மரபுகளைப் பாதுகாப்பது மார்க்ஸியத்தின் தத்துவார்த்தக் கோட்பாடுகளை திருத்தல் வாதத்தினின்றும் பாதுகாப்பது, புரட்சிகரக் கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்திற்கு கல்விப் பயிற்சி அளிப்பது, பொது மக்களுடனான உறவுகளை வலுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் லெனின் தனது பெரும்பாலான நேரத்தைச் செலவிட்டார்.

முதல் உலகயுத்தம் ஆரம்பமான பொழுது லெனின் போரோனினேவில் இருந்தார். உளவு பார்த்தார் என்ற அற்பக்காரணம் காட்டி அவர் கைது செய்யப்பட்டுப் பின்னர் விரைவில் வெளியில் விடப்பட்டார். லெனினும் குருப்ஸ்காயாவும் இடம்விட்டு இடம் மாறிக்கொண்டிருந்த பொழுதெல்லாம் அவர்களுடனேயேயிருந்த குரூப்ஸ்காயாவின் தாயாரும் மீண்டும் ஸ்விட்சர்லாந்தில் குடியேறினர்கள்.

### வீழ்ச்சி

1917 பெப்ரவரியில் ரஷ்யாவிலிருந்த எதேச்சாதிகாரம் வீழ்த்தப்பட்டது. ரஷ்யாவிற்குத் திரும்பிவந்து புரட்சி நிகழ்ச்சிகளில் நேரடியாகப் பங்குபெற லெனின் ஊக்கமாக முயற்சித்தார். ஏப்ரல் 9 (பழைய காலண்டர்ப்படி மார்ச் 27) 1927ல் லெனினும்குரூப்ஸ்காயாவும் அவர்களுடன் முப்பத்திரெண்டு பேர்களும் ஸ்விட்ஸர்லாந்திலிருந்து புறப்பட்டார்கள்.

(14-ம் பக்கம் பார்க்க)

# வீரசைவர் யார் ?

இலங்கையில், இலைமறை காய்போல் 'வீரசைவம்' என்னும் நெறி பரவியிருக்கின்றது. வீரசைவ நெறிபற்றியறியாதார் சிலர், தாம் குறிப்பிட்ட ஒரு குலத்திற்பிறந்த காரணத்தால் தாம் வீரசைவர்களெனக் கருதுகின்றனர். சிலர் சங்கமர்கள். (பண்டாரங்கள்) வீரசைவர்கள் எனவும், வீரசைவம் சங்கமர்களின் மதம் எனவும் கருதுகின்றன. சிலர் சிவலிங்கத்தைத் தரிப்பதற்கும் சிவலிங்கத்தைப் பூஜிப்பதற்கும் அருகதை உடையவர் வீரசைவர்கள் மாத்திரமே எனக் கருதுகின்றனர். காங்கேசன்துறைப்பகுதியில் வசிக்கும் குருகுலத்தவர்களுட் சிலர் குருகுலத்தவரின் சமயம் வீரசைவம் எனவும் வீரசைவத்தை ஸ்தாபித்தவர் வீரபத்திரக் கடவுளெனவும் ஆகையால் வீரபத்திரகடவுளை மட்டுமே குருகுலத்தவர்கள் பூசித்தல் வேண்டுமெனவும் கருதுகின்றனர். இலிங்கதாரிகளாகிய குருமார் சிலர் பண்டாரங்களின் வீரசைவர் எனவும் குருகுலத்தவர்கள் சங்கமர்களின் சிஷ்யர்களெனவும் நூல்களில் வரைந்துமுள்ளனர்.

#### வீரசைவம்

புன்னெறி (தீயநெறி)யதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறியில் நின்று ஒழுகி நவையறுகாட்சிகண்டு, இருவினை நீக்கி எம்பிரான் அடியவர்களாக வேண்டும் என முனைபவர்கள் அனைவரும் வீரசைவர்களே. வள்ளுவன் வகுத்த வழி அறம் செய்து அதனல் அறிவு தூய்மை எய்தி மெய்ப்பொருளை அணுகி அம்மெய்ப்பொருளோடு கலந்து இன்பம் அடைய முனைபவர்கள் அனைவரும் வீரசைவர்களே.

உண்மையைப் போதிக்கும் சமயம் அகச்சமயம் என இந்துமதம் கூறுகின்றது. அகச்சமயம் ஆறு.

'ஒன்றது பேரூர் அதற்கு ஆறுவழி' என்பது திருமந்திரம். இறைவனுகிய பேரூரை அடைவதற்கு ஆறுவழிகளில் எவ்வழியாற் சென்றுலும் அவ்வூரை அடையலாம். 'ஆறும் மாறு வீடுடைத்து' என்பது உமாபதி சிவத்தின் வாக்கு.

அறு சமயங்களில் ஒன்று சைவம். சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வழிபடுபவன் சைவன். மேன்மைகொள் சைவநீதி வழுவாது சிவபூசைசெய்பவன்மேலாம் இன்பம் பெறுகிறுன். சைவர்கள் செய்யும் சிவபூசையானது ஆன்மார்த்தபூசை, பரார்த்தபூசைஎனஇருவகைப்படும் ஆசாரியர் தீட்சை செய்து கொடுத்த இலிங்கத்தைப் பெற்று முறைப்படி பூசிப்பது இட்ட இலிங்கபூசையாகும், (வீரசைவநெறியில் நிற்பவர்கட்கு மட்டும்இதுஉரியதல்ல) சிவஇலிங்கப்பெருமானைக் கோவில்களிற் பிரதிட்டை செய்து பூசிப்பது பரார்த்த பூசையாகும்.

1. ''வீரசைவம் ஏகான்மவாதக் கருத்தோடு ஒத்தே நமது சமய முடிபுகளையும் சாதனைகளையும் விளக்குகின்றன. ஆனல் சைவசித்தாந்தம் அக்கருத்துக்கு முற்றும் மாறுபட்ட விதத்தில் தனது முடிபுகளை விளக்குகிறது'' (பக்-5)

2. ''வீரசைவ முத்தி நிலை ''சாமரஸ்ய முத்தி'' அாவது பரமுத்தியில் சீவன் சிவமாக விளங்கும்'' (பக்-6)

3. ''வீரசைவத்தில் சிவலிங்க வழிபாடு மாத்திரமே கூறப்பட்டுள்ளது'' (பக்-6)

4. வீரசைவ சாதனங்களுள் மிகவும் முக்கியமானது இலிங்கதாரணமேயாம். இலிங்கதாரணமில்லாத ஒருவர் தன்னை வீரசைவரெனக் கூறிக்கொள்ளுதல் பிழையாகும்' (பக்-8)

— க. ஏரம்பமூர்த்தி —

சைவத்துள் சித்தாந்த சைவம், காஷ்மீர் சைவம், வீரசைவம் எனஎத்தனையோ துறைகள் உள. எல்லாத் துறைகளும் சிவபூசை. சிவ இலிங்கவழிபாடு என்பவற்றையே போதிக்கின்றன.

குருநாதர் அனுக்கிரகஞ் செய்து கொடுத்த இட்ட இலிங்கத்தையேயன்றிமற்ற மூர்த்திகளைப் பூசியாது எல்லாப் பக்தியையும் சிவஇலிங்கப் பெருமானிடம் செலுத்துதல்வேண்டும். சிவஇலிங்கத்தை அங்கத்தில் தரித்து அங்கத்தை இலிங்கமாக்கினேர் சமாதி நிலையடைவர். அன்னரின் சீவாத்மசோதி பரமாத்மசோதியுடன் கலந்துவிடும் என்பவற்றைப் போதிப்பது வீரசைவநெறி.

#### வீரசைவம்தோன்றியகாலம்

வீரசைவம் அல்லது இலிங்காயதம் கி. பி. 12-ம் நூற்ருண்டில் வாழ்ந்த ஸ்ரீபசவேஸ்வரரால் உபதேசிக்கப்பட்ட நெறியேயாகும். சிலர் வீரசைவம் அநாதியானது எனக்கூறுகின்றனர். ஆனல் ''பன்னிரண்டாம் நூற்ருண்டுக்கு முற்பட்ட வீரசைவத்தைப்பற்றிய நூல்களேனும், அல்லது வேறு விரிவானகுறிப்புக்களேனும் இப்பொழுது கிடைக்கவில்லை. பசுவதேவருக்குப் பிற்பட்ட வீரசைவமே இக்காலத்தில் எல்லோராலும் கொள்ளப்படுகின்றது'' என வீரசைவ குரு சிவ. திரு. ஐ கயிலாச தேசிகர் (ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களால் 1950-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ''வீரசைவம் அல்லது இலிங்காயதம்'' என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது.

#### வீரசைவநூல்கள்

வீரசைவக் கொள்கைகளை விரிவாக விளக்கும் நூல் ''சித்தாந்த சிகாமணி'' என்னும் வடமொழி நூலாகும். இந்நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு ஒன்று செய்யுள் வடிவில் உள்ளது. அண்மையில் பங்களூரில் இருந்து இலங்கைக்கு வருகைதந்த வீரவசவகுரு ஸ்ரீமத் சாஸ்திரி மட் அவர்கள் ஆங்கிலத்திலும் ''சித்தாந்த சிகாமணி'' அண்மையில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதாகக் கூறினர்.

இலங்கைவாழ் சைவமக்களுக்கு வீரசைவநெறியை விளக்குவதற்காக, அகில இலங்கை இலிங்காயதசமூக பிரதமகுரு பரம்பரை என்னும் பட்டம்பெற்றவராகிய வீரசைவகுரு கீரிமலை சிவ திரு. ஐ. கையிலாசதேசிகர் (ஐயம்பிள்ளைக் குருக்கள்) 1950-ம் ஆண்டில் 'வீரசைவம் அல்லது இலிங்காயதம்'' என்னும் நூலை வெளியிட்டார்.

இந்நூல் [illegible] சைவநெறி:

5. ''குருநாதர் அநுக்கிரகம் செய்து செய்துள்ள இட்ட லிங்கத்தையேயன்றி மற்ற மூர்த்திகளைப்பூசியாது எல்லாப்பக்தியையும் சிவலிங்கப்பெருமானிடத்தே வைத்து வாழும் வாழ்வு இலிங்காசாரம் எனப்படும்''. (பக்-13)

6. ''வீரசைவச் சடங்குகளில் அக்கினி வளர்த்தலாகிய கிரியை இடம்பெறுவதில்லை'' (ஓமம் வளர்ப்பதில்லை) (பக்-14)

7. ''வீரசைவர்கள் பிறப்பினுலும், இறப்பினுலும் பெண்களது மாதவிலக்கினுலும் ஏற்படும் தீட்டுகளைப் பிரதானமாகக் கொள்வதில்லை (ஆசௌசம் பார்ப்பதில்லை. (பக்-15)

8. 'தீண்டாமை என்னும் கொடிய அநாகரீக வழக்கம் வீரசைவத்தில் இல்லை'' (பக்-15)

வீரசைவ வெளியீடுகளில் ஒன்ருகிய ''தகனமும் ககனமும்' என்னும் நூல் தகனக் கிரிகையை வன்மையாகக் கண்டிக்கின்றது

வீரசைவநெறியில் நிற்கும் வீரசைவர் எத்தனைபேர்? அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த ஸ்ரீமத் சாஸ்திரமட் என்பவர் வேறு சிந்தனையற்று அல்லும்பகலும் சிவ இலிங்கத்தைமட்டும் வழிபடுவனே வீரசைவன் என்று விளக்கினர்.

#### இலங்கையில் வீர சைவம்

கி. பி. 12-ம் நூற்ருண்டுக்குப்பின் இந்தியாவில் கன்னடதேசத்தில் வீரசைவநெறி ஓங்கி வளர்ந்தது. கி. பி. 14-ம் நூற்ருண்டில் யாழ்ப்பாணத்தை அரசாண்ட வீரோதயசிங்கை ஆரியன் காலத்தில் கன்னட மல்யுத்த வீரர்கள் சிலர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். கி. பி. 15-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தை அரசாண்ட கனகசூரிய சிங்கை ஆரியன் கன்னடநாட்டோடு நெருங்கியதொடர்புகொண்டிருந்தான். கனகசிங்கை ஆரியனைச் சிங்கள சந்தேச நூல் 'கன்னடன்' என அழைக்கின்றது: இக்காலத் கன்னடர் பெருந்தொகையாகக் காங்கேசன்துறைப் பகுதியில் குடியேறினர். காங்கேசன்துறைப் பகுதியில் வாழ்ந்த குருகுலப் போர் வீரர்களுடன் கன்னடப் போர்வீரகளும் காங்கேசன் துறையில் வாழ்ந்தனர்,

இக்கன்னடருள் அநேகர் இலிங்கதாரிகள், பின்கதியின்றி, இலிங்கதாரிகள் கீரிமலைப் பகுதிகளில் வாழ்ந்த தவசிகளோடுகலந்து அபேதமாயினர்.

திரு. ஆ. முத்துத்தம்பி அவர்களால் எழுதப்பட்ட ''யாழ்ப்பாணச் சரித்திரம்'' ''ஆண்டிகள் விடிய ஐந்து நாளிகையளவில் நகரங்களிலும் கிராமங்களிலும் சங்கநாதம்செய்து சனங்களைத் துயிலுணர்த்தி வருந்தொழிலுக்காக ஒருமகிமையுடையவராய் இருந்தார்கள். கோயில்களிலும், அரண்மனையிலுமுள்ள முறைக்காலம்

(14-ம் பக்கம் பார்க்க)

# நமது நூல் நிலையம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பைக் குறைக்கும் கள்-காமம், காமம்-அறிவு விளக்கங்களும் தவிர்க்கப்பட்டு, அட்டைப்படக் காதலர்களின் முகங்களும்சற்று அழகாகத் தீட்டப்பட்டு 'அச்சுப்பிழை திருத்தமும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தால் ஏற்கனவே அழகாகத் திகழும் 'காதல் நெஞ்சம்' இன்னும் அழகாகத் திகழ்ந்திருக்கும். — புலவர்

### கூட்டு வழிபாட்டுப் பாடல்கள்

வெளியீடு: சைவசமய அபிவிருத்தி மன்றம் பிளக்பூல், நுவரெலியா.

''எல்லாங் கடந்து நிற்கின்ற இறைவனை ஏத்தி இசைபாடுவதே பொல்லாத புன்பிறவிக்குரிய மாபெரும் இலட்சியம்'' என்பது சமயதத்துவங்களின் அடிப்படையாகும்.

காலதேச வர்த்தமானத் துக்கமைய மாறிவரும் அவசர யுகத்தில் ஆன்மீகப்பற்றின் படிப்பு விடுபட்டுச்செல்வதை சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது ஆனல் நம்பிக்கையும், அதனற் பெறுகின்ற ஆறுதலுமே விடிவுதரவல்லது' என்பதை உணர்ந்து சமுதாயத்துக்கு முணர்த்த முற்படுபவர்ள் உன்ளனர் அப்படிப்பட்ட பலரின் கூட்டுமுயற்சியாக. 'கூட்டு வழிபாட்டுப்பாடல்' கள் என்ற இந்தவெளியீடு சமூகத்துக்குத் தரப்பட்டுள்ளது.

இந்நூலில் பல பெரியார்களின் ஆசியுரைகளுக்குப் பின்னேர்பிராத்தனையும்முருகனும்' என்ற தவத்திரு பித்துக்குளி முருகதாஸின் கட்டுரை இடம்பெறுகின்றது. 'அருவமு முருவமாகி''... என்ற கந்தபுராணத்துடன் தொடங்கும் கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்களுள்ளே முருகனைப்பற்றிய பாடல்களும், விநாயகர் தியானம் பற்றிய பாடல்களும் சிவ தோத்திரம் முதலானவையுடன் திருநீறு இறைவனின் சின்னம், மக்கள் அனைவரும் திருநீறு அணிந்து ஐந்தெழுத்தை உச்சரித்து உய்தி பெறல் வேண்டும் என்னும் உயரிய நோக்குடன் திருநீற்றுப்பதிகம் நமசிவாயப் பதிகங்கள் ஆகியன வற்றையும் இந்நூல் அடக்கியுள்ளது.

நெஞ்சைஉருக்கி நினைவை இறைவனுக்காக்கி அஞ்சலி செய்யத்தூண்டும் அரிய பாடல்களைபாதுகாக்கவேண்டியது சமுதாயத்தின் கடனகும் சொந்த உள்ளம் அமைதிபெறவும் இறைவனைப்பற்றி எண்ணி எல்லாம் கைகூட வழிகாட்டவும் வல்லது இந்நூல் இந்நூலை அச்சிட்டுஅதனைமற்றவர்களுக்கு வழங்கி தாமும் நிறைவுற்று மற்றவர்களும் நிறைவுற எண்ணுகின்றவர்களைப் பாராட்டவே வேண்டும். இக்கூட்டு வழிபாட்டுப் பாடல்கள் என்னும் நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ள விடும்பும் சமய அபிவிருத்திச் சங்கங்கள் திரு. மு கா. கணபதிப்பிள்ளை தலைவர் சைவசமய அபிவிருத்திமன்றம் பிளக்பூல்-நுவரெலியாஎன்றவிலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். இ. நா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வசன வாக்குரிமை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குத்தடையாக இருக்கும் கொள்கைகளிற் கவனம் செலுத்தாது தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, உறவு முறைகளைக் கவனத்திற்கொண்டு கட்சிகளில் ஈடுபடும் இயல்பு மாறவேண்டும். அடுத்த பெருங்குறைபாடு வாக்காளர் தமது அதிகாரத்தை (வாக்குரிமையை) குடிக்கும், பணத்திற்கும், இனவாதத்திற்கும்கொடுத்துவிடும் பொறுப்பற்ற தன்மை.

இந்நிலை திருத்தமடைந்திருக்கிறது என்று யாராவது நம்பினுல் அது பெருந்தவறு. சென்ற கொழும்பு முனிசிப்பல் தேர்தலின் போது அவதானித்த கல்விமான்கள் பலர் 40 வருட சர்வசன வாக்குரிமையில் கொழும்பு மாநகரசபை மக்களே திருந்தவில்லையென்பதைக் கண்டு வெளியிடத்து நிலையைபற்றி எண்ணியெண்ணி அங்கலாய்த்தனர். இது கடந்த டிசம்பர் நிகழ்ச்சிதானே? வேலையின்மை, வறுமை, அரசியல் அறிவின்மைஇவற்ருல் வாழ்க்கையில் விரக்தியுற்றுநிற்கும் ஏழைகளின் வாழ்க்கை சீரடையாவிடின் எமதாட்சிமுறை வெறும்கேலிக்கூத்தாகிவிடுதல் கண்கூடு. இவ்விரக்தியை விரட்ட முதலில் ஆவனசெய்தல் வேண்டும்.

இங்கு கடைசியில் குறிப்பிடுவதாயினும் மிகவும் பிரதான விஷயம். ஈழத்தமிழர் அரசியல்நிலை. இன்று ஈழத்தில் நிலவும் ஆட்சிமுறையைக் கட்சியரசியல் முறையெனக்கூறல் பொருந்தும் அதாவது தேர்தலிற் பெரும்பான்மை பெறும் கட்சி, ஆட்சியதிகாரத்தைக் கைக்கொண்டு நடாத்தும் முறையென்பதாகும். அரசியற் கட்சியென்ருல் அது ஆட்சியதிகாரத்திற்காகப் போட்டியிடுவது என்று பொருள். தமிழினப்பெருங் கட்சியாய் விளங்கும் தமிழரசுக்கட்சி இதைஒப்புக்கொள்வதில்லை. அரசியலில் எதைச் சாதிக்கவேண்டுமாயினும் ஆட்சியதிகாரததைக் கொண்டேசெய்யவேண்டியுள்ளது. யார் ஆட்சிபுரிந்தாலும் 'நாம் புறம்பு' என்னுங் கொள்கையுடன்காலங் கடத்துவதால் இரு கட்சியணிகளுமே சந்தேகக்கண்ணுடன் பார்க்கின்றன. இச்சந்தேகப்பார்வை இக்கட்சி சுயேட்சையங்கத்தினர் நிலைக்குத் தாழ்த்திவிடுகிறது.

இன்ஞெரு கோணத்திற் பார்ப்போம். எமது நாட்டில் இப்போ நிலவும் ஒற்றையாட்சி அரசியலமைப்பை மாற்றுவதற்கும், பெடரல் அரசியலமைப்பை ஏற்படுத்துவதற்கும் அவ்வாறேற்பட்டால் ஆட்சியை நிர்வகிப்பதற்கும் தமிழினக் கட்சியான பெடரல் (சமஷ்டி) கட்சி தனித்துக் கருமமாற்ற முடியுமா? இல்லவேயில்லை. இலங்கையிலுள்ள இரு கட்சியணிகளுடனும் நெருங்கிய தொடர்பு தேவை.

# வீர சைவர் யார்?

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

போக மற்றக்காலங்களில் ஊரில் யாசஞ்செய்துகாலங் கழிப்பதோடு மாரியம்மன் கோவில், பிடாரிகோவில்களுக்குப் பூசகராயுமிருப்பர் அவர்களுக்குள்ளே இலிங்கதாரிகளும் வேருய் இருந்தனர். அவர்கள் வலைஞர் முதலிய சாதியாருக்குக் குருக்கள்மாராவார். இவ் இலிங்கதாரிகள் கன்னடர். அவர்கள் யாழ்ப்பாணத்தரசரிடம் படைத்தொழிலில் அமர்ந்திருந்தவர்கள். பிற்காலத்தில் கதியின்றிஆண்டிகளோடு கலந்து ஆண்டிகளையும் இலிங்கதாரிகளாக்கி அபேதமாயினர்'' எனக்கூறுகின்றது.

திரு. முத்துத்தம்பி அவர்கள் காங்கேயன் என்னும் தளபதி வசித்த இடம் காங்கேசன்துறை. மகாவிட்டன் என்னும் தளபதி வசித்த இடம் மாவிட்டபுரம் எனக் கருதுபவர். இவரைக் ''கௌமுதி'' ஆசிரியர் ''தம் மனப்போக்கையே தக்க ஆதாரமெனக் கதை புனைந்தவர்'' எனக் கூறுகின்ருர் ஆகையால் இவர் கூறும் 'ஆண்டிகள்' இவர்காலத்தில் இவர் கண்ட சில ஆண்டிகளைக் குறிக்குமேயன்றி முழுப் பண்டார குலத்தையும் குறிக்காது என்பதே எனது கருத்து.

### பண்டாரங்களும் இலிங்கதாரிகளும்

''பண்டைய திருத்தம்பலேச்சுரத்தில் குடியேறியிருந்த மக்கள் பெரும்பாலும் தபஸ்விகளேயாவர். அவர்களே பின் தபசி-தவசி என்று வழங்கப்பட்டுவந்து இப்போது பண்டாரங்கள் எனப்படுகின்றனர். தம்பலேச்சுரம், தலம், மூர்த்தி, தீர்த்தம் என்னும் மூன்றிலும் விசேஷித்திருந்தமையின் இந்து சமயத்தவர்க்குச் சிறந்த பிதிர்க்கடன் கழிக்குமிடமால் அமைந்தது. அப்பிதிர்க்கடன்களை இயற்றுங் குருமாராகவே அப்பண்டாரங்கள் இருந்தனர். இன்று வேதாரணியம் பண்டாரங்களே (சைவக்குருமாரெனப் படுவோர்) சைவ சமயத்தவரின் அந்தியேட்டி முதலிய பிதிர்க்கடன்களைப்புரிகின்றனர்'' என சிவ. திரு. நவரத்தினக் குருக்களால் எழுதப்பட்டு சிவ. திரு. ஐயம்பிள்ளைக் குருக்களின் ஆசீர்வாதத்தோடு 1952-ம் ஆண்டில் வெளிவந்த ''கீரிமலை வரலாறு'' என்னும் நூல் கூறுகின்றது.

கீரிமலைப்பகுதியில்வாழ்ந்த தபசிகளாம் பண்டாரங்களுடன்கலந்து அபேதமாயின. கன்னட இலிங்கதாரிகள் தபசிகள் செய்துவந்த பிதிர்கடன்களைத்தாமும் செய்திருத்தல்வேண்டும். காங்கேசன்துறைப்பகுதியில் வாழ்ந்த குருகுலமக்கள் இவர்களை பிதிர்க்கடன் புரியும் குருமாராக ஏற்று இவர்களைக்கொண்டு பிதிர்க்கடன்களைச் செய்வித்தனர். இன்னும் காங்கேசன்துறைப் பகுதிகளில் வாழும் குருகுல மக்கள் இலிங்கதாரிகளைக் கொண்டே சவக்கிரிகை அந்தியேட்டி முதலிய கிரிகைகளைச் செய்விக்கின்றனர். திரு. முத்துத்தம்பி அவர்கள் வலைஞர் எனக் கூறுவது குருகுலமக்களையேயாகும், குருகுலமக்களில் சிலர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருப்பது உண்மையே.

குருகுலமக்கள் வீரசைவ நெறியில்நின்று இலிங்கதாரிகளைக் குருமாராகக் கொண்டனர் என்பதும் அறியற்பாலது.

# புது யுகம்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியில் லெனின் தன் தாயகம் வந்து சேர்ந்தார். ரஷ்யாவுக்கு லெனினது வருகை, புரட்சிக்கும் போல்ஷ்விக் கட்சிக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. லெனின் தனது அயரா சிந்தனையாற்றலாலும், வெல்லற்கரிய உள்ள உரத்தினுலும் ஸ்தாபன அமைப்புத் திறனுலும் பாட்டாளி வர்க்கப்புரட்சி என்ற இலட்சியத்திற்கு மக்களை இட்டுச் சென்ருர். அவரது தலைமையின்கீழ் உலகில் முதல் முதலாக ரஷ்யாவில் தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒரு சோஷலிசப்புரட்சியைத் தோற்றுவித்தார்கள்.

லெனின் முதல்சோவியத் பிரதமரானுர். புதிய நாட்டின் தலைவர் என்ற முறையில் அவர் சோஷலிசத்தைக் கட்டுவதற்காக, சோவியத் மக்களை ஒன்று திரட்டினுர்.

லெனின்மிகச் சிறந்த தனிமனிதப் பண்பாடுகளைக் கொண்டவர். மிகுந்த அடக்கமும் எளிமையும் வாய்ந்தவர். தன் தோழர்களைப் பற்றிச் சிந்திப்பவர். மக்களை நேசித்தவர். மிகவும் நேர்மையானவர் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக்கொண்டது ஒரு நேர்மையான இலட்சியத்திற்காகத்தான் என்பதை அவர் நன்கு அறிவார்.

லெனின் ஒரு மெய்யான சித்தாந்தியும் மார்க்ஸ் ஏங்கெல்ஸ் கோட்பாடுகளைச் செழுமைப்படுத்தியவருமாவார். அவரது நூல்களில் அவர் மார்க்சியத்தை வளர்ச்சியுறச் செய்தார். அதை நடைமுறைக்கு ஒவ்வும் வகையில் ஸ்தூலமாக்கினுர் அதை வளப்படுத்தினுர். மார்க்சியத்தின் புரட்சிகரச் சாரத்தினின்றும் திரிபுகளையும் வழுவல்களையும், திருத்தங்களையும் அவர் எதிர்த்துப் போராடினுர். அதே போது, வாழ்வினின்றும் தனிப்பட்ட வறட்டுச் சூத்திரர்களையும் கொள்கைகளையும் கொண்ட ஒன்ருக இல்லாமல் ஓர் உயிரூட்டமுள்ள போதனையாக அவர் மார்க்சியத்தைக் கருதினுர். மார்க்சீயம் என்பது ஒரு வறட்டு கோட்பாடு அல்ல அது செயல்முறைக்கான ஒரு வழிகாட்டியே என்று லெனின் சதா வலியுறுத்தி வந்தார்.

ஏற்கனவே நீண்ட நாட்கள் நாட்டைவிட்டு வெளியேறியிருந்தாலும், 1918-ல் எதிர்ப்புரட்சிவாதிகள் அவருக்கிழைத்த காயங்களினுலும் பாதிக்கப்பட்டிருந்த அவரது உடல்நலம் அவரது அயரா உழைப்பின் காரணமாக மேலும் மோசமாயிற்று.

1924 ஜனவரி 21ல் லெனின் மரணமடைந்தார். அவரது மரணம்பற்றி ஆய்வு நடத்திய வைத்தியர்கள், மிதமிஞ்சிய மூளை வேலையினுல் மூளையில் ரத்த நாளங்கள் இறுகிவிட்டன என்று கூறினுர்கள். இதனுல் மூளையிலுள்ள ரத்தநாளங்கள் வெடித்து மரணம் ஏற்பட்டது.

## இமைகொட்டா அழகி

1938.ஆம் ஆண்டில் நியூயார்க்கைச் சேர்ந்த மேரின் கார்டிஸ் என்ற நங்கை தொடர்ந்து இருபத்து நான்கு மணிநேரம் வரை தன் விழிகளை அசைக்காமலும், இமை கொட்டாமலும் இருந்த ஓர் அரிய பெரிய சாதனைக்காக ஆயிரம் டாலர் பரிசைத் தட்டிக் கொண்டாளாம்.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிரிப்போயா, போயா 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
குல விளக்கு

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Prepoya, Poya 4 shows
THEY CAME TO
ROBLASV! GAS
(colour)


REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya, pre poya 4 shows
James Garner
Jason Robards
in
HOUR OF THE GUN
(Panavision -Color)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
ரவிச்சந்திரன் - ராஜ்ஸ்ரீ
நடித்த
நீயும் நானும்

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மனேகர், நிர்மலா, ஓ. ஏ. கே. தேவர்
ஹரி கிருஷ்ணன்
மற்றும் பலர் நடித்த
தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, கே ஆர் விஜயா
நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி
நடித்த
திருடன்

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்

சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ.வி. எம். ராஜன் மனேரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்
தில்லாஞ மோகனும்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கிங்ஸ்லி பிளாஸா ஸ்ரீகிருஷ்ணு
(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணநிதி
நடித்த
கே. எஸ், கோபாலகிருஷ்ணனின்
சுபதினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பலோ 13 பயணமும் தூமகேது தோற்றமும்

அப்பலோ 13 விண்வெளி வீரர்கள் பத்திரமாகப் பூமிக்கு திரும்பி வந்துவிடவேண்டுமென்று உலகம் முழுவதும் பிரார்த்தித்தது. அவர்கள் திசைதவறி குறிப்பிட்ட இடத்திற்குமாருக வேறு எங்கேயாவது விழுந்துவிடும் பட்சத்தில் நாங்கள் அவர்களைப் பொறுக்கி எடுக்கத்தயாராக இருக்கிறேம் என்று பிரிட்டிஷ் கப்பல்களும் பிரெஞ்சு கப்பல்களும் கடல்களில் காவல் நின்றன. அவர்களுக்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொள்ள நாமும் உஷாராயிருக்கிறேம் என்றுரஷ்யர்கள் கூடஉதவிக்கு முன் வந்தார்கள்.

இப்படி உலகம் முழுவதுமே அந்த மூன்று அமெரிக்கர்மீதும் அக்கறையும் அனுதாபமும் காட்டியது எதற்காக?

அப்பலோ சந்திர பிரயாணம் மனிதனின் கூட்டு முயற்சி என்பதனுலல்லவா? ஒருவீட்டில் வசிக்கும் குடும்பத்தவர்களிடையே அடிக்கடி பூசலும் பிணக்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கலாம் அடுத்த வீட்டுக்காரர் இவர்களோடு சண்டைக்குவர எத்தனித்தால் இவர்கள் தங்கள் உட்பகையை மறந்து ஒற்றுமைப்பட்டு விடுகிருர்கள். ஒரு நாட்டவர்கள் தங்களுக்குள் சண்டைபிடித்துக் கொண்டிருக்கலாம். ஆனுல் மாற்ருன் படையெடுத்து வரும்போது எல்லோரும் ஒன்ருகி விடுகிருர்கள்.

கூடிவாழும் இந்த ஒற்றுமை உணர்ச்சி மனிதவர்க்கத்துக்குள் தொல்காலம் தொட்டு இயங்கிவருகிறது.

அப்பலோ 13 பயணம் பாதியில் தடைப்பட்டது சந்திரனும் விண்வெளியும் நமக்கு விட்ட சவால் என்று உலகம் முழுவதும் கருதியது. எனவே அந்தச்சவாலை ஏற்றுக்கொண்டு அப்பலோ வீரர்களை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என்று நினைத்து ஒற்றுமைப்பட்டுக் கொண்டது. அந்த ஒரே நினைவில் போட்டிகளும் பொருமைகளும் பகைகளும் மறக்கப்பட்டுவிட்டன. 'ஒன்றே குலம், ஒருவனே தெய்வம்' என்ற விசாலமான தத்துவம் பிறந்தது. நாமெல்லாம் ஒரேகுடும்பம் என்ற எண்ணம் உண்டாகியது. இப்படி உலகம் முழுவதும் ஒரேதியானத்தில் ஈடுபட்டிருந்ததன் பலனுக விண்வெளி வீரர்கள் எவ்வித இடையூறுமின்றிபத்திரமாக பூமிக்குத்திரும்பினுர்கள்.

இந்த 'ஒரே குடும்ப' உணர்ச்சி இப்படிஓர்ஆபத்து வரும்போதுதான் உண்டாக வேண்டுமா? சதாகாலமும் உலகத்தில் நிலவப்படாதா?

சந்திரனும் விண்வெளியும் விட்ட சவாலைவிட இந்த மண்வெளியிலேயே எத்தனையோ சவால்கள்இருக்கின்றன. பஞ்சமும் பிணியும் பயமும் உலகத்து மக்கள் அனைவரையும் வாட்டிக் கொண்டேயிருக்கின்றன. இவற்றை அறவே போக்கிடுவதற்கு எல்லா உலகமும் சகோதர உணர்ச்சியுடன் ஒன்றுபடமுடியாதா? 'ஒன்றே உலகம்' என்றலட்சியம் என்றுமே எட்டாத கனியாய்இருக்கவேண்டுமா?

ஃ

இது ஒரு பக்கத்திலிருக்க அப்பலோ-13 விண்வெளிக் கலத்துக்கு உண்மையில் என்னநேர்ந்தது? விண்வெளியில் மிதக்கும் கற்கள் மோதினதென்கிருர்கள், பாட்டரி சமைந்துவிட்டதென்கிருர்கள், கரியமில வாயு புகுந்துவிட்டதென்கிருர்கள். ஹூஸ்டன் விண்

(16-ம் பக்கம் பார்க்க)

## திருமண அழைப்பு

பாலேந்திரா — பவானி

மணமகன்: வீரகத்திப்பிள்ளை ராஜரட்னம் பாலேந்திரா (வழக்கறிஞர் & நொத்தாரிசு) தொண்டமானுறு

மணமகள்: பவானி சின்மயானந்தகுரு, வல்வெட்டித்துறை.

இடம்: செல்வச்சந்நிதி கோவில், தொண்டமானுறு.

தேதி: ஏப்ரில் 23-ந் தேதி (சித்திரை 10)

நேரம்: இரவு 10-30 தொடக்கம் 12-00 வரை.

இத்திருமணத்திற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு உறவினர்களையும் நண்பர்களையும் மணமக்களின் பெற்ருேர் அன்புடன் அழைக்கின்றனர்.

2236

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் மூன்று பரப்புக் காணியும் மேல்வீடும் ஒரு லட்சத்துக்கு மேல் பெறுமதியானது.

ஆ. ச. நடராசா,
வழக்கறிஞர்,
6, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

2233

இன்று

# சித்திரைப் பூரணை

திருமதி மங்கையர்க்கரசி லோகேஸ்வரன் பி.ஏ.

சித்திரை மாதத்தில் வரும் பூரணைதினம் இந்துக்களால் விசேடமாகக் கொண்டாடப்படும் தினங்களிலொன்ருகும். பூரணை தினங்களில் மறைந்துபோன தாயரை நினைந்து விரதமனுஷ்டிப்பது வழக்கம். பூரணை தினங்களில் சித்திரைப் பூரணை விசேடம் பெறுவது அதன் தன்மை நோக்கியே. மானிடர்க்கு ஓராண்டு நிறைவது தேவர்க்கு ஒரு நாளின் நிறைவாகக் கருதப்படுகிறது. ஒரு நாளின் மதியப் பொழுதாகச் சித்திரை மாதம் தேவர்கட்கு அமைந்துள்ளது. மதிய வேளையும் சந்திரன் சேரும் காலமுமான இப்பூரணை விசேடமானது. இது சித்திரை மாதச் சித்திரை நட்சத்திரத்தன்று அமையும். அன்று சந்திரன் கிரணங்களை வலிமையுடையதாகப் பூமிக்கு அளிக்கிறது.

சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் சித்திர புத்திரன் என்பவரை இறைவன் படைத்தான். உலகிலுள்ள சீவராசிகளதும் பிரமா, விஷ்ணு என்னும் தெய்வங்களதும் பாவ, புண்ணியங்களை விபரமாக எழுதும்படி பணித்தான்! இவருக்கு உதவியாகப் பல கிங்கரர் பணியாற்ற, சித்திரகுப்தன் ஆன்மாக்களின் பாவ, புண்ணியங்களைத் தினம் எழுதிவரலாஞன். சித்திரை நட்சத்திரத்தில் உதித்தமையாலும், ஆன்மாக்கள் பாபவிமோசனம் வேண்டி இந்நாளில் விரதமனுஷ்டிப்பதாலும் இவ்விரதம் 'சித்திரகுப்த விரதம்' என்றும் பெயர் பெற்றுள்ளது.

தவிர இத்தினத்தில் இந்திரன் விமானத்திலிருந்து இறங்கி, பூவுலகில் சிவனைக் குறித்துப் பூசனை செய்தான். அவனது நேர்த்திக்கு அருளவந்த இறைவன் பாபவிமோசனம் அளித்தவேளை, இந்திரன் இறைவனைப் பூசனை செய்ய வரமருளவேண்டினன். அப்பொழுது இறைவன் மாதங்களில் சிறந்த சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் திதிகளுள் சிறந்த பூரணை திதி கூடுகிறது. அவ்வமயம் வந்து நம்மைப் பூசிப் பின் வருட முழுதும் பூசைசெய்த பலன் பெறலாம். சுவர்க்க பதவியும் 'சாயுச்சி நிலையுமடைவாய்' எனத் திருவாய் மலர்ந்தருளினுர். அன்று முதல் பக்தர் இட்ட சித்திகளையடைய வேண்டி இவ்விரதம் மேற்கொள்ளத் தொடங்கினர்.

முன்பொரு சமயம் அமராவதிப் பிராட்டியார் பல தான தருமங்கள் செய்து கொண்டும், கடவுளரை வணங்கியும் வந்தார். ஆயின் சித்திர புத்திரனை நினைக்கத் தவறிய குற்றத்திற்கு சித்திர புத்திரன் அவரின் உயிரைக் கவர முயன்ருர். அம்மையார் செய்த தான தருமத்தின் காரணமாக உயிரைக் கவரமுடியாது போக, தானேநேரில்சென்று பசுமாட்டின் கொம்பிலிருந்து அவரைக் குத்திக் கொன்ருர் என்பது கதை. அம்மையார் சித்திரபுத்திரனை நினைக்க மறந்த குற்றத்தால் உயிரிழந்தாராத

(16-ம் பக்கம் பார்க்க)

# மோதிரத்தில் மறைந்த கடவுள்!

அக்பர் சக்கரவர்த்தி ஒருசமயம் தம் மந்திரி பீர்பாலைப் பார்த்து ''பீர்பால் கடவுள் எங்கும் இருக்கிருர் என்று அடிக்கடி சொல்கிறீர்; இல்லையா'' என்று கேட்டார்.

''ஆமாம் பாதுஷா, கடவுள் எங்குமே இருக்கிருர். இதில் சந்தேகமே இல்லை'' என்று பதிலளித்தார் பீர்பால்.

அக்பர் தம் விரலில் இருந்த வைர மோதிரத்தைக் கழற்றினுர். ''இதில் கடவுள் இருக்கிருரா?'' என்று கேட்டார்.

''நிச்சயமாய் இருக்கின்ருர்.''

''அப்படியா? இதில் அவரை எனக்குக் காட்டுவீரா?''

பீர்பாலுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை கொஞ்சம் தவணை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போனுர்.

சில நாளைக்கெல்லாம் பீர்பால் வீட்டுக்கு வாலிபப் பரதேசி ஒருவர் பிச்சைக்கு வந்தார். அவரிடம் இந்த விஷயத்தைப் பீர்பால் சொன்னுர்.

''இவ்வளவு தானே கவலை வேண்டாம். அரசருக்கு நான் பதில் சொல்கிறேன்'' என்ருர் பரதேசி.

அவரை அக்பரிடம் அழைத்துச் சென்ருர் பீர்பால். ''உங்கள் கேள்விகளுக்கு இவர் பதில் சொல்லுவார்'' என்ருர்.

''அப்படியா சரி பையா கடவுள் எங்கும் இருக்கிருர் என்ருல், இந்த மோதிரத்தில் அவரைக் காட்டுவாயா?'' என்ருர் அக்பர்.

''காட்டுகிறேன் அரசே. முதலில் எனக்குக் கொஞ்சம் தயிர் கொண்டுவரச் சொல்லுங்கள் தாகமாயிருக்கிறது?'' என்ருர் பரதேசி. ஒரு கிண்ணத்தில் தயிர்வந்தது.'' இதில் வெண்ணெய் இல்லையே! எனக்கு இது பிடிக்காது'' என்ருர் பரதேசி.

''நல்ல தயிர் இது. வெண்ணெய் இதில் நிறைய இருக்கிறது'' என்ருர் அக்பர்.

''அது எப்படி உங்களுக்குத் தெரியும்? தயிருக்குள் இருக்கும் வெண்ணெயை எனக்குக் காட்டுவீர்களா?'' என்ருர் பரதேசி.

அக்பர் சிரித்தார். ''பையா கடைந்தால் தான் வெண்ணெய் வரும் இது தெரியாதா?'' என்ருர்.

''தெரியும் அரசே! உங்கள் கேள்விக்குத்தான் பதில் சொன்னேன். கடவுள் எங்கும் இருக்கிருர். உங்கள் ஊனக் கண்ணுல் அவரைக் காணமுடியாது. ஐம்புலப் போர்வையை அகற்றிக் கடைந்தெடுத்து அவரை ஞானக்கண்ணுல் காணவேண்டும்'' என்ருர் பரதேசி.

—சுவாமி சிவானந்தர்.

## விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரில் கட்டிடம் கட்டுவதற்கானகாணித் துண்டுகள். ஈச்சமட்டை பீச் ரோட்டில், தண்ணீர், மின்சார வசதிகளுடன் கூடியவை. ஒவ்வொன்றும் இரண்டு பரப்புகள். ஒரு பரப்பு ஐயாயிரம் ரூபாய். விபரங்களுக்கு பிலிப்ஸ்,26, சார்ல்ஸ் டிரைவ், கொள்ளுப்பிட்டி. 2039

## விற்பனைக்கு / வாடகைக்கு

வைத்தியசாலைக்கு வர்த்தகக் காரியாலயத்திற்கு ஏற்ற பங்களா, யாழ்ப்பாணம் மெயின் வீதிக்கு அண்மையில் விளம்பர இல: 2044, மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். 2044

## கல்வி

வெளி மாணவர்களுக்கான பாமசிஸ்ற் பரீட்சைக்கு (External Pharmacist examination). விபரங்களுக்கு விக்னேஸ்வரன், 7, பழம்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2052

## தேவை

அனுபவமுள்ள சேல்ஸ்மென் தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும். லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி. 2107

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரி- சங்கத்தானையில் புகையிரத நிலையம் டச் ரோட் இரண்டுக்கும் மத்தியில் மூன்று பக்கங்களும் ஒழுங்கைகளால் சூழப்பட்ட நல்ல பிரயோசனங்கள் உள்ள 5 1/2 பரப்பு வீட்டு நிலம். முத்துவேலு, கலாபவனம், டச் ரோட், சாவகச்சேரி. 2050

### விற்பனைக்கு

காணி

சண்டிருப்பாய் தெற்கு ஆங்கில வித்தியாலயம் அருகில், அரசினர் வைத்தியசாலை முன்னுல் பிரதான வீதி, பஸ், மின்சார வசதி 7 பரப்பு 4 அறைகள் வீடு ரூபா 25,000க்கு மேல். வீடு காணி 3 3/4 பரப்பு அதே வீடு கிணற்றுப் பங்கு ரூபா 15,000க்கு மேல். 3 1/4 பரப்பு கிணற்றுப் பங்கு ரோட்டுக்கு அருகாமையில் ரூபா 10,000. இரண்டு 4 பரப்புத் துண்டுகள் ரோட்டுப் பாதை ரூபா 8,000 வீதம் அல்லது 6 பரப்புக் கிணற்றுப் பங்கு கக்கூஸ், ரோட்டோடு ரூபா 12,000க்குமேல், 10 பரப்பு அதே வீடு ரூபா 30,000. 5 பரப்பு வீடு ரூபா 20,000. ஐந்து பரப்பு நிலம் ரோட்டோடு ரூபா 10,000. தொடர்புகொள்ளவும்: டாக்டர் திருவிளங்கம், இல: 471, தெமட்டக்கொடை ரோட், கொழும்பு-9. 2041

யாழ்ப்பாண இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கையில் பரமேஸ்வராக் கல்லூரிக்கண்மையில் நிலப் பரப்பு ஒன்று விசாலங்கொண்ட காணியில் சகல வசதிகளுமமைந்த புதுக் கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் விலாசம்: பொ. நா. நடராசா, நொத்தாரிசு, 10, இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். 2045

காணி

பளை- டி. ஆர். ஓ. கந்தோர் அமைந்துள்ள கட்டிடமும், அதைச்சேர்ந்தகாணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும் S. சபாரத்தினம், பச்சிலைப் பள்ளி யூனியன், பளை. 2043

காணிகள்

சாவகச்சேரியில் பருத்தித்துறைவீதி முதலாம் கட்டையடி 23 பரப்பு. டச் வீதி 5 பரப்பு. டச்வீதி இரண்டாம் கட்டையடி 3 பரப்பு. மீசாலை 6 பரப்பு. தொடர்புகொள்க, செல்வேந்திரன், டச்வீதி, சாவகச்சேரி அல்லது பைலட் பாலச்சந்திரன் மீசாலை. 2049

வயல்

கிளிநொச்சி 7-ம் வாய்க்காலில் 5 ஏக்கர் வயல் இருபோகமும் விளையக்கூடியது. ஜான்சன், பழைய பொலிஸ் நிலையம், ஆனைக்கோட்டை. 2053

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிமொழிகள்



இன்னுசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்.

0 0 0

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ்சினம்.

0 0 0

உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

0 0 0

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தொழித்து விடின்.

-திருவள்ளுவர்.




# "கவிதையின் வெற்றி எதில் தங்கியிருக்கிறது?"

(நமது நிருபர்)

"ஒரு கவிதையின் சிறப்புக்கு அதையெழுதிய கவிஞன் கையாண்ட சொற்களே பெருஞ்சிறப்பைக் கொடுக்கிறது. பொருளுக்கு மட்டுங் கவிஞன் முக்கியத்துவம் கொடுத்தால் அந்தக் கவிதை பெரும்பாலும் தோல்வியடைந்துவிடுகிறது. தான் கையாளும் சொற்களின் சிறப்பினாலே, தான் பாட எடுத்துக்கொண்ட விடயத்தைப் பூரணமாக கவிஞன் கூறிவிட்டான் என்றால் அந்தக் கவிதை வெற்றியை அடைகிறது. ஆகவே ஒரு கவிஞன் தான் கையாளும் சொற்களிலேதான் முக்கிய கவனஞ்செலுத்த வேண்டும்.''

இவ்வாறு வல்வெட்டித்துறை கம்பர்மலை பாரதி சனசமூக நிலைய ஆண்டு விழாவில் சிறப்புச்சொற்பொழிவாளராகக் கலந்துகொண்ட கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ஈழத்துக் கவிஞர்கள் சிறப்புற்று மிளிர்வதற்குக் காரணம் அவர்களது பக்தியுணர்வும் ஆழ்ந்த கல்வியறிவுமே காரணமாகுமென்றார். ஈழத்து இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளின் சிறப்புக்களைக் கூறவந்த கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை, பண்டிதர் சச்சிதானந்தன், அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா, தில்லைச்சிவன், கவிஞர் வி கந்தவனம் போன்றோரின் கவிதைகளின் நயத்தை எடுத்துரைத்து தமிழக நூல்களுக்கு ஆதரவு கொடுப்பதுபோலவே ஈழத்து நூல்களுக்கும் ஆதரவு நல்கும்படி கேட்டுக்கொண்டார்,

ஆசிரியர் இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் இறுதியில் இன்னிசைக்கச்சேரியும் நடைபெற்றது.

## டிரிபியூன்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்து தெளிவாகிறது. ஏரிக்கரைப் பத்திரிகைகளோ அல்லது 'ரைம்ஸ்' பத்திரிகைகளோ கூட்டணிக்கு ஆதரவளிப்பதென்பது நம்பமுடியாததும், அவற்றின் இயற்கைக்கு மாறானதுமாகும்.

இம்முறை தேர்தலில் காணும் மற்றுமொருகுறிப்பிடத்தக்க அம்சம் ஹேமா பஸநாயக்காவையும், ஆர். ஜி. சேனநாயக்காவின் சிங்களமகாசனக் கட்சியையும் தவிர மற்றைய பிரதான கட்சிகள் வகுப்புவாதத்தை ஒதுக்கியுள்ளமையேயாகும். சன்-தவஸபத்திரிகைப்பிரிவு மட்டுமே வகுப்புவாதத்தைத்தூண்டி விடத்தக்க முறையில் நடந்துகொள்கின்றன. தமிழர்களை மசாலவடையெனக் கூறிக்கேலி செய்யும் கூட்டணித் தலைவர்கள் இம்முறை அதையெல்லாம் விடுத்து நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள். எனவே அரசாங்கம் அமைக்க வேண்டுமானால் சமஷ்டிக்கட்சியின் ஆதரவு தேவையென்பதை கூட்டணியினர் உணர்ந்துள்ளார்கள். நாட்டின் இருபெரும் அரசியல் கட்சிகளினது ஒரு சில தலைவர்களே தங்கள் பெரும்பான்மை ஸ்தாபனங்களைப் பெற்று வெற்றியீட்டுவார்கள் எனக் குறிப்பிடுகிறார்கள். அதேவேளையில் தமதுரிமையையளிக்கும் எத்தக் கட்சியுடனும் ஒத்துழைக்கத் தயார் என்று கூறும் சமஷ்டியின் நிலை வகுப்புவாத இயக்கத்தை தோற்றுவிக்க தடை செய்வதாகவுள்ளது.

—டிரிபியூன்-12-4-70

## இன்று

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் பௌர்ணமி தினமான இன்று மாலை, சுண்டிக்குளி யாழ் நாடகக் கலாமன்றத்தினரின் 'அடங்காப் பிடாரி' நகைச்சுவை நாடகமும்மெல்லிசைநிகழ்ச்சியும் நடைபெறும்.

## சித்திரைப் பூரணை

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

லின் அன்று முதல் சித்திரபுத்திரனர் மகிமை பெற்றவரானர். உயிரை இழக்கவோ, பாவத்தைப் பெருக்கவோ விரும்பாதோர் சித்திரபுத்திர நாயனுரைக் குறித்து விரதமிருந்து தீர்த்தமாடி வழிபட்டுவரலாயினர். ஆலயங்களில் அன்னதானம் செய்வது வழக்கிலுள்ளது. ஒவ்வொரு வீடுகளிலும் சிறிதுசிறிது அரிசி சேர்த்து கோவிலில் கஞ்சி காய்ச்சி 'சித்திரைக்கஞ்சி' என அருந்துவர். சுற்றத்தார் சினேகிதர்க்கும் அளித்து அவர்களது பாவ புண்ணியங்களையும் சித்திரபுத்திரனது பேரேட்டில் பதிவாக்கும்பேற்றினை எய்துவர். இகபர சுகத்தை யாவரும் பெறவேண்டின்சித்திரா பூரணை விரதத்தை அனுஷ்டிப்போமாக!

## அப்பலோ

(15ம்பககத் தொடர்ச்சி)

வெளி ஆராய்ச்சி தளத்தில் விரிவான விசாரணைகள் நடந்த பின்புதான் உண்மை வெளிப்படும். அப்படியும் அந்த இரகசியத்தை உலகமறிய பகிரங்கப்படுத்துவார்களோ என்பது சந்தேகமே.

நண்பர் ஒருவர் ஓர் ஆச்சரியமானயோசனையை வெளியிடுகிருர். வானத்தில்தோன்றிய தூமகேதுவுக்கும் அப்பலோ பயணம் தடைப்பட்டதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்பது அவருடைய சந்தேகம். ஒரு வருடத்துக்கு முந்தியே இப்பயணம் திட்டமிடப்பட்டபோது தூமகேது தோன்றும் என்று எவருக்கும் தெரியாதெனவும், சூரியமண்டலநியதிகளுக்கு அப்பாற்பட்ட தூமகேதுவினல் வீண்வெளியில் எதிர்பாராத கோளாறு ஏற்பட்டிருக்கலாம் எனவும் அவர் கூறுகிருர்.

இதுஎப்படியாயினும் நேர்கிழக்கில் தோன்றிய தூமகேது மற்ற நட்சத்திரங்கள், கிரகங்களைப் போல கிழக்கு மேற்காகப் போகாமல் நாளுக்கு நாள் வடக்குத்திசையை நோக்கிச் சென்று இப்பொழுது ஊனக்கண்ணுக்குமறைந்துகொண்டே போகிறது.

— வழிப்போக்கன்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# "உரிமை வழங்குபவர்களுடன் ஒத்துழைக்கத் தயார்!"

—துரையப்பா

யாழ்ப்பாணம். திங்கள்

''நான் சுயேச்சையாகப் போட்டியிட்டாலும் தமிழினத்துக்கு பாதுகாப்பும் உரிமையும் வழங்கும் ஆட்சியாளருடன் சேர்ந்து ஒத்துழைப்பேன்'' என்று யாழ்ப்பாணத்தொகுயில்சுயேச்சையாளராக போட்டியிடும் திரு. அல்பிரட் துரையப்பா நேற்று யாழ்.கொன்வென்ற் வீதியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

திரு யேசுதாசன் தலைமையில் திரு துரையப்பாவை ஆதரிக்குமுகமாக இக்கூட்டம் நடந்தது.

திரு துரையப்பா மேலும் பேசுகையில், ''கடந்த இருபது ஆண்டுகாலமாக நான் மக்களுக்கு சேவையாற்றி வருகிறேன். நான் என்ன செய்தேன் மற்றவர் என்ன செய்தார்கள் என்பதுபற்றி ஆராய்ந்து உங்கள் வாக்குகளை நல்லமுறையில் பயன்படுத்துங்கள்.

யாழ். மேயர் தேர்தலில் ஒன்ருக இணைந்தவர்கள், இப்போது பொதுத்தேர்தலில் வெவ்வேருகப் பிரிந்து நின்று மோதிக்கொள்வது ஏனே? என்றும் அவர்கேட்டார்.

யாழ் மாநகரசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள் பஷீர், காதர், ராஜசூரியர், மனேகரன் உட்படமற்றும் பலர் பேசினர்.

## இசை விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,செவ்வாய்

யாழ்ப்பாணம் ரஸிகரஞ்சன சபாவின் 19-வதுஆண்டு இசைவிழா இன்றையநிகழ்ச்சிகள் 6-30-மேளம்: திரு இ எஸ் சுந்தரமூர்த்தி எம் சுப்பிரமணியம் (நாதஸ்வரம்) திரு இ எஸ் கண்ணன் இ எஸ் நடராசசுந்தரம்(தவில்) 7-45 தலைமையுரை:க தனபாலசிங்கம் 8-00 திருமதி ஜெயலட்சுமி நடராசா பாட்டு 9-15 பொன் சுந்தரலிங்கம் பாட்டு

## நீதிமன்றத்தில் கிரி சாட்சியம்

புதுடில்லி, ஏப்ரல், 20

இந்திய ஜனதிபதி திரு. வ். வி. கிரி இன்று புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்தார்.

திரு. வி. வி. கிரி இந்திய ஜனதிபதியாகத்தெரிவு செய்யப்பட்டது செல்லாது என்று தாக்கல் செய்யப்பட்ட மனு மீது சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைநடைபெற்றுவருகிறது. நீதிமன்றத்துக்கு வந்து சாட்சியமளிக்க திரு. கிரி தாமாகவே முன்வந்தார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் நீதிமன்றம் ஒன்றின் முன் தோன்றியது இதுதான் முதல்தடவையாகும். திரு. கிரி நீதிமன்றத்தினுள்ளே வரும்போது நீதிமன்றக் கட்டிடத்தினுள்ளேயும் வெளியேயும் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

## தோமஸ் பட்லே காலமானர்

### பிரபல துப்பறியும் நிபுணர்

லண்டன், ஏப். 20

பிரபல பிரிட்டிஷ்புகையிரதக் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடித்தவரான ஸ்கொட்லன்ட்யாட் துப்பறியும் நிறுவனத்தைச் சேர்ந்த பிரபல துப்பறியும்நிபுணரான தோமஸ் பட்லே இன்று காலமானர். இவருக்கு வயது 56.சென்ற வருடம் இவர் ஸ்கொட்லன்ட்யாட் துப்பறியும் நிறுவனத்திலிருந்து ஓய்வுபெற்றபொழுதும் மேற்படி புகையிரதக் கொள்ளையில் சம்பந்தப்பட்டு தலைமறைவாகியிருக்கும் ரெனல்ட் ரிஸ்கியை தேடிப்பிடிப்பதில் ஈடுபட்டிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

தங்கள் சேவையிலிருக்கும் சன்லைட் டையேர்ஸ் அன் றைகிளீனேர்ஸ் ஸ்தாபனத்தாராகிய நாங்கள்,

**30 வருட ஆண்டு விழாவை**

**வீரசிங்கம் மண்டபத்தில்**

பல கலைநிகழ்ச்சிகளுடனும், உரிமையாளரின் சுய சரிதை புத்தகவெளியீட்டு நிகழ்ச்சிகளுடனும்

**17—6—1970 புதன்கிழமை மாலை 3-30 மணி**

**தொடக்கம் இரவு 10 மணி வரை**

கொண்டாட நிச்சயித்திருப்பதை ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

கிளை ஸ்தாபனம்:
சாயி றைகிளீனேர்ஸ்,
வெலிங்டன் தியேட்டர் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசித்தொடர்பு -474

சன்லைட் டையேர்ஸ் அன்
றைகிளீனேர்ஸ்,
பஸ்நிலையப் பக்கம்,
யாழ்ப்பாணம்.
தந்தி: றைகிளீன்,
தொலைபேசி: 474.

## மரண அறிவித்தல்

### சாரதா அம்பிகாபதி காங்கேசன்

காங்கேசன் (கொழும்பு அஸ்பஸ்ரஸ் இண்டஸ்ரீஸ்) அவர்களது அன்பு மனைவியும் கரம்பன்வைத்தியர் கனகசபை தம்பதிகளின் மகளும், பரிமளபாக்கியம் வித்தியாபதி (சைவமங்கையர் கழகம், கொழும்பு), இந்திராவதி (இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), சந்திராவதி (கச்சேரி, யாழ்ப்பாணம்) திலகவதி (பெரியாஸ்பத்திரி, கொழும்பு) பாலேந்திரன் (நீர்விநியோகப்பகுதி, கொழும்பு) மகேந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஆகிய சாரதா அம்பிகாபதி காங்கேசன் (திருநெல்வேலி செங்குந்த ஆங்கில வித்தியாசாலை) ஆசிரியை காலமாகிவிட்டார். அன்னரின் ஈமக்கிரியை இன்று செவ்வாய்க்கிழமை மு. ப. .9 மணிக்கு கரம்பன் ஊர்காவற்றுறையில் நடைபெறும்.

2106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org